


கல்கி
KALKI 27.8.1972
45 காசு


for that millionaire look
Century
for 100% cotton
textiles
CENTURIZED
PRESHRUNK FABRIC
THE
CENTURY
SPG. & MFG. CO. LTD.,
BOMBAY 25 DD
Century's
Cosy-Cot
cotton SHIRTINGS
with Rich Woollen Feel
For Fashion Fabrics choose
Century Shirtings!
NPS-CM 16

கல்கி
பொருளடக்கம்



"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

பரிதாபி ஆவணி, 11 ■ ஆகஸ்டு 27, 1972

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 23-00	ரூ. 11-50
இதர நாடுகள்	ரூ. 50-00	ரூ. 25-00
இலங்கை(இலங்கைநாணயம்)	ரூ. 27-00	ரூ. 13-50

சிமெண்டைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமானால் ஏஸிஸியைக் கேளுங்கள்

ACC
the hallmark of
top-quality products

மற்றபடி பொருத்தமற்ற சுண்ணாம்புக்கல்லை, பெனிஃபிஸியேஷன் முறைமூலம், மூலதாதுப் பண்புகளை அதிகபட்சம் இருத்திக்கொண்டு, சிமெண்ட் தயாரிப்புக்குப் பொருத்தமான கச்சாப் பொருளாக மாற்றிய முதல் தயாரிப்பாளர்கள் ஏஸிஸிதான். பல்லாண்டுகளாக, ஏஸிஸி என்ஜினியர்களும், ஆராய்ச்சியாளர்களும், மற்றபடி வீணாகியிருக்கக் கூடிய உள்நாட்டுப் பொருள்களையே உபயோகித்து புதுப்புதுத் தயாரிப்புகளை முதன்முதலாக உருவாக்கி வந்துள்ளனர். என்றும் ஏஸிஸிக்கு நாமென்றாலே தனிமோகம். இந்த மோகத்தின் தூண்டுதலினால்தான் சிமெண்ட் மற்றும் கான்க்ரீட் தொழில் நுட்ப ஆராய்ச்சிக்கென, ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நிறுவியுள்ளது. இது அதன் வகையில் இந்தியாவிலேயே முதன்முதலான நிறுவனம். சிமெண்ட் மற்றும் கான்க்ரீட்டின் உபயோகங்கள் பற்றிய தொழில் நுட்ப ஆலோசனை இலவசமாக வழங்கப் படுகிறது. எனவே, சிமெண்டைப் பற்றி நீங்கள் ஏதாவது தெரிந்து கொள்ள விரும்பினால் ஏஸிஸியைக் கேளுங்கள்.

பழுப்பு போர்ட்லாந்து சிமெண்ட் ● போஸ்ஸோலானா சிமெண்ட் ● சூளை ஸ்லாக் சிமெண்ட் ● லோ ஹீட் சிமெண்ட் ● ஆயில்வெல் சிமெண்ட் ● விரைவில் இறுகும் சிமெண்ட் ● ஸில்விக்ரீட் வெள்ளை சிமெண்ட்

- ரிஃப்ரேக்டரிகள் அதாவது ஹை. அலுமினா ஃபையர்பிரிக்குகள் (சூளைச் செங்கல்கள்) மற்றும் ரிஃப்ரேக்டரி சாமான்கள்.
- சுழல்முறை உலைகள், கல் பொடிக்கும் இயந்திரங்கள், இஓடி க்ரேன்கள், பால் மற்றும் ட்யூப் மில்கள், சிமெண்ட்,ரசாயன மற்றும் இதர தொழில் துறைகளுக்கென கன்வேயர் சாதனங்கள் ஆகியவை உட்பட கனரக இயந்திரங்கள்.
- நிலக்கரி எடுத்தல்.
- மண்ணியல் ஆலோசனைப் பணிகள்.

ஏஸிஸி தி அஸோஸியேடெட் சிமெண்ட் கம்பெனிஸ் லிமிடெட்
தி சிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆஃப் இந்தியா லிட்.,

SISTA'S CMI 404 1

கல்கி
மலர் 32
இதழ் 4

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
- பாரதியார்

விலை உயர்வைத் தடுக்க உற்பத்தியைப் பெருக்கவும்

மூன்று மாதங்களாக விலைவாசிகள் உயர்ந்து கொண்டே போகும் வேகம் மக்களிடையே கலக்கத்தை உண்டாக்கியிருக்கிறது. உணவுப் பொருள்களானாலும், உற்பத்திப் பொருளானாலும் எல்லாமே, ஒன்றோடொன்று போட்டி போட்டுக்கொண்டு விலையில் உயர்கின்றன. இதனால் பாதிக்கப்படுவோர் சாதாரண மக்களும், ஒரு குறிப்பிட்ட வருமானம் மட்டுமே உள்ளவர்களும், மாதச் சம்பளம் பெறுவோரும்தான். சமீபத்தில் மக்கட் சபையில் இதுபற்றி நடந்த விவாதம் மக்களின் கவலையை ஒருவாறு பிரதிபலிப்பதாக இருந்தது.

விலைவாசி உயர்வுக்குக் காரணங்கள் என்ன? முக்கியமாகப் பலவகை வரிகளும் உற்பத்திக்குறைவும்தான். பருவ மழை இந்த ஆண்டு அநேகமாகப் பொய்த்து விட்டது என்றே கொள்ள வேண்டும். அதனால் புஞ்சை தானிய உணவுப் பொருள்களின் உற்பத்தி பாதிக்கப்பட்டு விடும் என்று பீதி தோன்றியுள்ளது. அளவுக்கு மீறி நோட்டு அச்சடித்து வழங்கும் நடவடிக்கை நின்றபாடில்லை. நாட்டில் அவசியமில்லாத துறைகளில் பரவலாகச் செலவுகள் வளர்ந்து கொண்டே போகின்றன. தேசிய உடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன்களும் பரவலாக விநியோகிக்கப்பட்டிருப்பதால் ஒருபுறம் மிதமிஞ்சிய பணப் புழக்கமும், மறுபுறம் தொழில் துறையிலும் விவசாயத் துறையிலும் உற்பத்திக் குறைவும் ஒன்றாக இணைந்து விலைவாசிகளை உயரச் செய்துள்ளன. இந்த நிலைமையை அரசாங்கமும் ஓரளவு ஒப்புக்கொண்டிருக்கிறது.


இந்த நிலையில் மக்களுடைய நலனில் அக்கறையுள்ள அரசாங்கம் செய்யக்கூடியது என்ன? உற்பத்தியை வேகமாகப் பெருக்க என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ, அதையெல்லாம் செய்ய வேண்டும். ஆனால் அரசாங்கத்தின் கோட்பாடுகளும், நடைமுறைகளும், உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதிலும், பற்றாக்குறையை நீடிக்கச் செய்வதிலும், விலை - விநியோகக் கட்டுப்பாடுகளைத் தீவிரமாக்குவதிலும்தான் முடிகின்றன.


நில உச்சவரம்பு நடவடிக்கைகளும், இவற்றை முடுக்கி விடும் தலைமைப்பீடத் தாக்கீதுகளும், விவசாயத்தில் நாம் செலுத்த வேண்டிய கவனத்தை அடியோடு மறக்கச் செய்து உரிமையைப் பாதுகாக்க வேண்டிய திசையில் திருப்பியிருக்கின்றன. நஷ்டஈடு பற்றிய கொள்கைகளும், அரசியல் சாஸனத் திருத்தங்களும் விவசாயத்தில் நம்பிக்கையுடன் முதலீடு செய்வதைக் கட்டுப்படுத்தியுள்ளன. திறமையுடன் நடத்து வரும் தொழில்களை விஸ்தரிக்கக்கூடிய சாமர்த்தியம் உள்ளவர்கள் தொழில்களை விரிவுபடுத்தக் கூடாது என்ற கட்டுப்பாடு ஒரு பக்கம்; ஏற்கனவே ஏற்படுத்தியுள்ள உச்சபட்ச உற்பத்தி இலக்குகளைக் கச்சாப் பொருள்கள் போதிய அளவு வேண்டிய போது கிடைக்காமையால் அடைய இயலாத அவல நிலை மறுபக்கம். இதற்கிடையில் விலை கட்டுப்பாடுகள், விநியோகக் கட்டுப்பாடுகள், தொழிலாளர் வேலைநிறுத்தங்கள், அமைதியின்மை முதலிய சீர்குலைவுகள். இவற்றில் அகப்பட்டுத் தவிப்பவர்கள் தொழிலதிபர்கள் மட்டுமல்ல, வியாபாரிகளும் சில்லறைக் கடைக்காரர்களும், கடைசியில் மக்களும் கூடத்தான்.

இத்தகைய பொருளாதாரச் சூழலின் தீயவிளைவுகளிலிருந்து விடுதலை பெற வேண்டுமானால் உற்பத்தியைப் பெருக்கவும், அதற்கான நம்பிக்கையையும், உற்சாகத்தையும் வளர்க்கவும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். முற்போக்கு, தீவிர முற்போக்கு என்ற வார்த்தை ஜாலங்களால் பயனில்லை. இந்த மயக்கத்திலிருந்து விடுபட்டு, காரியசித்தியாகக் கூடிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.



''பஸ்களில் கண்டக்டர்கள் தேவையில்லை'' —தமிழக அரசுக்கு நிபுணர் சிபாரிசு.


நாட்டு நலனுக்கு
ரத்த தானம்
செய்யுங்கள்
ஏழை மக்கள்
டாக்டர் கருணாநிதி


விலைவாசி உயர்வு
உதவி உதவி
மக்கள்
பெட்ரோல்
வரிகள் அதிக வரிகள்
F.H.

ராஜாஜியின் கருத்துக்கள்

இந்திய மக்களுக்குத் தேவைப்படுவது நல்ல அரசாங்கம்தான்; நிலையான அரசாங்கம் அல்ல. மக்களை அடிமை நிலைக்குத் தள்ளாமலிருக்கும் நல்ல சர்க்கார் ஏற்பட வேண்டும் என்பதே வலியுறுத்த வேண்டிய விஷயம். ஒரே சர்க்கார் நிலைத்திருக்க வேண்டும் என்று வற்புறுத்துவது பொருந்தாது. நிலைப்பட்டு விட்ட ஒரு சர்க்கார் மக்களின் ஆதார சுதந்திரங்களைப் பறித்து எடுத்தால் அது நல்ல சர்க்கார் ஆகுமா?

எந்த வெளி உதவியுமின்றி ஏதேச்சாதிகாரம் தன்னை நிலைப்படுத்திக் கொண்டுவிட முடியும். இப்படிப்பட்ட சர்க்காரை மேலும் ஸ்திரப்படுத்துவதில் மக்களை ஈடுபடுத்துவது தகாது. மாறாக, இப்படிப்பட்ட ஏதேச்சாதிகார அரசாங்கத்தைப் பொதுமக்களின் கண்டனத்துக்குரியதாக்க வேண்டும்.

பெரும்பான்மையினரின் கொடுங்கோன்மையும் அச்சுறுத்தலும் ஏற்பட்டு விட்டால் மக்களின் சுதந்திர வாழ்வே சாத்தியமில்லாமற் போகிறது. 'ஸ்திரத்தன்மை' என்கிற மாய வாதத்தை அகற்றியாக வேண்டும். 'ஸ்திரத்தன்மை' உள்ளது என்பதாலேயே ஒரு சர்க்கார் நல்லது என்று எண்ணுகிற பிரமையை நீக்கவேண்டும். நான் திரும்பத் திரும்ப இதைச் சொன்னாலும், இது கூறியது கூறல் என்ற குற்றமாகாது.

சமீபத்தில் சென்னை வந்திருந்த ஸ்ரீ ஜகஜீவன் ராம் பின்தங்கிய மக்களுக்குத் தமிழ்நாட்டு சர்க்கார் செய்துள்ள பணிகளைக் குறித்துப் பாராட்டு வாசகங்களை மழையாகப் பொழிந்திருக்கிறார். அவர் எதற்காக இப்படிப் புகழ்கிறார் என்று என்னால் அநுமானிக்க இயலவில்லை. மதுப் பழக்கத்தைக் கண்டித்துக் காங்கிரஸ் நடத்திய இயக்கத்தால் ஹரிஜனங்கள் மகத்தான நன்மை அடைந்ததாக வெள்ளைக்கார ஐ. ஸி. எஸ். அதிகாரிகள், அவர்கள் இங்கு இருந்த காலத்திலேயே சான்று கூறியிருக்கிறார்கள். மதுவிலக்கினால் ஹரிஜனங்கள் பண விஷயத்திலும், ஒழுக்கத்திலும், சமூக அந்தஸ்திலும் மேம்பாடு பெற்றது கண்கூடான உண்மை. இதெல்லாம் ஸ்ரீ ஜகஜீவன் ராமுக்கு நன்றாகத் தெரியும்.

இப்போது கள்ளு, சாராயக் கடைகளைத் தமிழக சர்க்கார் மீண்டும் திறந்து வைத்திருப்பதால் ஏழை மக்களுக்கு எத்தனை ஊறு விளைவித்துள்ளது என்பதும் அவருக்குத் தெரியும்.

ஸ்ரீ ஜகஜீவன்ராமுக்குத் தமது ஹரிஜன சமுதாயத்திடம் மிகுந்த பற்றுதல் உண்டு. எனவே அவர் தமிழ்நாட்டு அரசாங்கத்தின் மதுக் கொள்கை பற்றி வருத்தமே கொள்ள வேண்டும்; மாறாகப் பாராட்டிப் பேசியிருக்கிறார்!

செய்தி பிரமாதம்தான்; செயல்.....?

சுதந்திர வெள்ளி விழாவின்போது பிரதமர் அவர்கள் விடுத்த செய்தியின் வாசகம் அற்புதமானது. எவருமே ஆட்சேபிக்க முடியாத உயரிய லட்சியங்களை உன்னத மொழியில் கூறியிருக்கிறார். தமது சர்க்காரின் தனிக் கொள்கைகளைப் பற்றி நேரடியாகவோ மறைமுகமாகவோ ஏதும் சொல்லாமல் பொதுப்படையான தேச லட்சியத்தைக் கூறியிருக்கிறார். வறுமை ஒழிப்புக்கும், ஏற்றத் தாழ்வுகளை அகற்றுவதற்கும் அறைகூவல் விடுத்திருக்கிறார். "சகல பிரஜைகளும் தமது பூரண நிலைக்கு உயர்ந்து வளரும்படி அனைவர்க்கும் நீதியும், சம வாய்ப்பும் வழங்கப்பட வேண்டும்" என்கிறார்.

இந்த வாசகத்தைப் படிக்கும்போது அவரது அரசாங்கம் பிரத்தியட்சத்தில் செய்து வருவதை மறப்பதற்கில்லை. ஒவ்வொரு பிரஜையும் முழுமை பெற்று விளங்குகிற சுதந்திர நிலைக்கு இன்றைய தில்லி அரசு இழைத்து வரும் இடர்ப்பாட்டை நன்கு உணர்ந்து வருகிறோம். மக்களின் அடிப்படை உரிமைகளை மாற்றக் கூடாது என்று கோலக்நாத் வழக்கில் முன்பு ஸுப்ரீம் கோர்ட் தீர்மானித்திருப்பதை இப்போது மறு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதால் என்னென்ன நேருமோ என்று தனிமனித சுதந்திரத்தைப் போற்றுபவர் யாவரும் கவலை கொண்டுள்ளனர். இந்தச் சமயம் பார்த்து ஸுப்ரீம் கோர்ட்டில் அதிகப்படி நீதிபதிகள் நியமிக்கப்பட்டிருப்பதால், மறு பரிசீலனை பற்றிய தமது விசாரம் அதிகமாவதாக ராஜாஜி கூறுகிறார்.

பொதுநலத்தை ஒட்டி ஸ்ரீமதி இந்திரா காந்தி என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று விரும்பிச் செய்தி விடுத்துள்ளாரோ, அவற்றைச் செய்வதற்கு மூல அரசியல் சாஸனம் எவ்விதத்திலும் தடையாகாது. தேசநலனுக்காகவே பாபு ராஜேந்திர பிரஸாத்தின் தலைமையில் அமைந்த அரசியல் நிர்ணய சபையினர் இந்த சாஸனத்தை வகுத்தனர். அதே சமயத்தில் சர்வாதிகாரத்துக்கு மாறானதாக இந்திய சர்க்கார் அமைய வேண்டும் என்பதால் மக்களின் அடிப்படை உரிமைகளை வகுத்து, அவற்றை அதிமுக்கியம் என வலியுறுத்தினர். சுதந்திர வாழ்வை விரும்புகிறவர்கள் வெள்ளி விழா விமரிசைகளில் மன மயக்கம் அடைந்துவிடக் கூடாது. ஜனநாயகத்துக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக் குறித்து அவர்கள் உன்னிப்பான கவனத்துடன் இருக்க வேண்டும். ஜனநாயகப் பிரியர்கள் யாவரும் இயேசுநாதர் தமது தூதர்களுக்கு விதித்தது போல், கவனத்துடன் இருந்து, வலிவும் உற்சாகமும் வேண்டிப் பகவானைப் பிரார்த்திக்க வேண்டும் என்கிறார் ராஜாஜி.

தமிழ் நாட்டிலே

—தீரன்—

ம. பொ. சி.யும் தமிழினமும்

தமிழ் நாடு மின்கழகக் கணக்காயர் மகா நாட்டில் தமிழக மேலவைத் துணைத் தலைவர் ம.பொ.சி. பேசியுள்ள ஒரு பேச்சு அனைவர் கவனத்துக்கும் உரிய தாகும்.



''முதல் தமிழ் நாடு மின் கழகக் கணக்காயர் மகா நாட்டிலும் நான் கலந்து கொண்டேன். இந்த இரண்டாவது மகாநாட்டிலும் கலந்து கொள்கிறேன். அப்போது இருந்ததைவிட நீங்கள் எல்லாம் இப்போது சம்பள உயர்வு பெற்றிருக்கிறீர்கள். அப்போது கீழ்ச் சபை உறுப்பினராக இருந்த நான் இப்போது மேல்சபை உறுப்பினராகி யிருக்கிறேன். அதாவது நீங்களும் முன்னேறி யிருக்கிறீர்கள். நானும் முன்னேறி யிருக்கிறேன். நாடு முன்னேறி வருகிறது என்பதற்கு இது உதாரணம்.''

நாட்டு முன்னேற்றத்துக்கான அடையாளத்தை எவ்வளவு சுலபமாக ம.பொ.சி. கண்டுபிடித்து விட்டார் பார்த்தீர்களா? இதை ஹாஸ்யத்துக்காகக் கூறினார் என்று வைத்துக் கொண்டாலும் அதே மகாநாட்டில் தமிழ் இனம் என்பதற்கு அவர் வகுத்துள்ள இலக்கணத்தை எப்படி ஏற்பது?

''நான் தமிழன் என்பதால் இந்த அரசை ஆதரிக்கிறேன். இனத்தை மாற்றிக்கொள்ள முடியும் என்றால் என்னால் இந்த ஆட்சியை ஆதரிக்கும் மனத்தையும் மாற்றிக் கொள்ள முடியும். எப்படி என்றால் இனத்தை மாற்றிக் கொள்ள முடியும்? யாருக்கு இன உணர்ச்சி இல்லையோ அவர்கள் இந்த அரசுக்கு எதிராக எதைச் செய்யவும் துணிவார்கள்'' என்று அவர் பேசியுள்ளார்.

அவருடைய 'ஃபார்முலா'வின்படி அவர் ஆதரிப்பது தமிழ் இனம். ஆதரிக்காதது தமிழினமில்லை. இதற்கு முன்னால் முதல் அமைச்சர்களாக இருந்த அண்ணா, பக்தவத்சலம், காமராஜ், ஓ. பி. ஆர்., குமாரசாமி ராஜா போன்றவர்கள் எல்லாம் தமிழ் இனமா, அல்லது அல்ஜீரிய ஆப்பிரிக்க இனமா என்று ம.பொ.சி. நம்மைக் குழப்பி விட்டாரே, எவ்வளவ பிரமாதமான குழப்பம் இது?

மின் கழகமும் கணக்காயரும

சில தினங்களுக்கு முன்னால் 'தமிழ் நாடு மின் கழகக் கணக்காயர்' மகாநாடு சென்னையில் நடைபெற்றிருக்கிறது. கணக்காயர் என்ற பதம், நூலாசிரியர், ஆசிரியர் என்ற பொருளுக்கு உரியது. 'மதுரைக் கணக்காயர் மகனார் நக்கீரர்' என்ற பழைய பெயர் இதற்கு உதாரணம். குமாஸ்தாக்கள், அலுவலக ஊழியர்களைக் குறிக்க இந்தப் பதத்தை எப்படி யார் சூட்டினார்கள் என்பது தெரியவில்லை. அர்த்தம், சரியோ, சரியில்லையோ, எந்தத் தமிழ்ப் பெயரையாவது எதற்காவது வைத்துவிட வேண்டும் என்று முனையும் முனைப்பே இதில் தெரிகிறது. 'ஆசிரியர்கள் சங்கம்' 'கணக்காயர் சங்கம்' என்று பெயர் வைத்தால் பொருந்தும். மதுரைக் கணக்காயர் என்றால் மதுரை ஆசிரியர் என்று அர்த்தப்படும். ஆனால் இப்போதெல்லாம் அர்த்தம் பற்றி யார் கவலைப்படுகிறார்கள்?

வில்லும் அம்பும்!

கடலூரில் ஈ.வெ.ரா சிலையைத் திறந்து வைக்கும் விழாவில் தமிழக முதலமைச்சர் கருணாநிதி, ''பெரியார் ஒரு வில். அந்த வில்லிலிருந்து புறப்பட்ட அம்புகள் நாங்கள்'' என்று பேசியுள்ளார். 'சிலை என்றால் உருவச் சிலை என்றும் கூறலாம். சிலை என்றால் வில் என்றும் தமிழில் பொருள் உண்டு' என்றும் முதலமைச்சர் கூறியுள்ளார்.



'வில்லிலிருந்து விடப்படும் அம்புகள் நாங்கள்' என்றால் அந்த அம்புகளுக்கு இரையாகும் அப்பாவி மக்கள் யார் யார் என்று முதல்வர் கூறவில்லை.

கடையநல்லூர் விபத்து

சமீபத்தில் ரயில் விபத்துக்கள் எதுவும் நடக்கவில்லை என்று நினைத்து மகிழ்ந்து கொண்டிருந்த போதே தென்காசிக்கு அருகே கடையநல்லூரில் ஒரு ரயில் விபத்து நடந்திருக்கிறது. ஒவ்வொரு மந்திரி பதவி ஏற்பதும் ஒரு ரயில் விபத்து நடந்தாக வேண்டும் போலிருக்கிறது. திருவனந்தபுரம் சூப்பர் எக்ஸ்பிரசும், திருவனந்தபுரம் பாஸஞ்சரும் நேருக்கு நேர் கச்சிதமாக மோதிக் கொண்டு விட்டதால், ஐம்பத்து நான்கு பயணிகளுக்குக் காயமும், ஆறு பயணிகளுக்குப் பலத்த காயமும், எஞ்சின் டிரைவர் பயர்மென்களுக்கு அங்கஹீனமும் ஏற்படும் அளவுக்கு அபாய நிலை நேர்ந்திருக்கிறது. கடையநல்லூர் நிலையத்தில் நின்று கொண்டிருந்த பாஸஞ்சர் ரயிலின் எஞ்சினில், விரைந்து வந்துகொண்டிருந்த சூப்பர் எக்ஸ்பிரஸின் எஞ்சின் நேரடியாக மோதவேண்டுமானால் என்ன வென்று சொல்வது? எதிரே நிற்கிற ரயிலை விட்டு விலகி வேறுபாதையில் மோதாமல் போக சூப்பர் எக்ஸ்பிரசுக்குத்தான் விருப்பமில்லையா?

அல்லது கூட்டரோடு மோதாமல் நிற்கப் பாஸஞ்சர் எஞ்சினுக்குத்தான் விருப்பமில் லையா ? எந்த விதத்திலும் நேரவே முடியாத விபத்து இது ! மிகப் பெரிய அஜாக்கிரதை தவிர வேறு காரணத்தையே கூற வழி இல்லை என்று சொல்லலாம்.

கி. ஆ. பெ.யின் குற்றச்சாட்டு


சமீபத்தில் திருச்சியில் நடைபெற்ற அடகுக் கடை வியாபாரிகள் சம்மேளனக் கூட்டத்தில் தமிழ் அறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் நம்முடைய மந்திரிகளைப் பற்றிய சில உண்மைகளை மிகவும் தைரியமாகவே சொல்லியிருக்கிறார்.

" அடகுத் தொழில் செய்யும் உங்கள் குறைகளை நம் மந்திரிகளிடம் எடுத்துச் சொல் லக் கூடாதா என்று ஒரு நண்பர் என்னிடம் கேட்டார். நம் மந்திரிகளைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அவர்களைப் பற்றி எனக்கு நிறையச் சலிப்பூட்டும் அநுபவங்கள் உண்டு. மந்திரிகளுக்குத் தந்தி அடித்தால் பதில் வராது. டெலிபோனில் கூப்பிட்டால் ஊரில் இருக்க மாட்டார்கள். நேரில் போனாலும் பார்க்க முடியாது. அப்படியே பார்த்தாலும் நம்மோடு பேச அவர்களுக்கு அவகாசம் இராது. ஒரு வேளை தப்பித் தவறிப் பேச அவகாசம் கிடைத்துவிட்டாலும் நாம் சொல் லும் குறைகளைப் புரிந்து கொண்டு பதில் கூறமாட்டார்கள். தப்பித் தவறி மறு மொழி கூறிவிட்டாலும் அதைப் பற்றி அப் புறம் மறந்துவிடுவார்கள். இத்தகையவர்கள் தான் நம் மந்திரிகளாக இருக்கிறார்கள்" என்று பொருள்படத் திரு கி.ஆ.பெ. கூறி யிருக்கிறார். இதே கூட்டத்தில் கி. ஆ. பெ.யின் பேச்சுக்கு அப்புறம் பேசிய பழைய மந்திரி அன்பில் தர்மலிங்கம், "தி.மு.க. ஆட்சி வந்த பிறகு நாங்கள் மந்திரிகளை அமைச் சர்கள் என்றே அழைக்கிறோம். திரு கி.ஆ.பெ. தம் சொற்பொழிவில் 'அமைச்சர்' என்று கூறாமல் 'மந்திரிகள்' என்றே கூறியிருப்பதால் அது பழைய காலத்தைக் குறித்ததாகத்தான் இருக்கும்" என்பதாகப் பூசி மெழுக முயன் றிருக்கிறார். ஆயின் பெயர் மாறியதுடன் நடத்தையும் விசனிக்கத் தக்க விதத்தில் மாறி விட்டது என்பதுதான் பலரது அனுபவம்.

சுதந்திர வீரர்களும் மதுரையும்

சுதந்திரதின வெள்ளி விழாவை ஒட்டித் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் தியாகிகளுக் கும், சுதந்திரப் போர் வீரர்களுக்கும் சிறப்புக் களைச் செய்திருக்கிறார்கள். பெரும்பாலான இடங்களில் இப்படிப்பட்ட விழாக்கள் அமைதி யாகவும் ஆட்சேபனைகள் இன்றியும் நடந் துள்ளன.

ஆனால் மதுரை நகரில் இப்படித் தியாகி களுக்குச் சிறப்புச் செய்ய நடந்த விழாவில் ஓர் எதிர்ப்பும் வெளிநடப்பும் நிகழ்ந்தன. ஒரு குறிப்பிட்ட கட்சி முனைப்பு உள்ளவரும், சமீபத்தில் பல விவாதத்துக்குரிய வன்முறைப் பேச்சுக்களைப் பேசியிருப்பவருமான மதுரை முத்துவைக் கொண்டு பொன்னாடையைப் போர்த்த ஏற்பாடு செய்ததால், தியாகி களில் பலரும், ஏனைய சர்வ கட்சியினரும் இந்தப் பொன்னாடை விழாவைப் புறக் கணித்து வெளியேறிப் போய்த் தனியே ஒரு கண்டனக் கூட்டம் நடத்த நேர்ந்திருக்கிறது. இப்படி நல்ல நாளில் ஓர் அசம்பாவிதம் நடக் காமல் கலெக்டரே இந்த விழாவில் முன் நின்று பொன்னாடை போர்த்தியிருக்கலாம். நடத்துகிற முறையில் சுயநலமும், சுய விளம்பர ஆசையும் வந்துவிட்டால் புனித மான நாளில் புனிதமானவர்களைக் கௌரவிக் கும் விழாவைக்கூடப் பிரச்னைக்குரியதாக்கி விடுகிறார்கள்.



உருவமும் அருவமும்



ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

புஷ்பத்தின் வாசனை கண்ணுக்குப் புலப்படாது. மூக்குக்குத்தான் அது தெரியும். கற்கண்டின் தித்திப்பு கண்ணுக்குத் தெரியாது. அது நாவுக்குத்தான் புலனாகும். சங்கீதம் கண்ணுக்குப் புலப்படாது. செவிக்குத்தான் புலப்படும். சூடும் குளிரும் தொடு உணர்ச்சி கொண்ட தோலுக்குப் புலனாகும்; இவற்றைக் கண்ணால் காண முடியாது. இவற்றுக்கு மாறாகப் பச்சை, சிவப்பு முதலிய வர்ணங்கள் காது, மூக்கு, வாய், தோல் இவற்றுக்குப் புலப்படாது; அவை கண்ணுக்கு மட்டுமே புலனாகும். நாஸ்திகர்கள் உள்பட அனைவரும் நிச்சயமாக உண்டு என்று கூறுகிற உலக வஸ்துக்கள் இவ்விதம் ஒவ்வோர் இந்திரியத்துக்குத்தான் புலனாகின்றனவே ஒழிய எல்லா இந்திரியங்களுக்கும் புலனாவதில்லை. நாலு இந்திரியங்களுக்குப் புலனாகாமல் ஒரே ஓர் இந்திரியத்துக்குப் புலனானாலும் ஒரு வஸ்து இருப்பதாகவே சொல்கிறோம். உதாரணமாக, சங்கீதம் காது ஒன்றுக்கே புலனாகிறது; அதைச் சுவைக்கவோ, பார்க்கவோ, முகரவோ, தொடவோ முடியாது. இருந்தாலும் சங்கீதம் என்று ஒன்று கிடையாது என்று சொல்வதில்லை அல்லவா?

ஐந்து இந்திரியங்களுக்கும் புலனாகாமலும் உண்மையில் ஒரு வஸ்து இருக்க முடியுமா என்று யோசித்துப் பார்ப்போம். பிரபஞ்சம் முழுவதிலும் இப்படித்தான் மின்சார அலைகள் வியாபித்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் நமக்கு எந்த இந்திரியத்தாலும் அதை அறிந்துகொள்ள முடியவில்லை. என்றாலும் சில பரிசோதனைகளின் மூலம் மின்சாரத்தின் வியாபகத்தையும், அது சரீரம் மூளை எல்லாவற்றிலும் கூட வியாபித்திருப்பதையும் நிரூபித்துக் காட்டினால் நம்புகிறோம்.

இத்தனை இந்திரியங்களையும் அவை கிரகிக்கிற வஸ்துக்களையும் படைத்து, ஒழுங்கு செய்து வைத்த ஒரு பெரிய அறிவு இருக்கவே செய்கிறது. அதைத்தான் கடவுள் என்கிறோம். மின்சாரத்தைப் போல அதுவும் எங்கும் வியாபித்திருக்கிறது. நமக்குள்ளும் வியாபித்திருக்கிறது. இந்திரியங்கள் அதிலிருந்து தோன்றி அது இயக்கி வைக்கிற முறையில் கட்டுப்பட்டே வேலை செய்கின்றன. கண்ணால் பார்க்கத்தான் முடிகிறது; கேட்க முடிவதில்லை. காதால் கேட்கத்தான் முடிகிறது; பார்க்க முடிவதில்லை. இப்படியாக எந்தப் பெரிய சக்திக்கு இந்த இந்திரியங்கள் கட்டுப்பட்டிருக்கின்றனவோ, அந்த மகாசக்தி இந்த இந்திரியங்களுக்குக் கட்டுப்படுமா? இதனால்தான் கடவுளை எந்த இந்திரியத்தாலும் புரிந்து கொள்ள முடியவில்லை. இதைக் கொண்டு கடவுளே இல்லை என்கிறார்கள் சிலர்.

கடவுள் மகா சக்தி படைத்தவர் மட்டுமல்ல; பரம காருண்யமும் பொருந்தியவர். எனவேதான் அவர் அனைத்துக்கும் அப்பாற்பட்ட அருவமாயினும், பக்தர்கள் தங்கள் இந்திரியங்களால் கிரகித்து, கண்ணாரக் கண்டு, வாயாரப் பேசி, கையார ஸ்பரிசித்து மகிழும் வண்ணம் பல உருவங்களும் தரிக்கிறார். கடவுள் இல்லை என்று வாதம் செய்கிறவர்களிடம் தம்மை நிரூபித்துக் கொள்வதற்காக அவர் உருவம் எடுத்து வரமாட்டார். 'கடவுள் உண்டு, அவரை அநுபவிக்க வேண்டும்' என்று தாபத்துடன் வேண்டுகிறவர்களிடம் கருணை கொண்டு அவர்களுக்கே உருவத்துடன் காட்சி தருகிறார். அருவமாயினும் உருவம் கொள்வார். மின்சாரம் ஒயரில் வருகிறபோது அருவமாயிருந்தாலும், காற்றடக்கமான ஒரு கண்ணாடிச் சிமிழும் (Bulb) அதனுடன் ஒரு சிறு கம்பியும் (Filament) சேர்த்து ஸ்விட்சைப் போட்டால் அருவ மின்சாரமே ஜோதி ரூபமாகிறதல்லவா? பக்தர்கள் தங்கள் இதயச் சிமிழில் பக்தி என்ற கம்பியைப் பூட்டிக்கொண்டு சிரத்தை என்கிற ஸ்விட்சைத் தட்டிவிட்டுக் கொண்டால் அருவமான கடவுள் திவ்ய மங்கள ஜகஜ்ஜோதியாகத் தரிசனம் தருவார். சூரிய வெப்பத்தில் கடல் நீர் ஆவியாகப் போகும்போது அருவமாகி விடுகிறது. அதுவே மேகமாகக் குளிர்ந்தால் நம் கண்ணுக்குத் தெரிகிற மழையாகிறது. இன்னமும் குளிர்ந்தால் கெட்டியான பனிக்கட்டியே ஆகிறது. நம் இதயம் எத்தனைக்கெத்தனை குளிர்ந்து ஈசுவரனை ஸ்மரிக்கிறதோ, அத்தனைக்கத்தனை ஸ்தூலமாக அருவ தத்துவம் உருவம் கொள்கிறது.

அல்லும் பகலும் இறைவனையே நாடி, வேறு ஆசைகளை அறவே மறந்து, பக்தி செய்தால் அருவப் பரம்பொருளை நன்றாகக் கிரகிக்கலாம். இப்படி ஒருவன் பக்தி செய்வதனால் ஏனைய உலக மக்களுக்கு என்ன லாபம் என்று கேட்பவர்களும் இருக்கிறார்கள். ஈசுவர தரிசனம் பெற்ற ஒருவனைப் பார்த்த மாத்திரத்தில் மக்களின் தாபமெல்லாம் சமனமாகி அவர்களுக்கும் ஓர் ஆறுதலும் சாந்தியும் உண்டாகின்றனவே! அந்த சாந்திக்கு ஈடாக எந்த உலகப் பொருளைச் சொல்ல முடியும்? இதுவே பக்தனால் உலகுக்கு ஏற்படுகிற மிகப் பெரிய நன்மை.

நீயும் வந்துவிடு

பி.ராமமூர்த்தி

"அம்மா ஜானகி! கிட்டு சொன்ன சேதியைக் கேட்டு நெஞ்சு பதைபதைத்து இங்கே புறப்பட்டு வந்திருக்கிறேன் நான். கட்டின வளை வைத்தே குப்பை கொட்ட வக்கில்லாத உன் புருஷன் புதிதாக ஒருத்தியுடன் தொடர்பு வைத்திருக்கிறானாம்; வீட்டுக்கே சரியாக வருவதில்லையாம். ஏன் இதைப் பற்றி ஒரு வார்த்தை நீ எனக்கு எழுதவில்லை?"

சாதாரணமாகவே மூணுக் கென்றால் கோபம் வந்துவிடும் விசுவநாதனுக்கு. இது மாதிரி தாங்கிக்கொள்ள முடியாத பிரச்னையென்றால் கேட்கவா வேண்டும்? ஊரிலிருந்து வந்த அவர் இன்னும் சட்டையைக் கூடக் கழற்றவில்லை. கையில் கொண்டு வந்த துணிப்பை ஒன்றைத் தொப்பென்று போட்டுவிட்டு மகளைப் பிடித்துக் கொண்டு விட்டார்.

ஜானகி சொன்னாள்:

"அதெல்லாம் ஒன்றும் இல்லை அப்பா. வேண்டுமென்றே அந்தக் கிட்டு அவர் மேல் பழி சுமத்தியிருக்கிறான். அந்தக் கிட்டுவுக்கும் அவருக்கும் கொஞ்ச நாட்களாகவே மனஸ்தாபம். அதனால்தான் அவரைப் பற்றி உங்களிடம் கிட்டு அப்படிச் சொல்லியிருக்கிறான். அவர் குடும்பப் பொறுப்பில்லாமல் நடந்து கொள்கிறதென்னவோ வாஸ்தவம்தான். ஆனால் என்னை வெறுத்துவிட்டு இன்னொருத்தியுடன் தொடர்பு கொள்ளுகிற அளவுக்கு என் கணவரின் புத்தி கெட்டுப் போகவில்லை!"

"ஓஹோ! அப்படியா...? சரி, எங்கே உன் புருஷன்?" அவனிடமே நேரிடையாகக் கேட்டுவிடலாம் என்ற வேகம் அவருக்கு.

"காலையில்தான் எங்கோ வெளியில் போனார்!"

"பெரிய வெட்டி முறிக்கிற வேலை! காலையிலேயே போய்விட்டானாக்கும்? குழந்தைகள் எங்கே?"

"ஜெயந்தி, சித்ரா, ஹரி மூன்று பேரும் பள்ளிக்கூடம் போயிருக்கிறார்கள். பத்துக் குட்டி தூளியில் தூங்குகிறான்!"

"ஜெயந்தி பள்ளிக்கூடம்தான் போயிருக்கிறாளா; இல்லை அப்பளம் விற்க அனுப்பிவிட்டாயா?" முகத்தில் அறைகிற மாதிரி வருகிறது கேள்வி.


"அப்பா, கொஞ்சம் உட்காருங்கள். காப்பி போட்டுக் கொண்டு வருகிறேன்."

இரண்டு அடி நடக்கிறாள் ஜானகி.

"பேச்சை மாற்றாதே! இன்றைக்கா நேற்றா; பதின்மூன்று பதினான்கு வருஷங்களாக நானும் பார்க்கிறேன். 'சுகமாக இருக்கிறேன்' என்று கடிதம்மட்டும் போட்டுவிடுகிறாய். நேரில் வந்து பார்த்தால் அல்லவா தெரிகிறது நீ சுகப்படுகிற லட்சணம்? நம்ம வீட்டு ராமாயிகூட உன்னைவிட நல்ல புடவை கட்டிக் கொண்டிருக்கிறாள். உனக்குப் பிறகுதான் லலிதாவுக்கும் ருக்மிணிக்கும் கல்யாணம் பண்ணி வைத்தேன். லலிதாவின் பெயரில் மாப்பிள்ளை பம்பாயிலேயே பிளாட் வாங்கியிருக்கிறாராம். ருக்மிணியின் புருஷனுக்குப் பிரமோஷனும், புதிய வேலையாம்.



அதற்காக அவர் ஒரு வருடம் அமெரிக்காவில் டிரெயினிங் போக வேண்டுமாம். கம்பெனிச் செலவிலேயே ருக்மிணியையும் அழைத்துக் கொண்டு அமெரிக்கா போகிறாராம் அவள் புருஷன். இரண்டு பேர்களுமே அடிக்கடி கடிதம் போடுகிறார்கள். அவர்கள் எழுதும் ஒவ்வொரு கடிதத்திலும் புக்ககத்தின் பெருமைதான். ஆனால் நீ சிறந்த வேளையோ, உன் கழுத்தில் மாங்கல்யம் விழுந்த வேளையோ உன் புக்ககத்தின் பெருமை இப்படி இருக்கிறது. நான் இருக்கிற வரை என்றால் முடிந்ததை உனக்குச் செய்யப்போகிறேன். அப்புறம்...அப்புறம்?''



ஆற்றாமையின் உச்சியில்விசுவநாதனின் தொண்டை அடைத்துப் போகிறது. கோபம் இருக்கிற இடத்தில் குணம் இருக்கும். உணர்ச்சி வயப்பட்டு அழுதுவிடுகிறஇதயம்இருக்கும்.

விசுவநாதன் தம்மை மீறி அழுகிறார் இப்போது.

ஜானகி விசுவநாதனின் தோளைப் பற்றிக் கொண்டு சொல்கிறாள்:

''கவலைப்படாதீர்கள் அப்பா! அவர் மாறிவிடுவார். எனக்கு ஒரு குறையும் வைக்கமாட்டார்!''

''எனக்கு ஆறுதல் சொல்கிறாயா நீ? அசடு என்றால் சரியான அசடம்மா நீ...'' என்று கூறிவிட்டுத் தம் சட்டைப் பையிலிருந்து இரண்டு நூறு ரூபாய் நோட்டுக்களை — ஜானகிக்காக ஊரில் கடன் வாங்கிக் கொண்டு வந்ததை, எடுத்து அவளிடம் நீட்டுகிறார்.

'' எதற்கப்பா... அப்படி ஒன்றும் அவசரச் செலவு எதுவும் இல்லை!'' என்கிறாள் ஜானகி.

''பரவாயில்லை. வைத்துக் கொள். அவன் கண்ணில் காட்டாதே. நீ ஒரு நல்ல புடவையாக எடுத்துக் கொள். குழந்தைகளுக்குச் சட்டைத் துணி எடு. பத்துக் குட்டியை எடுத்துக் கொண்டு வா. குழந்தையைப் பார்த்துவிட்டு நான் புறப்பட்டு விடுகிறேன்!''

'' அதற்குள் என்னப்பா அவசரம்?''

''வேண்டாம் அம்மா. உன் புருஷன் வந்துவிட்டால் அப்புறம் அவனுக்கும் எனக்கும் மல்யுத்தமே நடக்கும். அவ்வளவு ஆத்திரமாக இருக்கிறேன் அவன் மேல். கிட்டு சொன்ன அந்த விஷயத்தைக் கேட்டதிலிருந்து ரத்தம் கொதிக்கிறது எனக்கு!'' என்று அவர் துடிக்கிறார் மறுபடியும்.

சிறப்புச் சிறு கதை

''இருங்கள் அப்பா. பத்துக்குட்டியை எடுத்துக்கொண்டு வருகிறேன்!''

தந்தையின் கோபத்துக்கான அந்தப் பிரச்னையிலிருந்து ஒரு வழியாக நழுவிவிட்டாள் ஜானகி.

ஜானகியின் கணவன் வைத்தா ஜானகியோடு குடித்தனம் நடத்தத் தொடங்கி ஒரு வருடம் ஆகியிருக்கும். தான் பார்த்துக்கொண்டிருந்த நல்ல வேலையை விட்டுவிட்டான். ''சுதந்திரமாகப் பிழைக்கப் போகிறேன்; ஒருவனிடம் கையைக் கட்டிக்கொண்டு என்ன அடிமை வேலை வேண்டிக் கிடக்கிறது?'' என்று ஜானகியிடம் ஜம்பமாகப் பேசினான்.

அவன் சுதந்திரமாகப் பிழைக்கிற லட்சணம் அடுத்த சில மாதங்களிலேயே தெரிந்துவிட்டது. வீட்டில் இருந்த வெள்ளிப் பாத்திரங்கள் சில டியர் டியர் என்று காணாமற் போயின. பெட்டியில் ஜானகியின் நகைகள் இருந்த இடத்தில் சிவப்பு, ஊதா என்று பல நிறங்களில் ரசீதுகள் இருந்தன.

அப்போதிலிருந்து, யாருடைய துணையுமின்றி, கணவனை எதிர்பார்க்காமல் குடும்பச் சுமையைத் தான் சுமக்க ஆரம்பித்தாள் ஜானகி. நான்கு குழந்தைகளைப் பெற்றும் இன்னும் வைத்தாவின் புத்தி சரியாகவில்லை. குடும்பப் பொறுப்பு, தன்னை நம்பியிருக்கிற மனைவி குழந்தைகள் என்கிற உணர்ச்சியெல்லாம் இல்லாமல், 'வெகு சுதந்திரமாக' இருக்கிறான் வைத்தா. மனைவி அப்பளம் இட்டும், நாலு வீடுகளுக்கு மாவரைத்துக் கொடுப்பது போன்ற காரியங்களைச் செய்தும், அவள் தந்தையின் உதவியைக் கொண்டும் குடும்பத்தை நடத்துவது தன் கையாலாகாத்தனத்தினால் என்பது அவனுக்கு உரைக்கவே இல்லை.

வைத்தா 'சுதந்திரமாக'த் தானும் கொஞ்சம் சம்பாதிக்கிறான். ஆனால் அந்த வருவாய் நிரந்தரமில்லை. அப்படியே வந்தாலும் அவன் வீட்டுக்குத் தருவதில்லை.

அவனுக்காகத் தோன்றினால் ராத்திரி வீட்டுக்குத் திரும்புகிறபோது ஜானகிக்கு இரண்டு முழம் மல்லிகைப் பூ வாங்கி வருவான். அதுகூட அவனுடைய 'சுயநலத்துக்காகத்தான்!' வீட்டுக்கு வந்து ஆசையோடு அவள் தலையில் சூட்டி விடுவான். அவள் மனம் நெகிழ்ந்து போகிற மாதிரி பேசுவான்.

ஜானகி — அந்த அசடு, இரண்டு முழம் பூவிலும் அவன் பேச்சிலும் மெய்ம்மறந்து போவாள். கணவனுடைய விருப்பப்படி நடந்து கொள்வாள். வைத்தாவுக்கு அவள் மேல் இருக்கிற அன்பும் ஆசையும் அந்த நேரத்தோடு சரி. காலையில், அவன் வாங்கி வருகிற மல்லிகைப்பூவைப் போல அவையும் கூட வாடிப் போய்விடும். அதெல்லாம் இந்த அசட்டு ஜானகிக்குப் புரியவில்லையே! புரிந்திருந்தால் இத்தனை கஷ்டத்திலும் நான்கு குழந்தைகளுக்குத் தாயாகி இருக்க மாட்டாளே!

தன்னோடு சேர்ந்து அப்பளம் இட, மாவரைக்க, தான் தாங்கியிருக்கிற பாரத்தைப் பகிர்ந்து கொள்ள மூத்த பெண், பதின்மூன்று வயது ஜெயந்திக்கும் கற்றுத் தந்துவிட்டாள் ஜானகி. ஐந்தாம் வகுப்போடு ஜெயந்தியின் படிப்பு நின்று போய்விட்டது. மற்ற இரண்டு குழந்தைகளும் இப்போதைக்குக் கார்ப்பொரேஷன் பள்ளிக்கூடத்துக்குப் போய்க் கொண்டிருந்தார்கள்.

இரவின் ஆரம்பம்.

சின்னக் கூடத்தை ஒட்டிய சமையலறை; ஜானகி சமையலறையைக் கழுவிவிட்டபின் ஈரம் காய்ந்ததும் சாக்கைப் போட்டுக்கொண்டு குழந்தைகள் படுத்துக் கொள்வதும் அங்கேதான். நாற்பது ரூபாய் வாடகைக்கு இந்த இடமே அதிகம்தான்!

மூத்தவள் ஜயந்தி மட்டும் இன்னும் தூங்கவில்லை. மற்றக் குழந்தைகள் தூங்கிவிட்டன.

ஜானகியும் பெண்ணும் தங்கள் பிழைப்பைப் பற்றிப் பேசத் தொடங்கினார்கள்.

''இன்று எங்கெங்கே அப்பளம் கொடுத்துவிட்டு வந்தாய்?''

''காந்தி தெருவில் இருக்கிற இரண்டு வீடுகள், சக்ரபாணி தெருவில் மூன்று வீடுகள், ராமன் தெருவில் காமாட்சி மாமி வீடு, கோவிந்தன் தெருவில் அந்த வக்கீல் மாமா வீடு.....'' என்று இன்னும் பட்டியல் நீளமாகப் போகிறது!

''....காமாட்சி மாமி வீட்டிலும் வக்கீல் மாமா வீட்டிலும் நாளைக்குத்தான் பணம் தருவார்கள்!'' என்று முடிக்கிறாள் ஜெயந்தி.

''சரிடி! இன்று அந்தப் பல்பொடி கம்பெனியிலிருந்து வேலை வாங்கி வந்திருக்கிறேன். பல்பொடி டப்பாக்களின் மேல் லேபிள் ஒட்டித் தரவேண்டும். நூறு டப்பாக்களுக்கு லேபிள் ஒட்டினால் ஐம்பது பைசா. நானூறு டப்பாக்களும் லேபிளும் கொண்டு வந்திருக்கிறேன். நீ இருநூறு நான் இருநூறு என்று ராத்திரியே ஒட்டி முடித்துவிடுவோம். காலையில் கொண்டு போய்க் கொடுத்தால் இரண்டு ரூபாய் கை மேல்..... என்ன?''

ஒத்தாசைக்கு மகளைப் பார்க்கிறாள் ஜானகி.

'' சரி, அம்மா!'' என்கிறாள் ஜெயந்தி.

பகலில் அப்பளத்தையும் வடகத்தையும் எடுத்துக் கொண்டு வீடு வீடாய் அலைவது போதாதென்று இரவில் தூங்கவிடாமல் இது மாதிரி வேலைகள் வேறு?

என்ன அம்மாவோ?

ஒரு வாரத்துக்கு முன்னால் வீட்டைவிட்டுப் போன வைத்தா இன்றுதான் திரும்பி வந்திருக்கிறான். அதைப் பற்றி அவனிடம் எதுவும் கேட்கவில்லை ஜானகி.

இந்த ஒரு வாரமாக அவன் எங்கே இருந்தான் என்பது அவளுக்குத் தெரியும்.

தான் புதிதாகத் தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிற 'அந்தப் பெண்ணின்' வீட்டில்தான் இருந்திருக்கிறான் வைத்தா.

இரண்டு நாட்களுக்கு முன்பு பக்கத்துப் போர்ஷனில் இருக்கிற பங்கஜம்கூடச் சொன்னாள்.

''உன் அகத்துக்காரரைக் கௌரி மாமியும் நானும் சினிமாத் தியேட்டரில் பார்த்தோம். அவரோடு அந்தப் பெண்ணும் வந்திருந்தாள். பற்றிக் கொண்டு வந்தது ஆத்திரம் எனக்கு'' என்று அந்தப் பெண்ணையும் அவர்கள் குஷாலாக எதையும் லட்சியம் செய்யாமல் வாழ்ந்து வருவதையும் பற்றிச் சொன்னாள்.

வயிற்றுக் கோளாறா?

வாயுவா?
அமில உபாதையா?
நெஞ்செரிச்சலா?
அஜீரணமா?





2 ரென்னி மாத்திரைகளை
மெல்லுங்கள்...
விரைவிலேயே
நிவாரணம் பெற

பெப்பர்மிண்ட்
சுவையுள்ள ரென்னியை கைவசம்
வைத்திருங்கள்.

நிக்கோலஸ் (N) தயாரிப்பு

mcm/ni/4 tam

ஆறே வாரங்களில் ரூ. 35 லட்சம் அன்னியச் செலாவணி செலவில் இளமை பொருந்திய எஞ்ஜினீயர்களும் தொழிலாளர்களும் கொண்ட ஒரு குழு என்ன செய்ய முடியும் தெரியுமா?



வருடந்தோறும் நம் தேசத்திற்கு ரூ. 2.5 கோடி அன்னியச் செலாவணி மிச்சப்படுத்த வழி செய்ய முடியும்.

ஆம், ரூ. 35 லட்சம் அன்னியச் செலாவணி செலவில் ஒரு ரிங் ரோலிங் மில் இணைக்கப் பட்டுள்ளது. அதன் பயனாக வருடந்தோறும் இறக்குமதித்தடுப்பின் மூலம் ரூ. 2.5 கோடி அன்னியச் செலாவணி தேசத்திற்கு மிச்சமாகும். முழுமையாகச் செயல்படும்போது இந்த மில்லில் 6 கிலோகிராம் வரை எடையும், 90 மி.மீ. முதல் 200 மி.மீ. வரை அளவும் கொண்ட 20 லட்சம் ரிங்குகள் தயார் செய்யப்படும். இவை ஆன்டி-ஃப்ரிக்ஷன் பேரிங்குகள், ஆட்டோமொபைல் மற்றும் இதர எஞ்ஜினீயரிங் தொழில்களுக்கு இன்றியமையாதவை.

இந்தியாவில் முதல் முதலாக இணைக்கப்பட்டுள்ள இந்த தொழிற்சாலை, அதற்கான உபகரணங்கள் வந்து சேர்ந்த ஆறே வாரத்திற்குள், வெளிநாட்டு நிபுணர்களின் உதவி இன்றி, சராசரி 26 வயதே கொண்ட எஞ்ஜினீயர்கள் குழுவின் உதவியால் நிறுவப்பட்டு, இயக்கப்பட்டிருக்கிறது.

எங்கள் பலம் உறுதிமிக்க எஃகில் மட்டுமல்ல,
திறமை மிக்க ஊழியர்களிலும் உள்ளது.

TNL2974

டாடா ஸ்டீல்

பங்கஜத்தின் அந்த விளக்கத்துக்குப்பின் வைத்தா எப்போது வருவான் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள் ஜானகி. இன்று வந்துவிட்டான் அவன். அவன் சாப்பாட்டுக்கு உட்காரும்பொழுது மெதுவாக அதைப் பற்றிப் பேச ஆரம்பிக்கலாம் என்று நினைத்தாள் ஜானகி.

அதற்குமுன், தற்செயலாகக் கணவனின் தோல் பையைத் திறந்து பார்த்த ஜானகி ஆச்சரியப்பட்டு நின்றாள். தோல் பைக்குள் ஒரு நைலான் புடவை கண்ணைப் பறித்தது.

ஒரு வாரத்துக்குப் பிறகு வருகிறாரே, புடவையைக் கொடுத்து மனைவியைச் சமாதானப்படுத்திவிடலாம் என்று வாங்கி வந்திருக்கிறாரா ?

ஜானகி யோசித்துக் கொண்டிருக்கும் போதே வைத்தா உள்ளே வந்தான்.

'' இந்த மாதிரி புடவையெல்லாம் நான் கட்டிக் கொள்வதில்லையே ! சாதாரண நூல் புடவையாக வாங்கியிருக்கலாமே...?'' என்றாள் ஜானகி.

வைத்தாவின் முகம் சங்கடத்தில் தவித்தது. ''உன்னை யார் என் 'பேக்'கைத் திறந்து பார்க்கச் சொன்னது; அந்தப் புடவை உனக்கில்லை !''

''எனக்கு இல்லையா ? அப்படியென்றால்...?'' நிதானமாகக் கேட்டாள் ஜானகி.

'' அப்படியென்றால் உனக்காக நான் வாங்கி வரவில்லை என்று அர்த்தம். போதுமா ?''

''ஓ! அவளுக்காக வாங்கியிருக்கிறீர்களா? அவளாவது அந்த மட்டுக்கும் கொடுத்து வைத்திருக்கிறாளே! என்னைவிடச் சற்று நிறமாக இருப்பாளாக்கும் அவள்; இந்த ரோஸ் கலர் அப்போதுதான் பொருத்தமாக இருக்கும் !''

''...............................''

'' இந்த மாதம் வீட்டு வாடகை தர வேண்டும். நீங்கள் வந்ததும் கேட்க வேண்டும் என்று நினைத்தேன். நேற்றே வீட்டுக்கார அம்மாள் வந்து கத்தினாள் கன்னாபின்னாவென்று. அவள் முகத்தில் நாலு பத்து ரூபாய்களை விட்டெறிந்து விடுங்கள்; என்ன?''

ஜானகி வைத்தாவின் பதிலுக்காகக் காத்திருந்தாள்.

''என்ன புதிய பழக்கம்; இத்தனை நாட்களாக நானா அதையெல்லாம் கொடுத்தேன்?'' என்றான் வைத்தா.

'' என்னிடம் பணம் இல்லை. அதனால்தான் உங்களிடம் கேட்கிறேன்!'' என்றாள் ஜானகி.

''என்னிடமும் பணம் இல்லை. லாண்டரி துணி வாங்க வேண்டும். உன்னிடம் கேட்கலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்!''

'' பணம் இல்லையா ? இந்த நைலான் புடவை.... 'அந்த வீட்டுக்குக்கூட நீங்கள் தாம் வாடகை கொடுக்கிறீர்களாம் ! அதற்கெல்லாம் மட்டும் உங்களுக்கு எப்படிப் பணம் இருக்கிறது!''

''அதையெல்லாம் நீ கேட்க வேண்டிய அவசியம் இல்லை!'' என்றான் வைத்தா கோபமாக.

''பதினாறு வருஷங்களாய் உங்களை எதுவும் கேட்காமல், எல்லாரிடமும் 'அசடு' என்று பெயர் எடுத்துக் கொண்டு நான் படுகிற கஷ்டம் போதும். இப்போது உங்களைக் கேள்வி கேட்க வேண்டிய அவசியமும் காலமும் வந்துவிட்டது. ஏன் ஒரு வாரமாக நீங்கள் வீட்டுக்கு வரவில்லை?''

ஒரு குற்றவாளியை விசாரிக்கிற மாதிரி கேட்டாள் ஜானகி.

''என் இஷ்டம் நான் வீட்டுக்கு வருகிறதும் வராமல் இருக்கிறதும்!'' என்றான் வைத்தா.

''உங்கள் இஷ்டப்படி இவ்வளவு நாட்கள் இருந்தது போதும். இனிமேல் அப்படி இருக்க வேண்டாம் என்றுதான் சொல்லுகிறேன். குழந்தைகள்கூட உங்களைப் பற்றிக் குறைவாக மதிப்பிடுகிறார்கள். உங்களை நம்பி ஐந்து ஜீவன்கள் இருக்கிறதை மறந்து விடாதீர்கள்; குடும்பம், மனைவி, பொறுப்பு என்கிறதை யெல்லாம் இவ்வளவு நாட்கள் உதறிவிட்டு அலைந்த மாதிரி இனிமேல் நீங்கள் அலைய வேண்டாம். அந்தப் புதிய சிநேகிதத்தை நீங்களாக விடுகிறீர்களா? அல்லது நான் வந்து அவள் காலில் விழுந்து கெஞ்சி உங்களை விட்டுப் போகச் சொல்லட்டுமா?''

''ஜானகி!'' அதிர்ந்து போய்க் கத்தினான் வைத்தா. இவ்வளவு பேச்சும், இந்தத் துணிச்சலும் இவளுக்கு எங்கிருந்து வந்தன?

''ஏன் கத்துகிறீர்கள்? அவளும் ஒரு பெண் தானே? 'ஒரு குடும்பத்தைக் குலைத்து விடாதே!' என்று கெஞ்சினால் அவள் மனம் இரங்காதா? வந்த வழியிலேயே திரும்பிப் போய்விட மாட்டாளா என் பரிதாப நிலையைப் பார்த்து!''

''சீ! பேச்சை நிறுத்து!''

'பளார்' என்று ஓர் அறை விழுந்தது ஜானகியின் கன்னத்தில். திரும்பவும் கையை ஓங்கின வைத்தா பிறகு பின்வாங்கினான்.

ஜானகி மௌனமாக வைத்தாவின் முகத்தைப் பார்த்தாள்.

''ஏன் ஓர் அறையுடன் நிறுத்தி விட்டீர்கள்? உங்கள் ஆத்திரம் தீர என்னை அறையுங்கள்! நம் குடும்ப வாழ்க்கையில் இது ஒன்றுதான்



பாக்கி இருந்தது. இந்தச் சுகமும் இப்போதிருந்து எனக்கு ஆரம்பம். மனைவி என்கிற உரிமையால்தானே அடிக்கிறீர்கள்? அந்த உரிமையை நான் காத்துக் கொள்ள நீங்கள் வீட்டுக்கு வரும்போதெல்லாம் அறை வாங்கத் தயார். ஆத்திரம், கோபம் இதையெல்லாம் அக்னி சாட்சியாக மூன்று முடிச்சுப் போட்ட மனைவியிடம்தான் காண்பிக்க முடியும். புதிதாகச் சேர்த்துக் கொண்டிருக்கிற சிநேகிதங்களுக்குத்தான் சந்தோஷம், சிரிப்பு, சினிமா என்றெல்லாம் வேண்டும்!''

வைத்தா முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டு சமையலறையில் போய் உட்கார்ந்தான். ஜானகியின் வார்த்தைகள் அவன் நெஞ்சை மெதுவாகச் சுட ஆரம்பித்தன.

ஜானகி கண்களைக் கசக்கிக் கொண்டு சாப்பாட்டுத் தட்டை எடுத்து வைத்தாவின் முன் வைத்தாள்.

காலையில் பல்பொடிக் கம்பெனிக்குப் போய் ஐந்நூறு டப்பாக்களுக்கு லேபிள் ஒட்டிவிட்டு அதற்குண்டான பணத்தையும் பெற்றுக்கொண்டு மாலையில்தான் வீட்டுக்கு வந்தாள் ஜானகி.

அவளிடம் இடி முழங்குகிற குரலில் பரபரப்போடு சொன்னாள், பங்கஜம்.

''அடியே ஜானகி! இப்போதுதான் வருகிறாயாக்கும்? மத்தியானம் அப்பளம் விற்கப் போய்விட்டு வந்த உன் பெண் ஜெயந்தி...''

''என் பெண் ஜெயந்தி, என்ன.... என்ன ஆயிற்று அவளுக்கு!''

''ஏண்டி இப்படிப் பயப்படுகிறாய்? உன் பெண் ஜெயந்தி 'பெரியவளாகி' விட்டாள். இனிமேல் நீ அவளை அப்பளமெல்லாம் விற்க அனுப்பக் கூடாது. ஊர் ரொம்பக் கெட்டுக் கிடக்கிறது...''

பங்கஜம் பேசிக் கொண்டே போனாள். ஜானகிக்குத் தலை சுற்றியது.

அன்று வைத்தா வந்ததும் பெண் பெரியவளாயிருக்கிற சமாசாரத்தைச் சொன்னாள் ஜானகி. வழக்கம்போல் எந்தவிதச் சலனமும் இல்லாமல் இருந்துவிட்டான் வைத்தா.

வைத்தாவைத் தேடி வந்த ஒரு பெரிய மனிதர் அவனோடு ஒரு வியாபார விஷயமாகப் பேசிக் கொண்டிருந்தார்.

அந்தப் பேச்சின் மூலம் புரிந்து கொண்ட விஷயம் ஜானகிக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

வைத்தா அந்தப் பெரிய மனிதருக்குச் செய்து கொடுத்திருக்கிற ஒரு வியாபாரத் தரகில் அவனுக்குப் பத்தாயிரம் ரூபாய் கிடைக்கப் போகிறது. அந்தப் பத்தாயிரம் ரூபாய் கிடைத்ததும் வடக்கே போகப் போகிறானாம் வைத்தா. பிறகு பத்தாயிரத்தைப் பத்து லட்சமாகப் பெருக்கிக் கொண்டு ஊருக்குத் திரும்புவானாம்.

அந்தப் பெரிய மனிதர் போனதும் ஜானகி வைத்தாவைக் கேட்டாள்: ''உங்களுக்கு அவர் மூலம் பத்தாயிரம் ரூபாய் கிடைக்கப் போகிறது போலிருக்கிறதே!''

''ஆமாம்!''

''அப்பாடா! நம் கஷ்டமெல்லாம் தீர்ந்துவிடும். அடகு வைத்திருக்கிற நகைகளை மீட்டு விடலாம். நல்ல வீடாகப் பார்த்துக் கொண்டு போகலாம். குழந்தைகளுக்குச் சட்டைத் துணி....''

''நிறுத்து! அதற்கெல்லாம் இன்னும் கொஞ்ச நாட்கள் பொறு. எனக்கு வரப் போகிற பணத்தில் நயா பைசா தொடப் போவதில்லை. வடக்கே போய், அப்படியே ஒரு 'பிஸினஸி'ல் போடப் போகிறேன். திரும்பி வருகிறபோது நல்ல வீடு என்ன, நாமே சொந்தமாக ஒரு வீடு வாங்குகிற வசதியோடு இருப்பேன்!''

''நடக்கிற காரியமாகப் பேசுங்கள். இவ்வளவு நாட்களாகச் சம்பாதிக்காததை நம் பெண் பெரியவளான நேரத்தில் சம்பாதித்திருக்கிறீர்கள். அவளுக்கு ஒரு நல்ல காரியம் செய்ய அந்தப் பணம் உபயோகப்படும். அதையும் இழந்து விடாதீர்கள்.''

''போதும்! அபசகுனம் மாதிரி ஏதாவது உளறாதே!'' என்று இரைந்தான் வைத்தா.

வைத்தா வடக்கே பம்பாயோ, கல்கத்தாவோ — ஜானகிக்குத் தெரியாது; போய் ஒரு வாரமாகிவிட்டது. ஒரு வாரமாக அவன் வீட்டுக்கு வராததைக் கண்டு அப்படி முடிவு செய்து கொண்டாள் ஜானகி. அவனுக்கு ஜானகியுடன் சொல்லிக் கொண்டு போகிற பழக்கம் எப்போதுமே கிடையாது.

இதற்கு முன்பு இரண்டு தடவைகள் இப்படி ஊரை விட்டுக் கிளம்பிப் போய் இருக்கிறான் வைத்தா. பிறகு ஆறு மாதங்களோ, பத்து மாதங்களோ கழித்து ஆளே மாறிப் போய், உடல் இளைத்து, தாடியும் மீசையுமாய் வந்து வீட்டுக் கதவை ஓர் இரவில் தட்டுவான். இரண்டு தடவையும் அப்படித்தான் செய்தான். இந்தத் தடவை வடக்கே போய்ப் பணத்தைத் தொலைத்து விட்டு எத்தனை மாதம்கழித்து வரப்போகிறானோ? அவன் ஊர் திரும்பவாவது கையில் பணம் வேண்டுமே; இல்லாவிட்டால் அதற்கும் ஜானகிக்குத்தான் கடிதம் எழுதுவான் வைத்தா.

ஜானகி யோசித்தாள்.

தனக்குத் தன் கணவரைப் பற்றித் தெரியும். புதிதாக வந்திருக்கிறாளே — அந்தத் தெருவில் இருக்கிறாளாமே — அந்தப் பெண்ணுக்கு இந்த அதிர்ச்சி எப்படி இருக்கும்?

தான் கணவருடைய உதவி இல்லாமல் உழைத்துக் குழந்தைகளையும் தன்னையும் காப்பாற்றிக்கொள்ள முடியும்!


இப்போது அந்தப் பெண்ணின் கதி?

அவள் ஒரு நாள் பார்ப்பாள், இரண்டு நாட்கள் பார்ப்பாள். அப்புறம் அவளும் அரைத்துக் கொடுக்க, பல் பொடி டப்பாவுக்கு லேபிள் ஒட்ட என்று எங்காவது அலைய வேண்டியதுதான்!

ஜானகிக்கு அந்தப் பெண் தனக்குப் போட்டியாக வந்துவிட்டாளே என்று நினைத்தபோது அவள்மேல் வந்த ஆத்திரமும், கோபமும் தன் கணவரை நம்பி இப்படி ஏமாந்து விட்டாளே என்று எண்ணுகிறபோது பரிதாபமாகவும் கருணையாகவும் மாறியது.

இதுவரை அந்தப் பெண்ணை ஜானகி பார்க்கவில்லை. இருந்தாலும் அவளுக்கு


காலம் பறக்கிறது



"ஒன்னுமில்லே, சார்! நம்ம புது ஸ்டெனோ சரளா இன்னைக்கு இவனைப் பார்த்து, 'ஹல்லோ! ஹௌ டூ யூ டூ!'ன்னு கேட்டாள். அதுதான்...!"

ஏதேனும் ஆறுதல் சொல்லலாம் போலத் தோன்றியது அவனுக்கு.

"அம்மா! அப்பாவைத் தேடிக்கொண்டு ஒரு மாமி வந்திருக்கிறாள்!"

அடுப்படியில் வேலையாயிருந்த ஜானகியிடம் நூரி வந்து சொன்னாள்.

ஜானகி எழுந்து வந்து பார்த்தாள்.

'அந்தப் பெண்' நின்று கொண்டிருந்தாள். தான் அன்று கணவரின் பையில் பார்த்த நைலான் புடவையை அவள் கட்டிக் கொண்டிருந்ததனால் அந்தப் பெண்தான் என்று யூகித்துக் கொண்டாள் ஜானகி.

"உள்ளே வாருங்கள்!" என்றாள் ஜானகி.

அந்தப் பெண் உள்ளே வந்தாள்.

"அவர் இல்லையா?" — முதல் கேள்வி.

"அவர் என்றால்?" புரியாத மாதிரிக் கேட்டாள் ஜானகி.

"அவர்தான்... உங்கள் கணவர்!"

"ஓ! என் கணவரா! அவர் என் கணவர் தாம் என்கிற விஷயம் உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும்!"

"தெரிந்துமா கல்யாணமாகி மனைவி குழந்தைகள் என்று இருக்கிற ஒருவருடன் நீங்கள்..." ஜானகி அந்தப் பெண்ணைப் பார்த்தாள்.

"மன்னிக்க வேண்டும். முதலில் எனக்குத் தெரியாது. அவருடைய பேச்சை நம்பி என் அண்ணனையும் பகைத்துக் கொண்டு வந்தேன். அவருக்கு இப்படி ஒரு குடும்பம் இருக்கிற விஷயம் சமீபத்தில், உங்களுக்கு நான் துரோகம் செய்கிறேன் என்று என்னைக் கண்டிக்க வந்த கிட்டு என்கிறவர் மூலமாகத்தான் தெரியும்!"

"அப்படியானால்...!"

"அவர் கல்யாணமாகாதவர் என்று நினைத்துத்தான் அவரோடு இந்த எட்டு மாதங்களாக வாழ்ந்து கொண்டிருந்தேன். போன வாரத்திலிருந்து அவர் வீட்டுக்கே வரவில்லை. வீட்டு வாடகை, மளிகைக் கடை பாக்கி, பால் பாக்கி என்று எல்லாரும் மொய்க்கிறார்கள். வித்தியாசமாகப் பேசுகிறார்கள். அதுதான் அவரைத் தேடி இங்கே வந்தேன். என்னைப் பற்றி அவர் உங்களிடம் சொல்லியிருப்பார் என்று நினைக்கிறேன்!" என்றாள் அந்தப் பெண்.

"அவர் உங்களைப் பற்றி என்னிடம் எதுவும் சொல்லவில்லையே; நானாகக் கிட்டுமூலம் தெரிந்து கொண்டேன்."

"உங்களைவிட நான் சின்னவள். ஒருமையிலேயே சொல்லுங்கள்!" என்று உரிமையோடு சொன்னாள் அந்தப் பெண்.

"சரி. என் கணவர் ஒரு வாரமாக வீட்டுக்கு வரவில்லை. வடக்கே எங்கேயோ போயிருக்கிறார். அவர் எப்போது திரும்புவார் என்று எனக்குத் தெரியாது. அவர் கையில் நிறையப் பணம் இருக்கிறது. அது கரைந்ததும் ஆறுமாதங்களோ ஒரு வருடமோ கழித்துத்தான் வருவார். இதெல்லாம் அவரோடு வாழ்ந்து எனக்குப் பழக்கமாகிவிட்ட அதிர்ச்சிகள்!"

"எனக்குப் பழக்கமில்லை. ஆறு மாதங்கள் கழித்து வருவாரா! அதற்குள் அவரோடு ஆறுமாதங்களாக வாழ்ந்ததன் அடையாளம் மண்ணில் விழுந்து விடும். அதை வேறு வைத்துக் கொண்டு நான் கஷ்டப்படப் போகிறேன்!"

"அடிப் பாவி! எத்தனை நாள்...?" பெண்ணுக்காகப் பெண்ணுள்ளம் தவித்தது.

"ஐந்து மாதம்!"


"இப்போது என்ன செய்யப் போகிறாய்?"

உடைந்த குரலில் அந்தப் பெண் சொன்னாள்: "ஆறோ குளமோ தேடப் போகிறேன். முன்பின் தெரியாமல் ஒருவரை நம்புவதன் பலன் இப்படித்தானே இருக்கும்!"

"கூடாது. என் கணவர் வருகிறவரை நீ காத்திருக்க வேண்டும். அவர் செய்த பாவத்துக்கு அவரே பிராயச்சித்தம் செய்யட்டும். உன்னை வைத்துக் காப்பாற்றவேண்டும் அவர். அவர் திரும்பி வருகிறவரை நீ இந்த வீட்டிலேயே இருக்கலாம்!" என்றாள் ஜானகி உணர்ச்சியோடு.

"இருக்கிற பாரமே உங்களுக்கு அதிகம் என்பது எனக்குத் தெரியும். நான் வேறு புதிய பாரமாக வேண்டுமா?"

"அப்படியில்லை. என் கணவர் குடும்பத்துக்குச் செய்ய வேண்டிய கடமைகளை நானே செய்கிறேன். என் கணவர் உனக்குச் செய்ய வேண்டிய கடமை உன்னையும், உன் வயிற்றிலே வளருகிற சிசுவையும் காப்பாற்றவேண்டியது. அவர் திரும்புகிறவரை நான் அந்தக் கடமையை மேற்கொள்வேன். அதற்குப் பின் உன் தலையெழுத்துப்படி ஆகட்டும். இனிமேல் இது உன் வீடு. என் மகள் பெரியவளாகிவிட்டாள். அவளுக்குப் பதிலாக நான் வெளியே அப்பளம் விற்க அலையப் போகிறேன். நீ என் குழந்தைகளைக் கவனித்துக் கொண்டு இரு. நாளாவட்டத்தில் நீ அன்னிய மனுஷி என்கிற உணர்வு என் குழந்தைகளுக்கும் போய்விடும்!" அந்தப் பெண் நன்றியோடு ஜானகியின் கையைப் பற்றினாள். வாசலில் ஒரு கொடி இன்னொரு கனிந்த மரத்தின்மேல் படர்ந்து' கொண்டிருந்தது!



23. தாரிணியின் கதை

இருவரும் அவரவர்களுடைய படுக்கையில் உட்கார்ந்திருந்தார்கள். தாரிணி கேட்டுக் கொண்டபடி அன்று முன்னிரவில் நடந்ததையெல்லாம் சீதா தனக்குத் தெரிந்த வரையில் சொல்லியாகிவிட்டது. இப்போது தாரிணியின் முறை வந்திருந்தது.

தாரிணி ஒரு நெடிய பெருமூச்சு விட்டு விட்டுச் சொன்னதாவது: "பழைய காலத்துக் கதைகளில் தங்களுடைய கதைகளைத் தாங்களே சொல்லும் கதாநாயகிகள், 'நான் பிறந்த கதையைச் சொல்லவா? வளர்ந்த கதையைச் சொல்லவா?' என்று ஆரம்பிப்பது வழக்கம். ஆனால் பிறந்த கதையை நான் சொல்ல முடியாது. அதைத் தெரிந்து கொள்வதற்காகத் தான் ரஸியா பேகத்தைத் தேடிக் கொண்டிருக்கிறேன். கடைசியாக, அவளைக் கண்டுபிடித்துவிட்டதாக எண்ணிய சமயத்தில் கைநழுவிப் போய்விட்டாள். அதுவும் நல்லதுதான். இப்பேர்ப்பட்ட பயங்கரச் சம்பவம் நடந்திருக்கும் சமயத்தில் நான் என்ன கேட்க முடியும்? அவள்தான் என்னத்தைச் சொல்ல முடியும்!"

"அவள் உண்மையில் முஸ்லிம் ஸ்திரீதானா, அக்கா! அவளுடைய உண்மைப் பெயர் ரஸியா பேகம்தானா?" என்று சீதா கேட்டாள்.

"இல்லை. அந்த விஷயத்தை அப்புறம் சொல்லுகிறேன். எனக்கு நினைவு தெரிந்த காலத்திலிருந்து அவளைத்தான் என்னுடைய தாயார் என்று நினைத்திருந்தேன். உலகத்திலேயே எந்தத் தாயாரும் அவ்வளவு அன்பாக மகளை வளர்த்திருக்க முடியாது. அப்படி என்னை உயிருக்குயிராக எண்ணிப் பாது காத்து வந்தாள். ஆனால் உலகத்திலுள்ள பெண்களுக்கும் எனக்கும் ஒரு வித்தியாசம் உண்டு என்பது என்னுடைய சிறு பிராயத்திலேயே எனக்குத் தெரிந்து விட்டது. என்னுடைய தாயார் உலகத்திலேயே மற்ற ஸ்திரீகளைப் போல் புருஷருடன் வாழ்ந்து குடித்தனம் செய்யவில்லை. யாருக்கோ பயந்து கொண்டு மறைந்து ஒளிந்து வாழ்வதாகத் தெரிந்தது. அடிக்கடி என் தாயாரைப் பார்க்க ஒரு மனிதர் வந்து கொண்டிருந்தார். அவரை நான் 'அப்பா' என்று கூப்பிடுவது வழக்கம். இந்த வழக்கம் எப்படி வந்தது. தானாக வந்ததா அல்லது யாராவது சொல்லிக் கொடுத்து வந்ததா என்று எனக்குத் தெரியாது. எனக்கு நினைவு தெரிந்தது முதல் அவரை 'அப்பா' என்றே நான் அழைத்து வந்தேன். அவரும் அம்மாவும் சில சமயம் ஒருவருக்கொருவர் ரொம்பவும் பிரியமாக இருப்பார்கள். சில சமயம் புலி கரடி



களைப் போலச் சண்டை போட்டுக் கொள்வார்கள். அவர்கள் உலகத்தில் எல்லாரையும் போலக் கல்யாணம் செய்து கொண்ட கணவனும் மனைவியும் அல்ல என்று எனக்குத் தெரிந்திருந்தது. ஆனாலும் அவர்தான் என்னுடைய தகப்பனார் என்று நம்பிக் கொண்டிருந்தேன். இரண்டு பேரும் அடிக்கடி சண்டையிட்ட போதிலும் ஒரு விஷயத்தில் ரொம்பவும் ஒற்றுமையாயிருந்தார்கள். அதாவது என்னிடம் பிரியமாயிருக்கும் விஷயத்தில்தான். நான் ஏதாவது ஒரு பொருள் வேண்டுமென்று சொல்லிவிட்டால் போதும். உடனே அது வந்து சேர்ந்துவிடும். எனக்கு ஏதாவது கொஞ்சம் உடம்பு சரிப்படாவிட்டால் போதும், இரண்டு பேரும் எனக்காக உயிரைக் கொடுக்கத் தயாராயிருப்பார்கள். என்னை வளர்ப்பதற்கும் படிக்க வைப்பதற்கும் கூசாமல் பணம் செலவு செய்தார்கள். இத்தனைக்கும் அவர்களிடம் பணம் கொட்டிக் கிடக்கவில்லை. நான் சிறுமியாயிருந்தபோது என் தாயாரிடம் விலை உயர்ந்த ஆபரணங்கள் ஏராளமாக இருந்தன. அவை எப்படி வந்தன என்று எனக்குத் தெரியாது. கேட்கவும் எனக்கு மனம் வராது. அந்த நகைகளையெல்லாம் என் தாயார் ஒவ்வொன்றாக என் தகப்பனாரிடம் கொடுத்து விற்றுக் கொண்டு வரச் சொல்வாள். சில சமயம் அப்பாவும் பணம் கொண்டு வருவார். அதை வாங்கிக் கொள்ள முடியாது என்று அம்மா பிடிவாதம் பிடிப்பாள். ஏனெனில் அப்பாவுக்கு வருமானம் அதிகம் இல்லை என்றும் அவர் காப்பாற்ற வேறொரு குடும்பம் இருந்ததென்றும் அம்மாவுக்குத் தெரிந்திருந்தது. சில சமயம் அம்மாவுக்குத் தெரியாமல் அப்பா எனக்குத் துணிமணி வாங்கிக் கொண்டு வந்து கொடுத்து விடுவார். தெரிந்த பிறகு அம்மா அவரைச் சண்டை பிடிப்பாள். இந்தவிதமாக என்னுடைய வாழ்க்கை நடந்து கொண்டிருந்தது. கான்வென்ட் பள்ளிக்கூடத்தில் படித்தபோது நிருபமா என்ற பெண் எனக்குச் சிநேகிதி ஆனாள். என்னுடைய வளர்ப்பைக் குறித்து நினைத்து நான் சோகத்தில் ஆழ்ந்திருக்கும்போதெல்லாம் நிருபமாவின் சிநேகந்தான் எனக்கு ஒருவாறு உற்சாகம் ஊட்டி வந்தது.....''

''ஆக்ராவில் பார்த்தோமே, அவள்தானே? எனக்கு அவளை ரொம்பவும் பிடித்திருந்தது. சிநேகம் என்றால் அப்படியல்லவா இருக்க வேண்டும்?'' என்று குறுக்கிட்டுச் சொன்னாள் சீதா.

''ஆம், அவள்தான்! எங்கள் இருவருக்கும் ஒரே வயது. எங்களுக்கு வயதாக ஆக, வருங்கால வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கவும் பேசவும் ஆரம்பித்தோம். ஒருவருக்கொருவர் அந்தரங்கத்தை வெளியிட்டுக் கொண்டோம். இரண்டு பேரும் கல்யாணமே செய்து கொள்வதில்லை என்றும் தேச சேவைக்கே எங்கள் வாழ்நாளை அர்ப்பணம் செய்வது என்றும் தீர்மானம் செய்தோம். ஆனால் நிருபமா அந்தத் தீர்மானத்திலிருந்து மாறிவிட்டாள். சீதா! நீதான் பார்த்தாயே? அவளை அவ்வளவு இலட்சணமானவள் என்று உலகத்தார் சொல்ல மாட்டார்கள். இதை நிருபமா உணர்ந்திருந்தபடியால் தனக்குக் கல்யாணமே வேண்டாமென்று சொல்லி வந்தாள். ஆனால் வெளி அழகை மட்டும் பாராமல் அகத்தின் அழகைத் தெரிந்து பாராட்டக்கூடிய ஒருவர் வந்து சேர்ந்தார். அவரை நிருபமா கல்யாணம் செய்து கொண்டு இப்போது சந்தோஷமாயிருக்கிறாள். அவள் பாக்கியசாலி.''

தாரிணியின் கண்களில் அப்போது கண்ணீர் துளித்ததைச் சீதா பார்த்தாள். அவளுடைய மனம் கனிந்தது.

''அக்கா! நிருபமாவைப் போல் நீங்களும் ஒரு நாள் பாக்கியசாலியாவீர்கள்'' என்றாள்.


''அவளுக்கும் எனக்கும் வித்தியாசம் உண்டு, சீதா! என்னுடைய குறை என்னுடைய பிறப்பைப் பற்றியது. தாயாரும் தகப்பனாரும் இன்னார் என்று தெரியாத என்னைக் கல்யாணம் செய்து கொள்ளக்கூடிய புருஷன் இந்த நாட்டில் எங்கே இருக்கிறான்? அப்படி ஒருவன் இருந்து சம்மதித்தாலும், அவனுடைய பந்துக்கள் சம்மதிக்க வேண்டுமே? நம் தேசத்தில் கல்யாணம் நடப்பது பந்துக்களின் சம்மதத்தைப் பொறுத்தல்லவா இருக்கிறது? அது போகட்டும். எனக்குக் கல்யாணத்தில் இஷ்டம் இல்லை. இப்போதும் இல்லை; எப்போதும் இருக்கவில்லை. தேச சேவையில் உண்மையாகவே ஆர்வம் இருந்தது. பம்பாயில் உப்பு சத்தியாக்கிரஹ இயக்கம் நடந்தபோது நிருபமாவும் நானும் அதிலே சேர்ந்தோம். எங்களுடைய சிறு பிராயத்தை முன்னிட்டு எங்களைச் சிறைக்கு அனுப்பவில்லை.

நகரத்துக்கு வெளியிலே பல தடவை கொண்டு விட்டார்கள். ஒவ்வொரு தடவையும் நானும் நிருபமாவும் சேர்ந்தேயிருந்தபடியால் எங்களுக்குப் பெரிய தமாஷா யிருந்தது. அந்த இயக்கம் முடிவடைந்ததும் கராச்சி காங்கிரஸுக்குப் போனோம்....''

இவ்விடத்தில் தாரிணி நிறுத்திச் சற்று நேரம் மௌனமாயிருந்தாள். ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு மேலே கூறினாள்: ''பிறகு இந்தப் புண்ணிய பாரத பூமியைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்று ஆசை உண்டாயிற்று. காஷ்மீரம் முதல் சென்னை வரையில், கராச்சியிலிருந்து கல்கத்தா வரையில் ஊர் ஊராகச் சென்று பார்த்தோம். பிற்பாடு பீஹார் பூகம்பத்தைப் பற்றிய பயங்கரச் செய்திகள் வந்து இந்தத் தேசத்தையே ஒரு குலுக்குக் குலுக்கி விட்டன. பம்பாயிலிருந்து பூகம்ப சேவை செய்வதற்குப் புறப்பட்ட தொண்டர் படையில் நானும் நிருபமாவும் சேர்ந்து சென்றோம். பூகம்பத்தில் கஷ்டப்பட்டவர்களுக்குச் சேவை செய்துகொண்டிருந்த காலத்தில் எங்கள் இருவருடைய வாழ்க்கையிலும் ஒவ்வொரு முக்கிய சம்பவம் நிகழ்ந்தது. நிருபமா வேணிப் பிரஸாதைச் சந்தித்தாள்: சில காலத்துக்குப் பிறகு அவரைத் தன் வாழ்க்கைத் துணைவராகக் கொண்டாள்!''

''அக்கா! மேலே சொல்லுங்கள். முக்கியமான இடத்தில் கதையை நிறுத்திவிட்டீர்களே? நிருபமா தேவியின் வாழ்க்கையில் திருமணம் நிகழ்ந்தது; உங்களுடைய வாழ்க்கையில் என்ன முக்கிய சம்பவம் நடந்தது?'' என்று சீதா ஆவலுடன் கேட்டாள்.


'' நிருபமாவுக்கு மணம் நிகழ்ந்தது; எனக்கு மரணம் நிகழ்ந்தது! — ஏதோ பிதற்றுகிறேன் என்று நினைக்க வேண்



டாம். சீதா! எனக்குத் தெரிந்தவர்கள் அனைவருக்கும் நான் செத்துப் போனவள் ஆனேன். அப்படி எல்லோரும் என்னை அடியோடு மறந்துவிட வேண்டும் என விரும்பினேன். ஆகையால், நான் இறந்துவிட்டதாக என்னுடன் சேவை செய்தவர்கள் நம்பும்படி செய்துவிட்டு அங்கிருந்து கிளம்பினேன். இதற்குக் காரணம் நீ பத்திரிகையில் எந்தச் செய்தியைப் பார்த்துவிட்டு என் தாயார் பேரில் சந்தேகப்பட்டாயோ, அதே செய்திதான். என் தாயார் கொலை செய்ய முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டாள் என்கிற செய்தி அப்படி என் மனத்தைக் குழப்பிவிட்டது. இந்த உலகத்திலேயே என்னுடைய பூரண அன்புக்கு உரியவளாயிருந்தவள் என் தாயார்தான். என் தகப்பனார் என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேனே, அவர் பேரில் எனக்கு எப்போதும் அவ்வளவு பிரியம் ஏற்பட்டதில்லை. ஆனால் தாயார் மீது உயிருக்குயிரான நேசம் நான் வைத்திருந்தேன். அவளுடைய நடத்தையைப் பற்றி எவ்வளவு குறைகள் என் மனத்தில் தோன்றினாலும் அவ்வளவையும் மீறி அவள் மீதுள்ள பிரியம் மேலோங்கி நின்றது. சில வருஷங்களாக அடிக்கடி அவளைப் பிரிந்து நான் நாடு சுற்றியபோதிலும் அவள் மீது எனக்கிருந்த பாசம் சிறிதும் குன்றவில்லை. அவளுக்கு இந்த அபகீர்த்தி, — இந்தக் கஷ்டம், — நேர்ந்ததை என்னால் சகிக்க முடியவில்லை. ஒரு மகாராஜாவை அவள் கொல்ல முயன்றது ஏன் என்பதை எண்ணிப் பார்த்த போது என்னவெல்லாமோ உருப்படியில்லாத சந்தேகங்கள் தோன்றின. இப்படிப்பட்ட நிலைமையில் டில்லி ரயில்வே ஸ்டேஷனில் என் தகப்பனாரைச் சந்தித்தேன். அது வரையில் என்னுடைய தகப்பனார் என்று நினைத்துக் கொண்டிருந்த மனிதரைத்தான். அவர் எனக்கு ஆறுதலாக இருக்கட்டுமென்று சில செய்திகளைச் சொன்னார். அவற்றில் ஒன்று என்ன தெரியுமா? அதுவரையில் என்னுடைய தாயார் என்று நான் நினைத்திருந்தவள் உண்மையில் என் தாயார் அல்ல என்றுதான். இது எனக்கு ஆறுதல் அளிப்பதற்குப் பதிலாகச் சொல்ல முடியாத துன்பத்தை அளித்தது. இருள் நிறைந்த என் வாழ்க்கையில் ஒரே ஒரு தீபம் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அதுவும் இப்போது அணைந்து போய்விட்டது. அவள் என் தாயார் இல்லையென்றால் இவரும் என் தகப்பனார் இல்லை. பின் நான் யாருடைய மகள்? என் தாயார் யார்? தகப்பன் யார்? சீதா! என் வளர்ப்புத் தாய் அவ்வப்போது ஆத்திரமாகப் பேசிக் கொண்டிருந்த சில வார்த்தைகளுக்கு இப்போது பொருள் நன்றாகத் தெரிந்தது. அதிலிருந்து யாரோ ஒரு சுதேச சமஸ்தான ராஜாவின் மகள் நான் என்ற சந்தேகம் உதித்தது. என் வளர்ப்புத் தாய் அடிக்கடி ஜாகை மாற்றிக் கொண்டிருந்தது, ரமாமணி என்ற பெயரை மாற்றி ரஸியாபேகம் என்று வைத்துக் கொண்டது இதற்கெல்லாம் ஒருவாறு காரணம் தெரிந்தது. என் வளர்ப்புத் தந்தை இன்னொரு விஷயமும் சொன்னார். என் தாயார் 'ரஸியா பேகம்' என்று வைத்துக்கொண்டதுடன், 'நான் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்துவிடப் போகிறேன். அப்போதுதான் ஆண் மக்களுடைய தொல்லையில்லாமல் தைரியமாக வாழ முடியும்!' என்று சொல்லிக் கொண்டிருப்பாள். கொலை செய்ய முயன்றதற்குச் சில நாளைக்கு முன்னால் உண்மையாகவே அவள் முஸ்லிம் மதத்திலே சேர்ந்துவிட்டதாக என் வளர்ப்புத் தந்தை தெரிவித்தார். இதனையெல்லாம் நான் அடைந்த மன வேதனையை என் வளர்ப்புத் தந்தை தெரிந்து கொள்ளவில்லை. அவருக்கு வேறொரு முக்கியமான காரியம் இருந்தது. எனக்குத் தைரியம் சொல்லிவிட்டு, 'தம்மை மறுபடியும் சந்திப்பதற்கு இடமும் தேதியும் குறிப்பிட்டுவிட்டு அவர் போனார். ஆனால் அவரை நான் சந்திக்கவேயில்லை. சந்திப்பதற்கு மனமும் இல்லை. தாயார் விடுதலை அடையும் காலத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தேன். குறிப்பிட்ட தேதியில் சிறை வாசலுக்குப் போனேன். ஆனால் அன்று எந்த ஸ்திரீயும் விடுதலை அடையவில்லை. விசாரித்ததில், சிறைக்குள்ளேயும் ரஸியா பேகம் யாரையோ குத்திக் கொல்ல முயற்சி செய்ததாகவும், அவளைப் பைத்தியம் என்று சந்தேகித்துப் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு மாற்றிவிட்டதாகவும் தெரிந்தது. பைத்தியக்கார ஆஸ்பத்திரியை விசாரித்துக் கொண்டு அங்கே போனேன். அங்கே பைத்தியம் தெளிந்து அவள் விடுதலையாகிப் போய்விட்டதாகத் தெரிந்தது. அன்று முதல் ரஸியா பேகத்தை நான் தேடிக் கொண்டிருக்கிறேன். சீதா! அதற்காகவேதான் ரஜனிப்பூருக்கு நான் வந்தேன். 'ரஜனிப்பூர் பைத்தியம்' என்று ஒரு ஸ்திரீ டில்லியில் சுற்றி அலைந்து கொண்டிருப்பதாக அங்கே கேள்விப்பட்டேன். அதன் பேரில் டில்லியிலும் தேடிக் கொண்டிருந்தேன். கடைசியாக அவளைச் சந்தித்திருக்கக்கூடிய தினத்


"ஆஹா!
எவ்வளவு
மென்மை என்ன
அற்புதமான
சுவை! நீ இதை
எவ்விதம்
தயாரிக்கிறாய்?"
மிக சுலபம்
கேஎம்பி
நல்லெண்ணெ
யினுல்!
உங்களுடைய சமைய
லுக்கு தனியான் சுவை
யைக் கொடுக்க கேஎம்பி
நல்லெண்ணெயைப்
போல் வேறு எதுவுமில்லே.
உங்கள் தோழிகள் உங்
களைப்பார்த்து பொருமை
யடையச் செய்யுங்கள்.
பொறுக்கியெடுக்கப்பட்ட
எள்ளின் போஷாக்குடன்
கை தேர்ந்த தொழில்
நுணுக்க மேற்பார்வை
யின் கீழ் தயாரிக்கப்படும்
கேஎம்பி நல்லெண்
ணெயே நீங்கள் மிக விரும்
பும் சமையல் சாதனம்.
KMP
Pure and Hygienic
TIL OIL
அது மிக சுத்தமானது
என நிச்சயமடைவீர்
அது கேஎம்பி தானு
என்று நிச்சயமடைவீர்
ஒரு kmp தயாரிப்பு.
காளுராம் மஹாதேவ் பிரசாத் ● தலைமை ஆபீஸ் : கல்கத்தா
● கிளைகள் : கௌஹாட்டி, கட்டாக், ராஞ்சி, பாட்ணு, புது டெல்லி, கான்பூர்
Grant 175-72.











தில் இம்மாதிரி பயங்கர சம்பவம் நடந்து விட்டது!....''

அந்த அறையில் சற்று நேரம் மௌனம் குடிகொண்டிருந்தது. பிறகு சீதா, ''ரஸியாபேகம் உண்மையில் பைத்தியம் என்று நீங்களும் நினைக்கிறீர்களா?'' என்று கேட்டாள்.

''எனக்கு எப்படித் தெரியும், சீதா! நான் அவளைப் பார்த்து நாலு வருஷங்களுக்கு மேல் ஆயிற்று. ஒரு வேளை அவள் பைத்தியமாக இருந்தாலும் இருக்கலாம். அவளுடைய மனத்தில் ஏதோ ஒரு பெரிய துவேஷம் குடிகொண்டிருந்தது மட்டும் எனக்குத் தெரியும். துவேஷம் முற்றினால் வெறி. அப்புறம் பைத்தியந்தானே? பைத்தியம் என்று ஏற்பட்டால் ஒரு வகையில் நல்லதுதான். போலீஸாரிடம் அவள் அகப்பட்டால் இன்று நடந்த சம்பவத்துக்காகத் தூக்குப் போடமாட்டார்கள். பைத்திய ஆஸ்பத்திரிக்கு அனுப்புவார்கள்!''

இதைக் கேட்ட சீதா அன்றைய தினம் எப்பேர்ப்பட்ட அபாயத்திலிருந்து தப்பினோம் என்று எண்ணிக் கொண்டாள். வெறியும் பைத்தியமும் ஒரு வேளை தன் பேரில் திரும்பியிருக்கலாமல்லவா? அதிலும் இராத்திரி இரண்டு மணிக்குத் தனியாகச் சென்று அறையைத் திறந்தபோது அவள் திடுக்கிட்டிருந்தால்? கடவுள் தன்னைக் காப்பாற்றினார். குழந்தை வஸந்தி செய்த அதிர்ஷ்டந்தான்!

சற்றுப் பொறுத்துச் சீதா, ''இன்னும் ஒரே ஒரு கேள்வி அக்கா! நான் அணிந்திருந்த இரத்தின மாலையைப் பற்றிக் கேட்டீர்கள் அல்லவா? அதை ரஸியா பேகம் எனக்குக் கொடுத்திருக்கவேண்டும் என்றுதானே கேட்டீர்கள்?'' என்றாள்.

''ஆமாம், அதை உறுதிப்படுத்திக் கொள்ளத்தான் கேட்டேன். என்னை வளர்த்த தாயார் ஒவ்வொன்றாகப் பல நகைகளை விற்ற பிறகு கடைசியாக மிஞ்சியிருந்த நகை அதுதான்.''

''அந்த இரத்தின மாலையையும் அதோடு இரண்டாயிரம் ரூபாய் பணத்தையும் அவள் எதற்காக எனக்குக் கொடுத்தாள்?''

''என்னை ஏன் கேட்கிறாய் சீதா? என் வாயினால் சொல்ல வேண்டுமா; நீயே ஊகித்துத் தெரிந்து கொள்ளக் கூடாதா?'' என்றாள் தாரிணி.

சீதாவின் உள்ளம் அதை ஊகித்துத் தெரிந்து கொண்டுதான் இருந்தது. இப்போது ஊகம் ஊர்ஜிதமாயிற்று. தாரிணி நினைவு வந்த நாளிலிருந்து 'அப்பா' என்று அழைத்துக் கொண்டிருந்த மனிதர் சீதாவின் தந்தையாக இருக்க வேண்டும். தன்னுடைய குழந்தைப் பிராயத்தில் வீட்டில் தரித்திரம் பிடுங்கித் தின்றதன் காரணமும் தன் தாயார் அடிக்கடி சோகக் கடலில் மூழ்கியிருந்த காரணமும் அதுவேதான். அதற்கெல்லாம் பிராயச்சித்தமாகவே அந்த ஸ்திரீ மர்மமாக வந்து இரத்தின மாலை கொடுத்து விட்டுப் போயிருக்க வேண்டும்.

தன்னுடைய கல்யாணத்துக்கு முன்னால் தன் தகப்பனார் டில்லிக்குப் போயிருந்த விஷயம் சீதாவுக்கு நினைவு வந்தது. தாரிணியைப் பார்க்கத்தான் அவர் போயிருக்க வேண்டும். இப்போது அவர் எங்கே இருக்கிறாரோ? தான் பார்த்துப் பல வருஷங்கள் ஆகிவிட்டன. தாரிணியும் அவரைப் பார்க்கவில்லை. அவர் உயிரோடிருக்கிறாரோ என்னமோ? இருந்தால் பெற்ற மகளை ஒரு தடவையாவது வந்து பாராமலா இருப்பார்?

இப்படியெல்லாம் யோசித்துவிட்டுச் சீதா, ''அக்கா! எது எப்படியிருந்தாலும் சரிதான், எப்போதும் நீங்கள் எனக்குத் தமக்கையாகவே இருக்க வேண்டும்!'' என்றாள். கடிகாரத்தில் மணி நாலு அடித்தது. (தொடரும்)

காமகோட்டம் அபிராமி அந்தாதி போட்டி

அபிராமி அந்தாதி 100 பாட்டு, ஆர்யா சதகம் 100 சுலோகங்கள், ஆர்யா சதகத்தின் தமிழாக்கம் 100 பாடல்கள் ஆக 300 பாசுரங்களையும் பிழையின்றி மனப்பாடம் செய்து தேறியவர்களுக்கு ஸ்ரீ காமாட்சி அம்மன் பொற்காசும், இவற்றில் ஏதாவது 200 பாசுரம் மனப்பாடம் செய்தவர்களுக்கு ஸ்ரீ காமாட்சி அம்மன் சிறிய வெள்ளிக் காசும் பரிசுகளாக வழங்கப்படும். ஆங்காங்கு போட்டி நடத்தித் தேர்வுபெற்ற குழந்தைகளின் விவரம் கல்வி நிறுவன ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியர் மூலம் அனுப்ப வேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது. விவரங்களுக்கு **காமகோட்டம் அபிராமி அந்தாதிக் குழு 51, பட்டமங்கலம் தெரு, மாயூரம்** என்ற விலாசத்துக்கு எழுதவும்.

எங்கள் அலுவலகத்தில் எனக்குத் தனி டைப்பிஸ்டு. நானே அவளைத் தேர்ந்து நியமனம் செய்தேன்.

அவள் வந்து பத்து நாட்கள் ஆயிற்று. நிரம்ப வேலைகளைத் துரிதமாகச் செய்து விடலாம் என்று எண்ணினேன். புதிய வேலைகளையும் மேற்கொள்ளத் திட்டம் செய்தேன்.


அவள் ஒரு டைப்பான பெண்.

அவள்.... ஆம். என் மனைவியைவிட ஒல்லி; என் மனைவியைவிட நிறம், என் மனைவியைவிடத் தலை மயிர் அழகு. என் மனைவியைவிடச் சிரித்த முகம். என் மனைவியின் கண்கள் விசாலமான கண்கள். இவள் கண்கள் அத்தனையும் குழந்தைத்தனம் நிரம்பியது !

இத்தனைக்கும் என்னிடம் பிறந்த உணர்ச்சி ஆமாம்! தந்தையின் புனிதமான உணர்ச்சி. உங்களுக்குக் கைக்கெட்டும் தூரத்தில் டைப்பிஸ்டு ஒருத்தி

சு...ம்...மா

டி.என்.சுகிசுப்பிரமணியன்



இருந்தால் என் நினைவுகள் புரிந்திருக்கும். தந்தைத்தனமான அன்பு.

டைப்பிஸ்டு கார்த்திக்கு எங்கள் ஆபீஸ் சூழ்நிலை பிடித்திருந்தது. என்னிடம் பணி புரியவும் பிடித்திருந்தது.

என் மனைவி மீனாட்சியிடம், என் டைப்பிஸ்டு கார்த்தியைப் பற்றி, அவள் போட்டுக் கொண்டு வரும் பாலிஷ், அவள் போட்டுக்கொண்டு வரும் பின்னுஸ், அவள் போட்டுக்கொண்டு வரும் பவுடர் இவையெல்லாம் ஒன்றுவிடாமல் சொல்லுவேன். மறந்துபோனால் நினைவுபடுத்திச் சொல்லுவேன். ஆபீஸ் வேலைகளை மனைவியிடம் சொல்லாதவன் கணவனுவானு ?

ஆபீஸ் வந்தால் மீனாட்சியைப் பற்றி வாயைத் திறக்க மாட்டேன். ஆபீசுக்குள் குடும்பச் சேதி வரக் கூடாது. வீட்டுக்குள், ஆபீஸ் சேதி வரலாம். இது என் பண்பாடு.

நேற்றைக்கு முன் தினம். ஆபீசுக்குப் போகும் வழியில் பூ விற்றுக் கொண்டிருந்தான்.

ஆபீஸ் விட்டு வீட்டுக்குப் போகும்போது பூ வாங்கிப் பழக்கம். ஏன், வீட்டை விட்டு ஆபீசுக்குப் போகும் போதும் பூ வாங்குவது நல்ல பழக்கம்தானே?

எனக்குத் தேவி பக்தி அதிகம். என் அறையில் ஒரு தேவி படம் இருக்கிறது. அதற்கும் போடலாம். பூக்காரனிடம் நல்ல பூவாகப் பார்த்து வாங்கினேன். அவன் பூப்பொட்டலத்தில் ஒரு மனோரஞ்சித மலரையும் செருகித் தந்தான். நான் பூக் கொண்டு வருவதை, மனோரஞ்சித மலர் ஆபீஸ் முழுக்க விளம்பரம் செய்தது. செய்யட்டும். அது பூவின் இயல்பு.

பூக் கொண்டு போன நான் வஞ்சகம் செய்யவில்லை. என் மனத்தில் களங்கம் கிடையாது. பாதியாக நறுக்கிப் படத்துக்குப் பாதி போட்டேன். டைப்பிஸ்டு கார்த்திக்குப் பாதி கொடுத்தேன். மனோரஞ்சிதப் பூவை அவள் கேட்டாள். நான் கொடுப்பேனு? மறுத்துவிட்டேன். மறுமுறையும் கெஞ்சினுள். மனோரஞ்சிதத்தைக் கொடுக்கவில்லை.

" எங்கே சார் பூ வாங்கினீர்கள் ?"

"மதுரை....." என்று நிறுத்தினேன்.

"மதுரைக்குப் போய்விட்டு எப்போது பிளேனில், சென்னைக்கு வந்தீர்கள்?"

"இந்தப் பூ பிளேனில் வந்தது. மதுரை மல்லி."

"சார்! நீங்கள் வாங்கிய பூக்கடை எங்கிருக்கிறது?" என்று மீண்டும் கேட்டாள்.

மடையனுக இருந்தால் முகவரி கொடுப்பான். அவளை 'மாலையில் அழைத்துக்கொண்டு போய்க் கடையைக் காட்டுகிறேன்' என்றேன். இது சொன்ன நேரம் காலை பத்து மணி. அந்த விநாடி முதல் மாலை மணி ஐந்து வரையில் கடி

காரத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள் கார்த்தி !

சும்மா சொல்லக் கூடாது. அவள் கண்கள் எத்தனை அழகு. கடிகாரம் பார்க்கும் போது தான் அழகு என்று எண்ணினேன். என்னைப் பார்த்தாலும் கண் கண்ணாகவும் இருக்கிறது. பார்க்கப் பார்க்க அழகாகவும் இருக்கிறது. அந்த அழகு — மை இட்டிய அவள் விழிக்குள் இருக்கிறதா? வழக்கம்போல் அன்றையத் தட்டெழுத்து முழுமையும் நானே செய்தேன்!

மணி நாலு அடித்ததும் அவளைக் காணோம். ஐந்து மணிக்குத்தான் வந்தாள். தூவிய புதிய பவுடர். இட்ட புதிய கண் மை. புதிய கோணத்தில் தலை சீவியிருந்தாள். புதிய பவுடர் தோளிலும் கழுத்தின் அடியிலும் பரவிக் கிடந்தன. பனி பெய்த மலரைப் பார்ப்பதுபோல் இருந்தது. அவள் புதிய உருவமாக என் கண்களுக்குத் தெரிந்தாள்.

''போகலாமா? பூக்கடையைக் காட்டு கிறீர்களா ?''

நான் எழுந்தேன். என் கையிலிருந்த மனோரஞ்சிதம் வாடி இருந்தது! எனக்குள் அத்தனை உஷ்ணம்.

பூக்கடையில் பூவையை அறிமுகம் செய்தேனு? சும்மா சொல்லக் கூடாது. எனக்குள்ள ஞாபக மறதியை நினைவுபடுத்தினாள், கார்த்தி.

''சார் வீட்டுக்குப் பூ வாங்கவில்லையா ?''

சை! என் மனைவியை சதா நினைக்கும் இவளையல்லவா போற்ற வேண்டும்? அவள் சொல்லி நினைவுபடுத்தாவிட்டால் நான் மறந்தே போயிருப்பேன். இவள் தீர்க்கதரிசி. மேலும் என் வீட்டுக்கு வாங்கிய பூவுக்குத் தான் காசு கொடுப்பேன் என்றாள். அவள் பிடிவாதத்துக்கு வாதம் செய்யாமல் விட்டுப் பிடித்தேன். அவள் வாங்கிய பூவுக்கு என்னைக் காசு கொடுக்கச் சொன்னாள். நான் கொடுத்தேன். என்னே அவளது.....!

அவள் சிரித்தாள். கண் சிரித்தது. இமை சிரித்தது. இமைக்காமல் நான் சிரித்தேன்.

பூக்கொடுத்துச் சிரிக்கத் தொடரும் அன்பு— இது பரிபூரண அன்பு — நண்பன் என்ற முறையில் பிறந்த நட்பு. பூ வழி காணும் அன்பு அற்புதமானது. உண்ணக் கொடுக்கும் விருந்தோம்பல்தான் மனிதனுடைய மிகச் சிறப்பான அன்பு; மிகச் சிறப்பான அம்சம்.

மத்தியானம் எனக்குக் கொண்டு வந்த டிபனை அவளுக்குக் கொடுத்தேன். ''இது என் மனைவி செய்த மலர் அடை! சை ! மலரில் 'பா' சேர்த்துக் கொள். மலபார் அடை. இது தேங்காய் பருப்பி. ஸ்பெஷல் அவியலும் இருக்கிறது'' என்று சொன்னேன். மனைவி கைப்படச் செய்த டிபனை, இத்திப்பை டைபிஸ்டு கார்த்திக்குக் கொடுத்து 'ஈத்துவக்கும் இன்பம்' என்னவென்று அறிந்தேன்.

''என்றால் ஆறு அடை தின்ன முடியும். பன்னிரண்டு தேங்காய்ப் பர்ப்பி விழுங்க முடியும். இவ்வளவு சிறப்பாகப் பக்குவம் செய்ய முடியாது'' என்றாள்.

'' நாளைக்கும் இதே டிபனைச் செய்யச் சொல்லி வாங்கிவருகிறேன். மீனாட்சிக்குத் தன் டிபனைப் பிறர் புகழ்வதில் ரொம்ப ஆசை.''

'' நாளைக்கு நாம் ஹோட்டலில் சாப்பிடலாம்'' என்று சிரித்தாள்.

நாளைக்குப் போய் உட்காருவதற்குள் இன்றே என் மனம் முன்னோட்டம் போட்டது. 'பேமலி' அறைக்குள் போய் உட்காரச் சொன்னது என் பகுத்தறிவு. மறு நாள் எப்போது வரும்? பேமலி அறை எந்தத் திசையில் இருக்கிறது?

மறு நாள் உரிய காலத்தே பிறந்தது. ஆபீஸ் வரும்போது நான் டிபன் கொண்டு வரவில்லை. வீண் கனம் ! இந்த டிபனைத்தான் கடந்த இருபது ஆண்டுகளாகச் சுமக்கிறேனே!

நாங்கள் பேமலி அறைக்குள் நுழைந்தோம். அவளுக்கு வெட்கம் இல்லை. சாப்பிடப் பிறந்தவர்கள் வெட்கப்படமாட்டார்கள். எனக்குப் பயமில்லை. பில் கொடுக்கப் பிறந்தவர்கள் பயப்பட மாட்டார்கள். அவள்-எனது டைப்பிஸ்டு சாப்பிடும்போது தன் சம்பளத்தைப் பற்றி நினைவுபடுத்தினாள். ஹோட்டலில் எவ்வளவு விலைக்கு எவ்வளவுண்டு பொருளைத் தின்னத் தருகிறார்கள்! அது சாம்பிள் இல்லை. அதுவே முழுப் பொருள். அவள் சம்பளம் மாதம் முழுமையும் செலவுக்குக் கட்டாது; கட்டும் புடவைக்கு என்ன செய்வாள்? அவள் சம்பளத்தை உயர்த்த வேண்டும். சம்பளத்தை உயர்த்துவதன் அவசியத்தை அவள் சொல்லவில்லை. நானே சொன்னேன்.

நாங்கள் சாப்பிட்டோம். சாப்பிட்டது அவள். என்னென்ன அவளுக்குப் பிடிக்கிறது, எவ்வளவு பிடிக்கிறது என்று கவனித்தேன். ஆற்றில் போட்டாலும் அளந்து போட வேண்டும். சர்வர் ஏமாற்றிப் பில் போட்டுவிடக் கூடாதல்லவா ?

''நீங்கள் சாப்பிடவில்லையே!'' ஐயோ ! குரலில் எத்துணை பரிவு.

அசடு! படு அசடு! நான் விநாடிக்கு விநாடி அவளையே கண்களால் உண்டு மனத்



''ஜன்னலுக்குத் திரை, வாசலுக்குத் திரை, வெண்டிலேட்டருக்கும் திரை போடச் சொன்னீங்களே சார்! எதற்கு இத்தனை திரை ?''

''நான் நித்திரை புரிவதை மற்றவர் பார்க்கலாமா ?''

தால் மென்று விழுங்கிக் கொண்டிருந்தேன். இதனை அவள் அறியாள். அவள் பேதை.

இச்சமயம் 'பேமலி' அறைக்குள் என் மாமியார் — மீனாட்சியின் தாயார் — வந்தாள். மாமியாரைக் கண்டு நான் மரியாதை செலுத்த வேண்டும். "என்ன சௌக்கியமா?" என்று கேட்டு வைத்தேன். என் மாமியார் சங்கோஜி. தலையைக் குனிந்து கொண்டு நடந்தார். அந்தக் காலத்து மனுஷி.

"அந்தம்மா யார்?" என்றாள் டைப்பிஸ்டு.

"என் மாமியார்" என்றேன். உறவைச் சொன்ன உத்லாகம் குரலில் குதிபோட்டது.

மறுகணம் சும்மா சொல்லக் கூடாது! வானத்து மின்னல் துள்ளுவது போல் என் மாமியார் புடவையைப் போய்ப் பிடித்தாள். என் மாமியாரின் பக்கம் நின்ற காட்சி கண் கொள்ளாக் காட்சி. கானகத்தில் காட்டு எருமைப் பக்கம் மான் குட்டி நிற்பது நினைவுக்கு வந்தது. ஏதோ பேசிவிட்டுத் திரும்பினாள்.

"உங்கள் மாமியாரிடம் என்ன சொன்னேன், தெரியுமா?"

"தெரியாதே!"

"நீங்கள் வீட்டுக்குப் போனாலும் அது என்னவென்று தெரியும்."

எங்கள் அறைக்குள் வந்தோம். நானே பேசினேன். நானே ஷார்ட் ஹாண்டு எழுதிக் கொண்டேன். நானே டைப் அடிக்கத் தொடங்கினேன். நேரம் ஓடிக் கொண்டிருந்தது. மணி ஐந்தடித்தது.

அலுவலகம் கலையத் தொடங்கிற்று. யாவரும் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். "நாளைக்கு மலபார் அடை, ஸ்பெஷல் அவியல் செய்யச் சொல்லுகிறேன். மீனாட்சி தருவாள். கொண்டு வரட்டுமா?" என்றேன்.

அவள் பதில் பேசாமல் போய்விட்டாள்.

"நாளைக்கு டிபன் வேண்டுமா, வேண்டாமா?" என்றேன் மீண்டும்.

"நானே காலையில் உங்கள் வீட்டுக்கு வருகிறேன்" என்றாள்.

"சாப்பாட்டுக்குமுன் வந்துவிடு!" என்று கூறிவிட்டு ஹாய்யாக வீட்டுக்குப் போனேன்.

என் மாமியார் என் வீட்டுக்குள் இருந்தாள். என் மாமனார் வந்திருந்தார். அவர்கள் இருவரும் அடிக்கடி வரமாட்டார்கள். ஏதாவது முக்கிய காரியமாக வந்திருக்க வேண்டும்.

எல்லாரையும் வரவேற்றேன்.

அவர்கள் வந்தனம் செலுத்தினார்கள்.

மீனாட்சி மட்டும் குஷியாக இருந்தாள்.

"ஏன்னு?" என்றாள்.

"என்ன?" என்றேன்.

"உங்கள் ஆபீஸ் பக்கம் நியோ லங்க ஹோம் இருக்கிறதாமே!"

"இருக்கிறது. அது இருப்பது இருபது வருஷங்களாகத் தெரியாமல் போச்சு. இன்று என் டைப்பிஸ்டும் நானும் போய்ச் சாப்பிட்டோம்."

"என்னை அழைத்துப் போகக்கூடாதோ?"

"ஞாயிற்றுக்கிழமை போவோம்!"

மீனாட்சி ஞாயிற்றுக்கிழமை எத்தனாம் தேதி என்று காலண்டரைப் பார்த்தாள். நல்ல சுபாவம். தங்க மனசு.

மறு நாள் காலையில் என் மாமனார் போய் விட்டார். மாமியார் மட்டும் இருந்தாள். காலை ஒன்பது மணிக்கு ஆட்டோ ரிக்ஷா வந்து நின்றது. நான் மறந்தே விட்டேன். வந்தவள் டைப்பிஸ்டு கார்த்தி.

"நீங்கள்தானே.... மீனாட்சி....?" என்று மனைவியிடம் வந்து கேட்டாள்.

"நீ யாரம்மா?".

"உங்கள் கணவர்தான் மறைத்தாலும் உங்கள் தாயார் சொல்லியிருப்பாங்களே."

"ஓகோ, அவரே சொன்னார். பேமலி அறையில் டிபன் சாப்பிட்டது நீதானா? மலபார் அடை உனக்குப் பிடிக்குமாமே?"

"மீனாட்சியம்மா! உங்கள் கணவர் உலகம் தெரியாத அப்பாவி. நீங்கள் அவரைக் கண்டித்து வையுங்கள். இவருடைய வெகுளித்தனத்தை வேறொருத்தியானால் பயன்படுத்திக் கொண்டிருப்பாள். நான் கல்யாணமாகாத பெண். குறைந்த சம்பளம் வாங்குகிறவள். எனக்கு உடன் பிறந்த தமக்கை மாதிரி நீங்கள். எனவே எச்சரிக்கை செய்கிறேன்."

டைப்பிஸ்டு கார்த்தியின் ஒவ்வொரு சொல்லும் என் மனத்தில் குதிரை நடக்கும் தகரப் பாலம் போல் சத்தமிட்டது. என் ஆயுளில் இப்படி ஒரு பழியை நான் கேட்டதில்லை.

"என் அம்மா வந்து சொன்னாள். நேற்று நீ உடுத்தியிருந்த பட்டு காஞ்சீபுரமா? இல்லே, கொள்ளேகாலமா! என்ன விலே? அம்மாவுக்கு ரொம்பப் பிடித்திருந்தது" என்றாள் மீனாட்சி.

விலையை டைப்பிஸ்டு கார்த்தி சொன்னாள். பூ! என்ன பிரமாதம்! மீனாட்சிக்கு அதே நிறப் புடவையை வாங்கித் தருவதில் என்னை விட மகிழ்ச்சியுடையவன் யார்? கார்த்திக்கு வாங்கிக் கொடுத்த இதே கை இதனையும் செய்யாதா?

ஞாயிற்றுக்கிழமை வந்தது.

ஏதோ மூந்நூறு ரூபாய் நஷ்டம். மீனாட்சி தனக்கு வேண்டிய புடவையும் ரவிக்கையும் வாங்கிக் கொண்டதில் திருப்தி அடைந்தாள்.

நியோ லங்க ஹோம் ஹோட்டலுக்குள் போனோம். அதற்கு முன் மீனாட்சி ஹோட்டலைப் பார்த்து அறியாதவள்...மிரண்டு போய் விட்டாள். அங்குள்ள சத்தம், அசுத்தம் இரண்டும் அவளுக்குப் பிடிக்கவில்லை. அவளோடு போனபின்புதான் எனக்கும் எச்சில் தெரிந்தது.

கைநனைக்க மறுத்தாள் மீனாட்சி. எனக்கும் சாப்பிடப் பிடிக்கவில்லை. அதே பேமலி அறையில் டைப்பிஸ்டு கார்த்தியும் எங்கள் கம்பெனி முதலாளியின் மகன் — விடலைப் பையனும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்! அதாவது அவள் சாப்பிட்டாள். அவன் பார்த்துக் கொண்டிருந்தான்.

சை! என்ன இருந்தாலும் வீட்டுச் சாப்பாடு, சாப்பாடுதான். வீட்டு டிபன் டிபன்தான். வீடே தனி ருசி!

ஹோட்டல் சர்வர், "ரெண்டு பேர் சும்மா...." என்று கத்தினான்.

இது என்னையும் மீனாட்சியையும் பார்த்துச் சொன்ன வார்த்தையா? இல்லே என்னையும் கார்த்தியையும் எண்ணிச் சொன்னதா?

"சு...ம்....மா....." என்று எதிரொலி செய்தது என் மனம்..... சு..ம்...மா....


அன்பே அகிலா!
கதை: குமரன்
20
சித்திரம்: விஜயா
CRUSH PAKISTAN
ஜெய் பங்களா
CRUSH PAKISTAN



பாக் சிப்பாய்கள்!
வாருங்கள், சந்திர மோகன்!
ஆனால் போலீஸ் பலன்- இல்லை என்பது சீக்கிரமே தெரிந்து விட்டது....
நான் வர மாட்டேன்,

ஒவ்வொருவரின் மேனிக்கும் பாதுகாப்பு தேவை



வியர்வை துர்நாற்றத்திலிருந்தும், அதனல் நுண்ணிய கிருமிகளிட மிருந்தும் உங்களுக்கும், மற்றவர்களுக்கும் ஏற்படும் சங்கடத்தி லிருந்தும் பாதுகாப் பளிக்கிறது.

ஜி-11 கலந்து **சிந்தால் டாய்லெட் பவுடர்** இந்தப் பாதுகாப்பைத் தருகிறது. அதோடு...அன்றலர்ந்த மலரின் நறுமணத்தையும் தருகிறது.

சிந்தால் துர்நாற்றத்தை அறவே போக்கிப் பாதுகாப்பளிக்கும் டாய்லெட் பவுடர்.

Interpub/GSP-6/72R Tam



ஒரு காளி கோயில், அதன் பூசாரி; அவர் ஒரே மகள் கற்பகம்; அந்த ஊர்ப் பெரிய மிராசுதார், அவர் ஒரே மகன் பாபு — அவர்கள் வீட்டிலேயே வளரும் மிராசுதாரின் சகோதரியின் மகள் கமலா. இவர்களைச் சுற்றியே நாடகம் நடக்கிறது.

மிராசுதார், பொய், சூது, புனைசுருட்டு ஆகியவைகளிலெல்லாம் கைதேர்ந்தவர். தம்மைப் பிரபலப்படுத்திக் கொள்ள என்னவெல்லாம் செய்து கொள்ள வேண்டுமோ அவ்வளவையும் சாதித்துக் கொள்கிறார். அந்தப் பாத்திரத்துக்கு ஏற்ற ஓர் ஆசாமியைப் பொறுக்கி எடுத்திருப்பது மிகவும் பாராட்டுக்குரியது. ராஜுவேலு அந்தப் பாத்திரத்துக்கேற்ற காம்பீர்யத்துடன் மேடையில் பீடுநடை போட்டு நாடகத்தைக் களை கட்டும்படி செய்து விட்டார். அவர் தோற்றமும் அதற்குத் துணை புரிந்திருக்கிறது.

சாந்திநிகேதன் நாடகக் குழுவின் டைரக்டரான டி. எஸ். சேஷாத்திரி சற்று ஒதுங்கி நிற்கும் பாத்திரமாகத்தான் எந்த நாடகத்திலும் ஏற்று நடிப்பது வழக்கம். ஆனால், அந்த ஒதுக்கத்திலும் ஒரு லாகவம் இருக்கும்; நாடகத்தின் உயிர்நாடி அந்தப் பாத்திரத்தினுள் அடங்கியிருக்கும். அதே மாதிரிதான் இந்நாடகத்திலும் பூசாரியாக வருகிறார். பூசாரி கதாநாயகரல்லவென்றாலும், நாடகத்தில் பல சிக்கல்களை ஏற்படுத்தி, பிறகு அந்தச் சிக்கல்களைத் தாமே விடுவித்துக் கடைசியில் தம் உயிரைக் கொடுத்து நாடகத்துக்கு உயிர் கொடுக்கிறார். டி. எஸ். சேஷாத்திரியின் அமைதியும், இயல்பும் கலந்த நடிப்பு மிகவும் நன்றாயிருக்கிறது.

ஏ. எம். கண்ணன் கணக்குப்பிள்ளையாக வந்து, கணக்குவழக்கில்லாமல் சிரிப்பு வெடிகளை உதிர்த்துக் கொட்டகையைக் கலகலப்பாக்குகிறார். வழிவழியாக வரும் ஜே.சைமன் நகைச்சுவை விருந்து அளிப்பதில் கணக்குப் பிள்ளைக்குத் துணை நிற்கிறார்.

கதாநாயகனாக நடிப்பதற்கு ஏற்ற தோற்றமும், தகுதியும் படைத்தவர் டி. கே. எஸ். சந்திரன். தம் பாகத்தை உணர்ந்து கச்சிதமாக நடித்தார்.

கற்பகம் சற்றுக் கடினமான பாத்திரம். ஆத்தாளுக்குப் பூத்தொடுக்கவும், தன்னிடம் காதல் கணை தொடுத்த பாபுவின் அந்தஸ்தைச் சுட்டிக்காட்டி அவனுடன் போர் தொடுக்கவும் அவளுக்குச் சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. அந்தச் சந்தர்ப்பங்களையெல்லாம், கற்பகமாக நடித்த விஜயசந்திரிகா சக்கைப் போடு போட்டிருக்கிறார். சோகமாகவும், சந்தோஷமாகவும் அவரால் அநாயாசமாக நடிக்க முடிகிறதே! மெச்சத்தகுந்த நடிப்பு !

பி. ஆர். பிரேமா கமலாவாக நடிக்கிறார். மேடை ஏறி அநுபவம் பெற்ற நடிகையாதலால் அவர் திறமை நன்கு பளிச்சிடுகிறது.

ஹெட்கான்ஸ்டபிள், அவரது பைத்தியக்காரப் பிள்ளை, சினிமா டைரக்டர், சினிமா தயாரிப்பாளர் இப்படிப் பல பாத்திரங்கள் இந்நாடகத்தில் வருகின்றன. இந்தப் பாத்திரங்களை ஏற்றவர்கள் நாடகத்தைக் கனிசமாக நீட்டுவதற்கு உறுதுணையாயிருக்கிறார்கள் ! அதோடு சரி.

நாடகத்தை எழுதியவர் பிரபல எழுத்தாளர் பிலஹரி.

காட்சி ஜோடனைகள் நன்றாயிருக்கின்றன. குறிப்பாகக் காளி கோயில் 'ஸெட்' அற்புதம். மிகப் பழைய கோயிலாகத் தத்ரூபமாகத் தோன்றியது.

வசனங்கள் ரசிக்கும்படி இருந்தன.

காதலில் தோல்வி, வில்லனின் சூழ்ச்சி, கதாநாயகன் — வில்லனின் சண்டை, ஸஸ்பென்ஸ், 'க்ளைமாக்ஸ்' என்றெல்லாம் அதிகமாக அலட்டிக் கொள்ளாமல், சாதாரண நிகழ்ச்சிகளைக் கொண்டு சுவையாகப் பின்னப்பட்டிருக்கும் ''ஆராதனை'' ஒரு சாதனை !

— காந்தன்

உங்கள் கணவர் வேண்டும்
பண்டமெல்லாம் உண்டு மகிழட்டுமே!

ஸான்ஸைம் மல்ட்டி-யென்ஸைம் காம்பௌண்ட்

எல்லா வகை உணவுப் பண்டங்களையும்
விரைவில் ஜீரணிக்கச் செய்கிறது.

மைக்ரோன் செய்யப்பட்ட 'ஸான்ஸைம் காம்பௌண்ட்' ஒரே ஒரு பொட்டலம் பவுடர் அல்லது 3 மாத்திரைகள் அஜீரணத் தொல்லைகளிலிருந்து பூரண விடுதலை அளிக்கிறது. உலகெங்கும் பாராட்டு பெற்ற ஜீரணத் தூண்டுகோலான மல்டி-யென்ஸைம் 'ஸான்ஸைம் காம்பௌண்ட்' இன்சுவையும் நன்மணமும் கொண்டது.

'ஸான்ஸைம் காம்பௌண்ட்' 4 சிறந்த வழிகளில் செயல்புரிகிறது.

- 'ஸான்ஸைம் காம்பௌண்ட்' எல்லாவித உணவுப் பொருட்களையும் ஜீரணித்து, சத்துக்களை உட்கிரகிப்பதோடு பசியையும் தூண்டுகிறது.
- 'ஸான்ஸைம் காம்பௌண்டில்' உள்ள 'ஸிமிகோன்' என்னும் விசேஷ நுரை எதிர்ப்புப் பொருள் வாயுவை விரைவில் கலைத்து, வலியைப் போக்குகிறது.
- 'ஸான்ஸைம் காம்பௌண்ட்' சொற்ப பொழுதில் அமிலங்களை சமனப்படுத்துகிறது.
- 'ஸான்ஸைம் காம்பௌண்ட்' இன்சுவையும் நன்மணமும் கொண்டு இருப்பதால் சாப்பிட அருவருப்பு தோன்றுவதில்லை. மேலும் மலச் சிக்கல் ஏற்படாமல் தடுக்கிறது.


ஜீரண பலமே பூரண நலமாகும்.

உடனடி நிவாரணத்துக்கு மைக்ரோன் செய்யப்பட்ட பவுடர் உட்கொள்ளவும். மாத்திரையாகவும் ஸான்ஸைம் கிடைக்கிறது.

சாப்பிடும் அளவு: உணவுக்குப்பின் தண்ணீருடன் அல்லது தாம்பூலத்துடன் சாப்பிடவும் ஒரு பொட்டலம் அல்லது 2 முதல் 4 மாத்திரைகள்.

இலவச விஞ்ஞான வெளியீட்டுக்கு எழுதவும்.

'ஸான்ஸைம் காம்பௌண்ட்' எல்லா பிரபல மருந்து கடைகளிலும் கிடைக்கிறது.





யூனி ஸாங்க்யோ லிட்.
22, டி. தேசாய் ரோடு, பம்பாய்-26.

PRATIBHA 1711-29 Tam R

தமிழ்நாட்டிற்கு விநியோகஸ்தர்கள்:

M/s கணபதி & கோ, 103/104, லிங்கி செட்டித் தெரு, த.பெ. நெ. 1986, சென்னை-1

சத்திய வெள்ளம்


எட்டாவது அத்தியாயம்

கண்ணுக்கினியாள் கொண்டு வந்து காட்டிய துண்டுப் பிரசுரத்தைக் கண்டு பாண்டியன் அதிர்ச்சி அடையவில்லை. அவன் அவளைச் செல்லமாகக் கடிந்து கொண்டான்: ''இதை ஒரு பெரிய விஷயம் என்று நினைத்துப் பொருட்படுத்தி என்னிடம் காண்பிக்க வந்திருக்கிறாயே; உன்மேல் தான் கோபம் வருகிறது எனக்கு.''

''இதைப் பார்த்து உங்களுக்கு என்ன தோன்றுமோ, எப்படி நினைப்பீர்களோ என்று எனக்கே பயமாக இருந்தது.... அதுதான்...''

''நல்ல பயம்தான்...போ...'' என்று கேலி செய்துவிட்டு வராந்தாவின் பக்கமாகப் போயிருந்த அண்ணாச்சியையும் மணவாளனையும் கூப்பிட்டுக் குரல் கொடுத்தான் பாண்டியன். அவர்கள் உள்ளே வந்ததும் அவர்களிடமும் அந்தத் துண்டுப் பிரசுரத்தைப் பற்றிச் சொல்லிச் சிரித்தான் அவன். கண்ணுக்கினியாளின் அநாவசியமான பயத்தைப் பற்றியும் சொல்லி நகைத்தான். அதைக் கேட்டு மணவாளன் சொன்னார்:

'' நல்லவர்களின் நாணமும் அச்சமும்தான் இன்றைக்கு இருக்கும் தீயவர்களின் மிகப் பெரிய வாய்ப்பு அம்மா! நல்லவர்கள் நாணப்பட்டு ஒரு காரியத்தைச் செய்யத் தயங்கி நிற்பதற்குள் நாணமே இல்லாத காரணத்தால் தீயவர்கள் அதற்கு எதிரான பத்துத் தீமைகளைச் செய்தே முடித்து விடுகிறார்கள். நல்லவர்கள் நாகரிகம் காரணமாக அஞ்சித் தயங்கி நின்றால் தீயவர்கள் அந்த நாகரிகத்தையே ஒரு கோழைத்தனமாகக் கருதி மேலும் மேலும் அச்சுறுத்து





நா. பார்த்தசாரதி



கிறார்கள். அதனால்தான் 'நாணமும் அச்சமும் மட நாய்களுக்கு அன்றோ வேண்டும்' என்று நம் தலைமுறைக் கவியாகிய பாரதியார் கூடப் பாடியிருக்கிறார். 'பிளாக்மெயில்' பண்ணுவது போல் இப்படிக் காரியங்களைச் செய்வதே அன்பரசன் குழுவினரின் வழக்கம். நாம் இதை ஒரு பொருட்டாக நினைத்துத் தயங்குவதுகூட அநாவசியம்...''

''இந்தத் துண்டுப் பிரசுரம் ஒருபுறம் இருக்க இவர் தேர்தலிலிருந்து 'வித்ட்ரா' பண்ணிக் கொண்டு விலகிவிட்டதாக முதலிலேயே ஒரு வதந்தியைக் கிளப்பினார்கள். மறுபடியும் நேற்று இரவிலிருந்து மீண்டும் அப்படி ஒரு வதந்தி பேசப்படுகிறது. இவர் வேண்டாம் என்று கடிதம் எழுதிக் கொடுத்து விட்டதால் வெற்றிச் செல்வனை போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவித்து விடுவார்கள் என்று பேசிக்கொள்கிறார்களே?''... என்பதாக வினவிய கண்ணுக்கினியாளுக்கு அண்ணாச்சி மறுமொழி கூறினார்:

''அதெல்லாம் எதுவும் நடக்கப் போறதில்லே தங்கச்சி! நாம்தான் ஜெயிக்கப்-போறோம். தங்களுக்கு வரப் போற தோல்வியைக் கற்பனை கூடப் பண்ண முடியாமே அதை மறக்கறதுக்காக இப்பிடி ஏதேதோ கதை கட்டி விடறாங்க. தம்பியைப் பார்த்த மகிழ்ச்சியோட நீ நிம்மதியா ஹாஸ்டலுக்குப் போய்ச் சேரு தங்கச்சி. இந்த மாதிரி நோட்டீஸை எல்லாம் கிழிச்சுக் குப்பைக் கூடையிலே எறிஞ்சு காறித் துப்பிட்டுப் போகணும். இதுக்கு மரியாதை அவ்வளவுதான்...''


காலைக் காப்பி சிற்றுண்டிக்குப் பின் மணவாளன், கண்ணுக்கினியாள், மோகன்தாஸ், பொன்னையா முதலியவர்களும், பார்க்க வந்திருந்த வேறு பல மாணவர்களும் சூழ விடுதி அறைக்குப் புறப்பட்டான் பாண்டியன். ஒரு நாள் அவன் பல்கலைக் கழக எல்லையிலேயே காணப்படாமல் எங்கோ கடத்தப்பட்டிருந்தான் என்ற செய்தி மெல்ல மெல்லப் பரவி யிருந்ததால் அவன் திரும்ப வந்ததும் விடுதி அறையைச் சுற்றிலும் பெருங் கூட்டம் கூடிவிட்டது. எல்லாரும் அவனை அன்போடும் அநுதாபத்தோடும் விசாரித்தார்கள். விலகல் மனுவில் கையெழுத்துச் சரி இல்லாததால் வேட்பு மனு செல்லும் என்பதோடு 'கடத்திச் செல்லப்பட்ட நேரத்தில் பாண்டியனை நிர்ப்பந்தப் படுத்தி வாங்கிய எந்தக் கடிதமும் செல்லாது' என்று முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர்கள் கொடுத்த புகார்க் கடிதத்தையும் ஆதாரமாகக் கொண்டு இறுதிப் பட்டியலை வெளியிட்டிருந்தார் பேராசிரியர் பூதலிங்கம். இறுதிப் பட்டியல் வெளியானதும் அன்பரசனும் அவன் குழுவைச் சேர்ந்தவர்களுமாக ஓர் எழுபது எண்பது பேர் கடுமையான கோஷங்களோடு பேராசிரியர் பூதலிங்கத்தின் வீட்டை நோக்கி ஊர்வலமாகப் போனார்கள். கோஷங்களும் கூப்பாடுகளும் பேராசிரியரை எதிர்த்து ஒலித்தன. பேராசிரியரைப் பாண்டியனின் கைக்கூலியாக வர்ணித்தார்கள் அவர்கள். 'தேர்தல் போட்டியிலிருந்து விலகிக் கொள்வதாக எழுதிக் கொடுத்த பாண்டியனின் பெயர் எப்படிப் பட்டியலில் இருக்க முடியும்?' என்பதுதான் அன்பரசன் குழு மாணவர்களின் கோபமாயிருந்தது.

அங்கே பேராசிரியர் பூதலிங்கத்தின் வீட்டு முன்புறத்தில் போய்க் கூட்டமாக நின்றுகொண்டு குரல்களை முழக்கினார்கள் அவர்கள். பேராசிரியர் வெளியே வந்தார். அவருடைய கம்பீரமான தோற்றத்தை எதிரே கண்டதும் அவர்கள் கட்டுப்பட்டார்கள். அன்பரசன் பேராசிரியரின் அருகே போய்க் கேட்டான்:

''போட்டியிலிருந்து பாண்டியன் விலகிக் கொள்வதாய்க் கடிதம் எழுதி அனுப்பி விட்டதாகக் கேள்விப்பட்டோம். அதன்படி பார்த்தால் பட்டியலில் பாண்டியனின் பெயரை நீக்கிவிட்டுப் பேரவைச் செயலாளர் பதவிக்கு வெற்றிச் செல்வன் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டதாக அறிவித்திருக்க வேண்டும். நீங்களோ இறுதி வேட்பாளர் பட்டியலை அறிவித்து ஒட்டியுள்ள சுற்றறிக்கையில் பாண்டியனும் போட்டியிடுவதாக அறிவித்திருக்கிறீர்கள்...''

''ஆமாம்! அப்படித்தான் அறிவித்திருக்கிறேன். அதற்கென்ன வந்தது இப்போது?''

''இரு சாராருக்கும் பொதுவில் தேர்தல் அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கும் தாங்கள் ஒரு சாராருக்காகச் சார்பு காட்டிச் சாய்ந்து செயல்படுகிறீர்கள் என்று தெரிகிறது.... அதை நானும் எங்கள் தரப்பு மாணவர்களும் வன்மையாகக் கண்டிக்கிறோம்....''



இதைக் கேட்டுப் பேராசிரியர் அன்பரசனையும் அவனோடு வந்திருந்தவர்களையும் அலட்சியமாக ஏறிட்டுப் பார்த்தார்; சிரித்தார். அவர்கள்மேல் கோபப்படுவது கூட அவர்களை ஒரு பொருட்டாக மதித்ததாகி விடுமென்றுதான் அவர் நகைத்தார். அன்பரசன் ஆவேசமாகக் கூறியதை யெல்லாம் கேட்டுக் கொண்டு பின்பு நிதானமாக மறுமொழி கூறினார்:

''சட்டப்படி பட்டியலிலிருந்து எந்தப் பெயர்களையாவது நீக்க வேண்டியதிருக்குமானால் அது உன் பெயராகவும் வெற்றிச் செல்வன் பெயராகவும்தான் இருக்கும். மாணவர்கள் அல்லாத குண்டர்களையும் சேர்த்துக் கொண்டு அன்றிரவு வி. சி. வீட்டிலிருந்து அமைதியாகத் திரும்பிக் கொண்டிருந்த மாணவர் கூட்டத்தின் மேல் கல்லெறி நடத்தினீர்கள். அரசியல் செல்வாக்குள்ள உள்ளூர்க்காரர்களின் உதவியோடு பாண்டியனை விடுதியிலிருந்து கடத்திக் கொண்டு போய்ப் பயமுறுத்தி விலகல் கடிதம் எழுதி வாங்கித் தபாலில் அனுப்பினீர்கள். இந்தக் காரியங்களை யெல்லாம் நீங்கள்தான் செய்தீர்கள் என்பதற்கு

எங்களிடம் போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன. நீங்களே எழுதி வாங்கி அனுப்பிய பாண்டியனின் விலகல் மனு செல்லாது.''

அன்பரசனால் உடனே அவருக்கு மறுமொழி எதுவும் கூற முடியவில்லை. ஆடு திருடிய கள்ளன் போல் திருதிருவென்று விழித்தான் அவன். உடனிருந்த வெற்றிச் செல்வன் குமுறினான்:

''நீங்கள் தமிழ்ப் பகைவர்! தமிழ் மட்டுமே கற்கும் என்னைப் போன்றதொரு கீழ்த் திசைக் கலைப் பிரிவு மாணவன் பேரவைச் செயலாளனாக வருவதை நீங்கள் விரும்ப மாட்டீர்கள்.''

''நான் விரும்புகிறேனா, விரும்பவில்லையா என்பதல்ல பிரச்னை! மாணவர்கள் உங்களை விரும்புகிறார்களா இல்லையா என்பதை அறிவதற்காகத்தான் இந்தத் தேர்தலே நடக்கப் போகிறது. உங்களுக்குப் பிடிக்காதவர்களை யெல்லாம் தமிழ்ப் பகைவர்கள் என்று பெயர் சூட்டி வசை பாடுவதை வெகு நாட்களாக நீங்கள் செய்து வருகிறீர்கள். தமிழ் மொழியை நான் நேசிக்கிறேனா, இல்லையா என்பதற்கு உங்களைப் போன்றவர்களின் 'சர்டிபிகேட்' எதுவும் எனக்குத் தேவையில்லை. போய் வாருங்கள்'' என்று முகத்தில் அறைந்தது போல் கூறிவிட்டு வீட்டுக்குள் போய்விட்டார் பூதலிங்கம். மேலும் பத்து நிமிஷங்கள் கூக்குரல் போட்டுவிட்டு வி. சி. மாளிகையை நோக்கிச் சென்றது அந்தச் சிறு கூட்டம். ஜன்னலோரமாக நின்று வாசலில் வந்திருக்கும் மாணவர் கூட்டத்தையும் அவர்கள் குரல்களையும் கேட்டுக் கொண்டிருந்த பூதலிங்கத்தின் மனைவியும் மகளும் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் மகனும் அவர் உள்ளே திரும்புவதைக் கண்டு விரைந்து அந்த இடத்திலிருந்து கலைந்தனர். பேராசிரியரின் மனைவி அவரைக் கோபித்துக் கொண்டாள்:

''இந்த வம்பிலே நீங்க ஏன் தலையைக் கொடுத்தீங்க? இராத்திரின்னும் பகல்னும் பாராமே ஒருத்தன் மாத்தி ஒருத்தன் தேடி வாராங்க. எம். எல். ஏ எம். பீ.ன்னு கட்சிக்காரங்ககூட இந்தச் சுண்டைக்காய் எலெக்ஷனுக்காக இங்கே வந்து உங்க கழுத்தை அறுக்கறாங்களே? எல்லாம் போதாதுன்னு இப்ப ஊர்வலம் வேற வந்தாச்சு... இன்னும் என்னென்ன நடக்கப் போகுதோ?''

''ஒண்ணும் நடக்காது! நீ ஏன் இதையெல்லாம் வந்து கவனிக்கிறே? உன் வேலையைப் பாரு'' என்று மனைவியை உள்ளே அனுப்பிவிட்டுப் பல்கலைக் கழகத்துக்குப் புறப்படுவதற்காக உடை மாற்றிக் கொள்ளத் தொடங்கினார் அவர். இசைக் கல்லூரியில் வாத்திய இசைப் பிரிவில் வீணை கற்றுக்கொண்டிருந்த பேராசிரியரின் மூத்த மகள் கோமதியும் அவரோடு பல்கலைக் கழகத்திற்குப் புறப்படத் தயாரானாள்.

''என்ன இருந்தாலும் இந்த அன்பரசன், வெற்றிச் செல்வன் ஆட்கள் ரொம்ப மோசம் அப்பா! எதிலேயும் எந்த அளவுக்கும் தரக் குறைவா இறங்கிடறாங்க இவங்க... எங்க ஃபைன் ஆர்ட்ஸ் பிரிவிலே 'டிராமா' வகுப்பிலே கண்ணுக்கினியாள் என்று ஒரு பெண் இருக்கா. அவ இந்த ஸ்டூடன்ஸ் கவுன்ஸில் எலெக்ஷனிலே பாண்டியனுக்காகவும் மோகன் தாஸுக்காகவும் சிரமப்பட்டு அலைஞ்சு பாடுபடறா. அது பொறுக்காம இவங்க நேத்து பாண்டியனையும் இந்தப் பெண்ணையும் பற்றிக் கதை கட்டி ரொம்ப 'சீப்பா' ஒரு நோட்டீஸ் அடிச்சிருக்காங்க. ஆனா அந்த நோட்டீஸை யாரும் நம்பல்லே. லேடீஸ் ஹாஸ்டலிலும் மாணவிகள் மத்தியிலும் இந்தப் பெண்ணுக்கு ரொம்ப நல்ல பேரு. அந்த நோட்டீஸ் ஒருவேளை இந்தப் பெண் மனத்தைப் புண்படுத்தியிருக்கலாம். ஆனால் மாணவிகள் அத்தனை பேருடைய அநுதாபமும் இந்தப் பெண்மேல்தான். இவளையும் பாண்டியனையும் பற்றி இப்படி நோட்டீஸ் அடித்தவர்கள் அகப்பட்டால் அவர்களை மாணவிகள் சும்மாவிட மாட்டார்கள்'' என்றாள் பேராசிரியரின் பெண் கோமதி. வீட்டிலிருந்து வெளியேறிப் பேசிக் கொண்டே பல்கலைக் கழகத்துக்குச் சென்றார்கள் அவர்கள்.

''பாண்டியன் தங்கமான பையன்! அவனைப் பற்றி யார் என்ன கதை கட்டினாலும் அது இந்தப் பல்கலைக் கழக எல்லையில் எடுபடாது. நீ சொல்கிற அந்தப் பெண்ணும் நல்ல மாதிரி. அன்றைக்குப் பாண்டியனையும் மோகன் தாஸையும் போலீஸ் பிடித்துக்கொண்டு போனபோது அவள் என்னைச் சந்தித்து விவரம் சொல்வதற்காக 'ஸவுத் பிளாக்' கில் டிபார்ட்மெண்ட் அறைக்கு வந்திருந்தாள். பணிவாகவும், மரியாதையாகவும் நடந்து கொண்டாள். பாண்டியன் மேல் அவளுக்கு அளவற்ற பிரியம் இருப்பது தெரிந்தது.''


''மாணவிகள் மத்தியில் கூடப் பழகும் விதத்தினாலும் கலகலவென்று சிரிக்கச் சிரிக்கப் பேசும் சுபாவத்தினாலும் அவள் எல்லாரையும் விட நல்ல பெயர் வாங்கி விட்டாள் அப்பா.''

பல்கலைக் கழகத்துக்குள் இசைக் கல்லூரிக்கு வழி பிரியும் இடத்தில் கோமதி தந்தையிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டாள். பேராசிரியர் தென் பகுதிக்

சோஷலிச ஜனநாயகம் மட்டுமே உண்மையான ஜனநாயகம்

சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினரும் தனிப்பட்ட நலத்திற்காக வாழ்வதில்லை. எல்லோருடைய நலத்திற்காகவே வாழ்கின்றனர். இந்தப் பொதுநல உணர்ச்சியே, மனித குலம் தன் சக்தியனைத்தையும் பயன்படுத்தி உயர் வளர்ச்சி காண்பதற்கான சூழ்நிலையை நல்குகிறது.

— ஸ்ரீ அரவிந்தர்




பெண்கள் என்றாலே
சில நாட்களில்
அசௌகரியமும் வலியும்
ஏற்படுவது சகஜம்.

கட்டிடத்திலிருந்த தம் அறைக்குப் போய்ச் சேர்ந்தார். கோட்டைக் கழற்றி மாட்டிவிட்டு, பியூனை மணி அடித்துக் கூப்பிட்டு ஒரு கிளாஸ் தண்ணீர் கொண்டு வரச் சொன்னார் அவர். தண்ணீரைப் பருகிவிட்டு மேஜை மேல் இருந்த தபால்களையும் பொருளாதார சம்பந்தமான பத்திரிகைகளையும் கவனிக்கத் தொடங்கினார்.

அப்போது ஃபோன் மணி அடித்தது. எடுத்தார். துணைவேந்தர் அவரை உடனே பார்க்க விரும்புவதாகத் துணைவேந்தர் அறையிலிருந்தே பதிவாளர் பேசினார். கோட்டை எடுத்து மாட்டிக் கொண்ட பின் மாணவர் பேரவைத் தேர்தல்கள் பற்றிய தாள்கள் அடங்கிய ஃபைலையும் எடுத்துக் கொண்டு துணைவேந்தரைச் சந்திக்கப் புறப்பட்டார் பேராசிரியர் பூதலிங்கம்.

பல்கலைக் கழகப் பிரதான கட்டிடத்தின் மாடியில் வலது கோடியிலிருந்த துணைவேந்தர் அறைக்குள் பூதலிங்கம் நுழைந்தபோது பதிவாளர் ஏதேதோ கடிதங்களில் தாயுமானவனாரிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டிருந்தார். நிமிர்ந்து பார்த்துப் பூதலிங்கத்தை உட்காரச் சொல்லிவிட்டுச் செய்துகொண்டிருந்தவேலையைத் தொடர்ந்தார் துணைவேந்தர். கையெழுத்து வாங்கி முடித்த தாள்களோடும் ஃபைல்களோடும் பதிவாளர் வெளியேறியதும் துணைவேந்தரின் கவனம் திரும்பியது.

''மிஸ்டர் பூதலிங்கம்! இன்று காலை நான் வீட்டை விட்டுப் புறப்படு முன் மாணவர்கள் ஊர்வலமாக வந்து என்னிடம் ஒரு புகார்க் கடிதம் கொடுத்திருக்கிறார்கள். அபேட்சை மனுவை வாபஸ் வாங்கிக் கொண்டதாகக் கடிதம் எழுதிய ஒரு பையனின் பெயரையும் காலையில் வெளியிட்ட ஃபைனல் லிஸ்டில் நீங்கள் சேர்த்திருக்கிறீர்களாம்... அப்புறம் எல்லாத் தரப்பு மாணவர்களுக்கும் பொதுவாக நடந்து கொள்ள வேண்டிய நீங்கள் பாரபட்சமாக நடந்து கொள்ளுகிறீர்களாம்.''


துணைவேந்தர் கூறியதைக் கேட்டுப் பூதலிங்கத்துக்கு உள்ளூறக் கோபம் வந்தாலும் அதைப் புறத்தே காட்டிக் கொள்ளாமல் அடக்கிக் கொண்டு,

''இவற்றையெல்லாம் நீங்கள் நம்புகிறீர்களா சார்?'' என்று கேட்டார்.

துணைவேந்தரிடமிருந்து இதற்கு நேரடியாக மறுமொழி கிடைக்கவில்லை.

''இந்தப் பையன்களில் சிலபேர் உள்ளூர் எம். எல். ஏ.க்கள், கட்சி ஆட்கள் மூலம் மந்திரிவரை போய்விடுகிறார்கள். அதுதான் பயப்பட வேண்டியிருக்கிறது'' என்று சுற்றி வளைத்து மறுமொழி வந்தது துணைவேந்தரிடமிருந்து. அந்த மறுமொழியில் அவருடைய பயமும் தெரிந்தது.

உடனே மந்திரிகள், எம்.எல்.ஏ.க்கள் வரை போக முடிந்த செல்வாக்கு உள்ள அந்தப் பையன்கள் செய்த கொடுமைகளை ஒவ்வொன்றாகத் துணைவேந்தரிடம் விவரித்தார் பேராசிரியர். கல்லெறிந்தது, பாண்டியனை நள்ளிரவில் விடுதியிலிருந்து கடத்திக் கொண்டு போய் எஸ்டேட் தகரக் கொட்டகையில் அடைத்துப் போட்டுப் பயமுறுத்தி விலகல் கடிதம் வாங்கியது, எல்லாவற்றையும் சொல்லிவிட்டு, ''நியாயப்படி பார்த்தால் இப்படி முரட்டு வேலைகளையெல்லாம் செய்ததற்காக அந்த அன்பரசனின் பெயரையும், வெற்றிச்செல்வ



னின் பெயரையும் நானே பட்டியலிலிருந்து நீக்கியிருக்கவேண்டும். போனால் போகிறது என்றுதான் அப்படிச் செய்யவில்லை'' என்று கூறி முடித்தார்.

''என்ன செய்யலாம்? எங்கு பார்த்தாலும் 'பொலிடிகல் ப்ரஷர்' அதிகமாக இருக்கிறது. எதற்கெடுத்தாலும் உள்ளூர்க் கோட்டச் செயலாளரும், எம். எல். ஏ.யும் சம்மதிக்க வேண்டியிருக்கிறது. பாருங்கள்... போனமாதம் மொழி ஆராய்ச்சித் துறைக்காகப் புதிதாய்க் கட்ட இருக்கும் 'லிங்விஸ்டிக் பிளாக்' கட்டிடத்துக்கு அஸ்திவாரக்கல் நாட்டுவதற்குக் கல்வி மந்திரியை அழைத்தேன். 'உங்களூரில் எங்கள் கட்சிக் கோட்டச் செயலாளரையும், எம். எல். ஏ.யையும் சந்தித்துக் கேளுங்கள். அவர்கள் சம்மதித்தால்தான் நான் அங்கே அஸ்திவாரக்கல் நாட்ட வர முடியும்'னு மந்திரியிடமிருந்து பதில் வந்தது. மந்திரிக்கு மட்டுமில்லாமல் அவருடைய கோட்டத்துக்கும், கூட்டத்துக்கும் கூடப் பயந்தாக வேண்டியிருக்கிறது. 'யாரையும் அளவுக்கு மீறிப் பகைத்துக் கொண்டுவிட்டுப் பின்னால்

சிரமப்படாதீர்கள்' என்று உங்களை அன்புடன் எச்சரிக்கவே கூப்பிட்டனுப்பினேன் மிஸ்டர் பூதலிங்கம்!''

''உங்கள் அன்புக்கும் எச்சரிக்கைக்கும் ரொம்ப நன்றி சார்! சமூகத்தில் நாம் நல்லவர்களாக நிரூபிக்கப்பட வேண்டுமானால் சில தீயவர்களின் பகைமையை விலை கொடுத்தாவது வாங்கிக் கொள்ள வேண்டியிருக்கும். அதைப் பற்றி நான் கவலைப்பட மாட்டேன். இந்த மாணவர் பேரவைத் தேர்தல்களை என்னைவிட வேறு யாராவது பொறுப்பேற்று நடத்துவது உங்களுக்கு விருப்பமென்றால் இப்போதே நீங்கள் என்னை அதிலிருந்து விடுவித்துவிடலாம்!''

''நோ, நோ, நீங்கள் நான் கூறியதைத் தப்பாக எடுத்துக் கொண்டுவிட்டீர்கள் மிஸ்டர் பூதலிங்கம்! நான் உங்களைப் பூரணமாக நம்புகிறேன். நாளைக்கு நடக்கவிருக்கும் பேரவைத் தேர்தலை நீங்கள்தான் நடத்திக் கொடுக்க வேண்டும். இதுவரை நான் கூறியவை எல்லாவற்றையும் எனக்கிருக்கும் சிரமங்கள் என்று மட்டும் நீங்கள் புரிந்து கொண்டால் போதுமானது!''

உள்ளூர்க் கோட்டச் செயலாளருக்கும், மந்திரிக்கும் அவர்கள் சார்புள்ள மாணவர்களுக்கும் துணைவேந்தர் பயப்படுகிறார் என்பது பூதலிங்கத்துக்குத் தெளிவாகப் புரிந்தது. 'பயமே பாவங்களுக்கு எல்லாம் தந்தை' என்று மகாகவி பாரதி ஓரிடத்தில் கூறியிருப்பதை நினைத்துக் கொண்டார் பூதலிங்கம்.

பேராசிரியர் பூதலிங்கத்தைப் போல் எதற்கும் நைப்பாசைப்படாத, எதற்கும் வளைந்து கொடுக்காத ஒரு நியாயவாதியான சத்தியவெறியரைத் தம் போக்குக்கு இசைவாகத் திருப்ப முடியாதென்று புரிந்ததும் அவருக்கு விடை கொடுத்து அனுப்பி வைத்தார் துணைவேந்தர். ஒரு கணம் தம்மையும் பூதலிங்கத்தையும் ஒப்பிட்டு மனத்துக்குள் நினைத்தபோது பூதலிங்கத்திடம் தாம் பொறாமைப்படத்தக்க ஏதோ ஒன்று இருப்பதாகத் தோன்றியது அவருக்கு. அரசாங்கங்களுக்கும், அதிகாரங்களுக்கும் ஏற்ப அவ்வப்போது நியாயங்களை மாற்றிக் கொள்ளாமல் நியாயங்களுக்காகவும் உண்மைகளுக்காகவும் அரசாங்கங்களையும் அதிகாரங்களையும் கூடத் துச்சமாக நினைத்து எதிர்க்கும் ஒரு சாதாரணப் பேராசிரியரையும், ஒரு மிகப் பெரிய ரெஸிடென்ஷியல் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகிய தம்மையும் ஒப்பிட்டு நினைத்துக்கொள்வதை அப்போது அவரால் தவிர்க்க முடியவில்லை. மேஜை மேலிருந்த டெலிபோன் மணி சிந்தனையைக் கலைத்தது.

ஏக்கப் பெருமூச்சோடு ஃபோனை எடுத்தார் டாக்டர் தாயுமானவனார். ஒரு முரட்டுத் தொண்டையிலிருந்து பிறந்த குரல் செவியில் எரிச்சலூட்டியது.

''என்னங்க? நான்தான் கோட்டச் செயலாளர் குருசாமி பேசறேன். நான் சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்குங்களா?.... கவனிச்சீங்களா?''

பல துறை அறிவின் ஆலயமாகிய ஒரு பெரிய பல்கலைக் கழகத் துணைவேந்தரிடம் சாதாரண முகமன் வார்த்தைகளோ, உபசாரமான மரியாதைகளோ, வணக்கமோகூட இல்லாமல் ஏதோ தன் கட்சிக்குக் கொடி கட்டப் போகிறவனையோ, சுவர்ஒட்டி ஒட்டப் போகிறவனையோ கூப்பிட்டுப் பேசுவதுபோல் தடித்தனமாக அவன் பேசியவிதம் அவருக்கு ஆத்திரம் ஊட்டினாலும் பொறுமையாகப் பதில் சொல்ல வேண்டியிருந்தது. அவன் மேல் ஆத்திரப்பட்டுவிடுவதால் தமக்கு அவன் என்னென்ன கெடுதல்களைச் செய்ய முடியும் என்ற முன்னெச்சரிக்கை அவரை அஞ்சி அடங்கச் செய்திருந்தது. ஒரு மேலதிகாரிக்குப் பதில்கள் சொல்லும் குமாஸ்தாவைப்போல் அந்தக் கோட்டச் செயலாளருக்குத் துணைவேந்தர் பதில்கள் சொல்ல வேண்டியிருந்தது. ஏற்கனவே அந்த ஆள் செய்த நிர்ப்பந்தம் பொறுக்க முடியாமல் போலீசுக்கு ஃபோன் செய்து அதனால் மாணவர்களிடம் கெட்ட பெயர் வாங்க நேர்ந்தது ஞாபகம் வந்தது அவருக்கு. பட்டும் படாமலும் பேசி முடித்து ஃபோனை வைத்தார் துணைவேந்தர். எதிரே சுவரில் மிகப் பெரிய சில்க் துணியில் வரையப் பெற்றுத் தொங்கவிடப் பெற்றிருந்தது பல்கலைக் கழகச் சின்னம். இருபுறமும் யாளிச் சிற்பமும் நடுவில் பகந்தளிரும் கீழே குத்துவிளக்கும் அதன் அடியில் 'வித் ட்ருத் அண்ட் விஸ்டம்' என்ற ஆங்கிலக் கொள்கை வாசகமும் அடங்கிய காட்சி தெரிந்தது. அதற்கும் கீழே பழைய துணைவேந்தர் காலத்தில் எழுதப்பட்ட, 'தி யுனிவர்ஸிடி எஜுகேட்ஸ் தி இண்டலக்ட் டு ரீஸன் வெல் இன் ஆல் மேட்டர்ஸ், டு ரீச் அவுட் டுவார்ட்ஸ் ட்ருத் அண்ட் டு க்ராஸ்ப் இட்' என்ற இலட்சிய வாக்கியமும் தெரிந்தது. 'சத்தியத்தை அடையவும் கிரகிக்கவும்' என்ற அந்த வாக்கியப் பகுதியைத் தம் நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்தபோது அவருக்கே அருவருப்பாக இருந்தது. அதிகாரத்தில் இருப்பவர்களிடம் அடிமைப்பட்டுவிட நேரிடுவதை அவர் சொந்த அநுபவத்திலேயே உணர்ந்திருந்தார். (தொடரும்)

சிறிய உருவம்  பெரிய இயக்கம்

"இந்த ஸ்பெஷல் ஃபீஸ் போன வருஷத்துக் கணக்கில் வரவு வைத்துக் கொள்ள வேண்டும். போன வருடம் இவர்கள் கட்டவில்லை !"

ஒரு மாணவனையும் அவன் அன்னையையும் அழைத்துக் கொண்டு உள்ளே வந்த வகுப்பு ஆசிரியர் கூறிய சொற்கள் இவை.

"அப்படியா ? — இதோ பார், அம்மா ! இந்த வருஷத்துக் கட்டணத்தைக் கொஞ்சம் சீக்கிரம் கொண்டு வந்து கட்டிவிடு !" என்று கூறிவிட்டு என் பக்கம் திரும்பினார் ஸ்ரீ என் வேங்கடராமன்.

ஸ்பெஷல் ஃபீஸ் கூடக் கட்டாத ஒரு மாணவனை ஓராண்டுக்கும் மேலாகப் படிக்க அனுமதித்திருக்கிறாரே என்று வியப்பிலாழ்ந்திருந்த என்னிடம் தம் பிள்ளைப் பிராய நினைவுகளில் ஆழ்ந்து கூறினார் : " நான் சிறு பையனாகப் பள்ளியில் படித்து வந்த பொழுது என் பெயரை எத்தனை தடவை அடித்திருக்கிறார்கள், தெரியுமா? அந்தக் காலத்தில் வகுப்புக் கட்டணம் வெகு குறைவு தான் என்றாலும் அந்த நாள் நிலவரத்துக் கேற்ப என் தந்தை பள்ளிச் சம்பளம் கட்ட முடியாமல் திணறியது என் இளம் உள்ளத்தில் பசுமரத்தாணியாகப் பதிந்துவிட்டது. நாம் பெரியவனாகிப் பள்ளி உபாத்தியாயர் ஆனால், இதுபோன்ற பெயர் அடித்தல் சங்கடத்துக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று எண்ணுவேன். அந்த எண்ணம் எப்படியோ செயலாக முகிழ்த்துவிட்டது. நான் பள்ளி ஆசிரியன் ஆனேன். அப்பொழுது இன்னோர் அநுபவமும் ஏற்பட்டது. ஆரம்பக் கல்வி புகட்டும் ஆசிரியனுக்கு அந்தக் காலத்தில் மாதம் பன்னிரண்டு, பதினைந்துக்கு மேல் சம்பளம் இல்லை. அதுவும் மாதா மாதம் கிடைக்காது. வருஷத்துக்கொரு முறைதான் கிடைக்கும். நாமே ஒரு பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று என்னை எண்ணத் தூண்டியது என் ஆசிரிய நிலை. அதன் பலனாகவும் தொடங்கியதுதான் இந்தச் சாரதா உயர்நிலைத் தொடக்கப்பள்ளி !"

மேல மாம்பலத்தில் ஈசுவரன் கோயில் தெருவில் ரயில்வே லயனை ஒட்டினாற் போல் உள்ள இந்தத் தொடக்கப் பள்ளி 1936ம் ஆண்டு இரண்டு ஆசிரியர்களையும் பன்னிரண்டு மாணவர்களையும் கொண்டு ஸ்ரீ என். வேங்கடராமன் அவர்களால் தொடங்கப் பெற்றது. இன்று நாலாயிரத்து முந்நூறு மாணவர்களையும் நூற்றெட்டு ஆசிரியர்களையும் கொண்டு ஆல் போல் தழைத்து எழுத்தறிவிக்கும் இறைபணியை மேற்கொண்டுள்ளது. ஏழாயிரம் புத்தகங்கள் கொண்ட நூல் நிலையமும் அருமையான சிறிய மியூஸியமும் கொண்ட இப்பள்ளி தெய்வ மணம் கமழ்வது; தேசப் பற்று புகட்டுவது.



குறு உருவமானாலும் கல்விப் பெரும் பணி செய்து வரும் ஸ்ரீ வேங்கடராமனைத் தலைவராகக் கொண்டு நடைபெறும் இப்பள்ளியில் ஏராளமான மாணவர்களை அனுமதித்தாலும் கல்வியின் தரம் குன்றவில்லை. காரணம், ஒவ்வொரு மாணவனையும் தனியாகக் கவனித்து அவன் அறிவு வளர்ச்சிக்கான ஆக்கப் பணி புரிகின்றார்கள் இப் பள்ளி ஆசிரியர்கள். அதோடு நற்பண்புகளிலும் சிறந்தோங்கப் பழக்குகிறார்கள் எனவேதான், கூடுவாஞ்சேரியிலிருந்து ராயபுரம் வரைக்கும், மயிலாப்பூரிலிருந்து அண்ணாநகர் வரைக்கும் உள்ள மாணவ மாணவிகள் பலர் இங்கு கல்வி பயில வருகின்றனர். பள்ளி மாணவர்களின் குடும்பங்களோடு நேர்த் தொடர்பு கொண்டு, அவர்கள் நிலையறிந்து அரும்பணி புரியும் இந்தப் பள்ளி ஆசிரியர்களின் தரத்தை உயர்த்த இந்தப் பள்ளி நிர்வாகம் இன்னுமொரு அருமையான பணி செய்து வருகிறது. அதாவது ஆசிரியர்களுக்கு அரசாங்கத்திலிருந்து கிடைக்கும் ஊதியத்தைக் காட்டிலும் பத்து ரூபாய் முதல் பதினைந்து ரூபாய் வரை மாதச் சம்பளம் அதிகமாகத் தருகிறது. அது மட்டும் அல்ல; இங்கு முப்பது ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றி ஓய்வுபெற்ற மூன்று ஆசிரியர்களுக்கு அரசாங்க பென்ஷனைத் தவிர ரூ. 75, 60, 52-50 என்று அவர்கள் கடைசியாக வாங்கிய சம்பளத்தைக் கணக்கிட்டு அதற்கேற்பப் பென்ஷனாகவும் வழங்குகிறது. முப்பது ஆண்டுகளுக்குக் குறைவாக உத்தியோகம் பார்த்து ஓய்வு பெறுபவர்களுக்கும் ரூ. 1000 வரை 'கிராகவிடி' வழங்குகிறது.

"இதற்கெல்லாம் அரசாங்க மானியம் தவிர ஏதாவது பெரும் மூலதனம்...?"

சிரித்துக்கொண்டே கூறுகிறார் வேங்கடராமன் : "பேசக் கூடாது. மூலதனம் கடன் சுமைதான் ! சொல்லப் போனால், சிறார்கள், அவர்களைப் பெற்றவர்கள் — இவர்களின் இதயத்தில் இடம் பிடிப்பது தான் இப்பள்ளியின் பெரும் மூலதனம். வித்யாதானம் செய்ய வேண்டும் என்பார்கள். அப்படிச் செய்தால் அந்த வித்தையே 'தனமாகத் திரும்புகிறது. அதை நம்பியே நாங்கள் செயல்படுகிறோம். பெற்றோர்களும் உதவ முந்துகிறார்கள்."

அறுபது ஆண்டு அநுபவ அறிவு பேசியது ! — ரா. வீ.

துரிதமாக.
ஜாக்கிரதையாக.
நிச்சயமாக.


எப்படி?

இப்போது இடையில் நிற்காதபடி ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்திற்கு நேராக எங்கள் லாரிகளைச் செலுத்துகிறோம். இந்த துரித சர்வீஸை எங்கள் வாடிக்கையாளர்கள் பெரிதும் வரவேற்கின்றனர்.

ஏனெனில் இந்த முறையில் பார்சல்களை மேலும் துரிதமாக, ஜாக்கிரதையாகக் கொண்டு சேர்க்க முடிகிறது. இது போன்ற துரித சர்வீஸ்களை நாங்கள் மேலும் விரிவுபடுத்தி, பல நகரங்களை நேரிடையாக இணைத்து வருகிறோம்.

இந்த சர்வீஸை வியாபாரிகள் சமூகம் மிக மிக வரவேற்கிறது. ஏனெனில் வியாபாரத்திற்கான சாமான்களை ஜாக்கிரதையாக தடங்கலின்றி அடைவதால் அவர்கள் தேவையான அளவே ஸ்டாக் செய்கின்றனர். இதனால் அவர்கள் மூலதனத்தை அனாவசியமாக முடக்கத் தேவையில்லை.

ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நேரிடை பார்சல் சர்வீஸ்



இந்தச் சிறப்பான பணி ஸதர்ன் ரோட்வேஸினால் எப்படி முடிகிறதென்றால்:

- தனியார் துறையில் ஸதர்ன் ரோட்வேஸ் நிறுவனமே மிகவும் பெரிய ஸ்தாபனம்.
- அவர்கள் தங்களுக்குச் சொந்தமான லாரிகளையே இயக்குகிறார்கள்.
- அவர்களின் பயிற்சி பெற்ற ஊழியர்கள், லாரி ஸ்தாபனத்தின் ஒவ்வொரு இயக்கத்தையும் தனித்தனியே கண்காணிக்கின்றனர்.
- அவர்களின் டிரைவர்கள், உடலியலிலும், உளவியலிலும் பொருத்து நடத்தும் பரிசோதனைகள், மற்றும் தூரத்தைப் பற்றி மதிப்பிடும் பரிசோதனைகள், கண் கால்களிடை கச்சித ஒத்துழைப்புக்கான பரிசோதனைகள் ஆகியவற்றிற்கு உள்ளாகிய பிறகுதான் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.
- 100 மைல்கட்கு ஒன்றுவீதம் ரிப்பேர் மற்றும் பராமரிப்புக்கான வசதிகொண்ட தொழில் பட்டறைகள் அமைத்திருக்கிறார்கள்.

தென் இந்தியா முழுமையிலும் சரக்குகளை புக் செய்யும் ஆபீஸ்கள் பரவி உள்ளதால் மக்களிடை ஸதர்ன் ரோட்வேஸ் பெருநம்பிக்கை பெற்றிருக்கிறது.

உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ்

TVS

ஸதர்ன் ரோட்வேஸ்
பிரைவேட் லிமிடெட்
(இது ஒரு டிவிஎஸ் ஸ்தாபனம்)
மதுரை

ராஜாஜியின் ஜெயில் டைரி



1921 டிஸம்பர் 23உ

நேற்று இரவு சிறிது ஆஸ்துமா கஷ்டம் ஏற்பட்டிருந்தது. எனக்கு மாலை ஆகாரம் ஒத்துக் கொள்ளவே இல்லை. ஆனால் அதற்காக நான் இப்பொழுதே கவலைப் படப் போவதில்லை.

நெல்லூர் நண்பர்களை வேறு பகுதிக்கு மாற்றி விட்டதால், அவர்கள் இல்லாதது எனக்கு வருத்தமாயிருந்தது. மாலையில் ஆறு மணிக்குக் கதவைப் பூட்டியதும் உறக்கம் வந்துவிடுவதில்லை. அந்த நேரத்தில் அவர்கள் பாட்டுப் பாடி ஆறுதல் அளிப்பார்கள். அது இல்லாமல் போய்விட்டது. வார்டர்கள் சளசளவென்று பேசிக் கொண்டிருப்பார்கள். அது எனக்கு மிகவும் அலுப்பாக இருக்கும்.



அறைகளைப் பெருக்க நல்ல துடைப்பம் கிடையாது. சிறை அதிகாரிகள் அறைகளின் சுத்தத்தைப் பற்றிக் கவனிப்பதேயில்லை. மூட்டைப் பூச்சிகள் இல்லாதது எங்கள் அதிர்ஷ்டம்தான். ஆனால் கொசுக்கள் ஏராளமாக இருந்து ரீங்காரம் செய்து கொண்டிருந்தன.

நேற்று மாலை நான் வெளியில் உலாவிக் கொண்டிருந்த பொழுது ஒருவர் வந்து வேலியருகில் நின்று கொண்டு எங்களுக்கு நமஸ்காரம் செய்தார். அவர் தாம் சிறைத் தலைமை அதிகாரிக்கு இந்துஸ்தானி கற்றுக் கொடுக்கும் முன்ஷி என்று தோன்றுகிறது.

என்னுடைய அறைக்குப் பின்புறத்தில் யாரோ ஒரு முஸ்லிம் மதபோதகர் மாதிரி உரக்க இந்துஸ்தானியில் இடைவிடாமல் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். அவர் யார்?

அருணோதய சமயத்தில் என்னுடைய அறைக்குப் பின்புறத்தில் யாரோ அழும் குரல் கேட்டது. ஒருவேளை மரண தண்டனை பெற்ற கைதிகளோ என்னவோ?



எனக்குப் பலமில்லை. அது போதாதென்று கால்களில் பருக்கள். சிறிது வேலை செய்தால்கூட இளைக்க ஆரம்பித்து விடுகிறது. இப்படிப்பட்டவர்கள் துணி துவைக்க வேண்டுமானால் அதற்குக் கதர் அதிக கனமாயிருக்கிறது. நான் கஷ்டப்பட்டு என்னுடைய கதர் உடைகளைத் துவைக்கும் பொழுது வார்டர், ''உங்கள் அதிர்ஷ்டம் நல்லதங்காள் அதிர்ஷ்டம் மாதிரிதான்'' என்று கூறினார். அதைக் கேட்டு நான் புன்னகையுடன், ''அத்தகைய துரதிர்ஷ்டம் ஒன்றுமில்லை'' என்று கூறினேன்.

இங்கே சிறையில் ஒரு வருஷ காலம் கடுங்காவல் தண்டனை அனுபவிக்கத் தயாராக வந்திருப்பவர்கள்

ஜாமீன் கொடுத்திருந்தால் தண்டனை பெற்றிருக்க மாட்டார்கள். வெளியே சுகமாகக் காலங் கழிக்கலாம். அப்படியிருந்தும் சிறைவாசத்துக் கென்றே பிறந்தவர்கள் மாதிரி சந்தோஷமாக இங்குள்ள காரியங்களைச் செய்து கொண்டிருப்பதைக் கண்டு மகிழ்கிறேன். சேஷ ரெட்டியும் இரண்டு நெல்லூர் வீர இளைஞர்களும் அந்த மாதிரி வந்தவர்களே. அவர்கள், "நாங்களும் தோட்டிகள்தானே?" என்று சொல்லிக் கொண்டு கையில் துடைப்பம் பிடித்து அறைகளைச் சுத்தம் செய்த காட்சி ஒரு நாளும் என்னுடைய மனத்தைவிட்டு அகலாது.

தங்கள் வயதான தாய்மார்களையும் சிறு குழந்தைகளையும் வெளியிலுள்ள நண்பர்கள் பாதுகாப்பார்கள் என்று பரிபூரணமாக நம்பியே அவர்கள் சிறையில் தவம் செய்ய வந்திருக்கிறார்கள். இந்த விஷயத்தை இன்னும் ஜனங்கள் நன்றாக உணர்ந்து கொள்ள வில்லை. இல்லையானால் அவர்கள் உதவி செய்யும் விஷயத்தில் இவ்வளவு அலட்சியமாகவும் காலதாமதமாகவும் இருக்க மாட்டார்கள். ஆங்கிலத்தில் "ராபின்ஸன் குருஸோ" என்று ஓர் அழகான கதைப் புத்தகம் இருக்கின்றது. குருஸோ என்பவர் கப்பல் உடைந்து தன்னந் தனியாக ஒரு நிர்மானுஷ்யமான தீவில் அகப்பட்டுக் கொண்டார். ஆயினும் அவர் தீவுக்கு வந்த சில காலம் கழித்து, "ஏதேனும் கப்பல் வந்து அழைத்துச் செல்லாதா?" என்று அடிக்கடி கடலை நோக்கியவண்ணமாக நின்றார் என்று, அந்தக் கதை கூறுகிறது. அதுபோல் இந்த நண்பர்களும் நம்பிக்கையை இழந்துவிட வேண்டியதுதானா?

இன்று மாலை ஐந்து மணிக்கு ஆம்பூரிலிருந்து பத்தேகான் என்பவர் ஜாமீன் கொடுக்க மறுத்துச் சிறைக்கு வந்து சேர்ந்தார். அவருக்கு ஒரு வருஷம் வெறுங் காவல் தண்டனை கொடுத்திருந்தார்கள். அவர் குட்டையான அழகிய மனிதர். புதிதாக ஒருவர் வந்தால் எங்கள் மனத்தில் அதிக இன்பம் உண்டாகின்றது. இந்தப் பெரிய போராட்டம் வெற்றி பெற வேண்டுமானால் இன்னும் பலர் வர வேண்டும். அவர்கள் மளமளவென்று மேலும் மேலும் வந்து குவிய வேண்டும்.

1921 டிசம்பர் 24உ

இரவில் என்னை ஆறு மணிக்கு அழைத்துத் தாழ்ப்பாளை இழுத்துப் பூட்டிச் சாவியை எடுத்துச் சென்ற பின்னரே, சுதந்திர தேவியின் முழுக் காட்சியையும் தினந்தோறும் காண்கிறேன். நாங்கள்தான் சிறைப்பட்டிருக்கிறோம் என்பதில்லை. தேச மக்கள் அனைவருமே சிறைப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இரவில் மட்டுமா அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அல்லும் பகலும் அனவரதமும் அடைக்கப் பட்டிருக்கிறார்கள். அதனால் அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் ஒரே அடிமை இரவுதான். இந்த விஷயத்தை அறிந்து கொண்டால் இப்படிப் பூட்டி வைக்கப்பட்டிருப்பதுதான் சுதந்திரம் என்று தெரிந்து கொள்வோம். ஆனால் இந்த உண்மையை ஏன் நம்முடைய ஜனங்கள் இன்னும் உணர்ந்துகொள்ள வில்லை? உணர்ந்து கொள்ளாமல் அரசாங்கத்தின் சட்டங்களையும் ஆள்பவர்களின் உத்தரவுகளையும் சிரத்தையோடும் சுறுசுறுப்போடும், ஏதோ கடவுள் வகுத்த தார்மீகச் சட்டங்களை நிறைவேற்றுவது போல் நிறைவேற்றிவைக்கிறார்கள். இதைக் காணும் போது மனவேதனை உண்டாகிறது. ஆனால் அந்நிய ஆட்சியில் சட்டத்தை மீறிச் சிறைக்குச் செல்பவர்களே சுதந்திரம் உடையவர்கள். அவர்களை அடிபணியும்படி செய்ய முடியாது. வேண்டுமானால் அவர்களைப் பலாத்காரமாகக் கட்டிப் போடலாம். அவ்வளவுதான் செய்ய முடியும். இந்த விஷயங்களை யெல்லாம் நான் முன்னமேயே அறிவேன். அவற்றைப் பல மேடைகளில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆயினும் இந்த உண்மையை இப்பொழுது போல் எந்தக் காலத்திலும் நான் உணர்ந்ததில்லை.

சுதந்திரம் என்றாலே பொறுப்பு என்று பொருள். அதனால்தான் மக்கள் சுதந்திரத்தைக் கண்டாலே பயப்படுகிறார்கள்.
— ஜார்ஜ் பெர்னார்ட் ஷா

அளவுக்கு மீறிய சுதந்திரமும் ஆபத்து. விரும்பிய பொருள் எல்லாம் கிட்டிவிட்டால், அப்புறம் வாழ்வில் சுவை என்ன இருக்கிறது?
— பாஸ்கல்

சுதந்திரம் அடைவது கூடச் சுலபம். ஆனால் அதைக் காப்பாற்றுவதுதான் மெத்தக் கடினம்.
— ஆந்த்ரே கைட்

சுதந்திரத்தை நாம் இழப்பதற்கோ பெற முடியாமல் போவதற்கோ நமது பலவீனம் தான் காரணம்.
— மகாத்மா காந்தி

சுதந்திரம் பெறக் கடுமையான உழைப்பும் சாதனையும் தேவை. அதை இழக்க அலட்சியமும் தளர்வும் போதும்.
— பேயார்டு

எந்த விஷயம் பற்றி நமக்கு ஆறு ஆவன்னாகூடத் தெரியாதோ, அந்த விஷயத்தைப் பற்றி வாய் கிழியப் பேசுவதுதான் சுதந்திரம்!

சட்டத்துக்கும் அறத்துக்கும் கட்டுப்பட்டு வாழ்வதே சுதந்திரம். இரண்டையும் தவிர்த்த சுதந்திரம் வெறும் நகைப்புக்கிடம்.
— ராபர்ட் பென்ஸன் (தொகுப்பு : அக்ஷயம்.)



"எருதும் வண்டியும் ஒத்தால் மேடு பள்ளம் ஏது ?"

புகைப்படங்களில் பழமொழிகள் : போட்டி முடிவு

முதல் பரிசு : ரூ. 50/-

எம். நடராஜன்,
3, ஜயராம் செட்டித் தெரு,
சைதாப்பேட்டை, சென்னை-15



பரிவுப் பரிசு : ரூ. 10/-

ஆர். ராமகிருஷ்ணன்,
இந்தியன் ஆக்ஸிஜன் லிட்.
ஆக்ஸிஜன் ஹவுஸ்,
பி-34, டாரடாலா ரோட்,
கல்கத்தா-53



ஆனால் காலம் காற்றாய்ப் பறக்கிறது

இன்றே ஒரு ஸேவிங்ஸ் பாங்க் கணக்குத் தொடங்குங்கள்

அலகாபாத் பாங்கிற்கு வந்து எங்களில் யாரிடமாவது கேளுங்கள் ரூ. 5 மட்டும் செலுத்தி, உடனே ஒரு சேமிப்புக் கணக்குத் தொடங்கி விடலாம். அவ்வளவு சுலபம். நீங்கள் ஒழுங்காகச் சேமித்து வரும் சிறு தொகை எவ்வளவு சீக்கிரமாகப் பெருகி வருகிறது என்று ஆச்சரியப்படுவீர்கள். இன்னும் சௌகரியங்கள், சேவைகள்......

• ரெக்கரிங் டிபாஸிட்டுகள் • கரண்ட் அக்கௌண்ட் • பிரயாணிகள் செக்குகள் • ஃபிக்ஸட் டிபாஸிட்டுகள் • ஸேஃப் டிபாஸிட் லாக்கர்கள்
• விவசாயத்திற்கான பணவசதி • சிறு தொழில்களுக்கு கடனுதவி
• உத்தியோகஸ்தர்களுக்குக் கடனுதவி

அலஹாபாத் பாங்க்

ஹெட் ஆபீஸ்: 14, இந்தியா எக்ஸ்சேஞ்சு பிளேஸ், கல்கத்தா-1

நீங்கள் தாராளமாகப் பழகுவதற்குரியதென்று உணர்த்துகின்ற பாங்க்

சைக்கோ சாரநாதன்



கி.ராஜேந்திரன்

31. ஆதவன் ஆராய்ச்சி நிலையம்

கொடைக்கானலில் உள்ள ஆதவன் ஆராய்ச்சி நிலையம் சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டது. ஆசியாவிலேயே மிகத் தொன்மையான ஆய்வுக்கூடம் இது. சூரியனையொட்டிய பௌதிக சாஸ்திரத்தை ஆராய்வதுதான் இதன் முக்கிய பணி என்றாலும் 'புதிய நட்சத்திர'ங்களை உன்னி நோக்குவது வால் நட்சத்திரங்களைப் பற்றி அறிவதுபோன்ற காரியங்களும் நடக்கின்றன.

'ஆப்ஸர்வேட்டரி' என்று அழைக்கப்படும் இந்த விஞ்ஞானக்கூடத்துக்குப் பத்மநாபன் குடும்பம் ஹாப்பி ஹாலிடேயில் தங்கியிருந்த வேறு சில குடும்பங்களுடன் பஸ்ஸில் வந்து சேர்ந்தது. அந்நிலையத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் ரொம்ப உற்சாகத்தோடு அங்கு நடக்கும் பரிசோதனைகளை விளக்கிச் சொல்லிக்



கொண்டிருந்தார். புரிந்து தலையாட்டினார்கள் ஓரிருவர். புரியாவிட்டாலும் திறந்த வாய் மூடாமல் கேட்டார்கள் சிலர். 'நமக்கு ஒன்றும் புரியாது' என்று தீர்மானித்துக் கொண்டு வெளியே தோட்டத்துக்கு வந்துவிட்டார்கள் பலர்.

பத்மநாபன் குடும்பமும் இந்தக் கடைசி ரகத்தைச் சேர்ந்ததாகத்தான் விளங்கியது. ரங்கனும் நடராஜனும் அவர்களுடனேயே இருந்தார்கள். வான சாஸ்திரத்தை விட அந்த ஆய்வுக்கூடத்தைச் சுற்றிலும் நடந்திருந்த தோட்ட சாஸ்திர ஆராய்ச்சியில் அதிக ஈடுபாடு காட்டினார்கள் மீனுவும் ரங்கனும்.

''பூந்தோட்டமா இது? பூங்காடு!'' என்றார் பத்மநாபன். நடைபாதை ஓரம் வரப்பாக அடுக்கியிருந்த பாறைகளுள் ஒன்றின் மேல் அமர்ந்தார்.

அனசூயா அவர் மடி மேல் கைகளை ஊன்றிச் செல்லமாக அவர் முகத்தை ஏறிட்டு நோக்கிக் கூறினாள்: ''அப்பா! இந்தப் பூக்களுக்கெல்லாம் இத்தனை அழகழகான வர்ணங்கள் எப்படிக் கிடைக்கின்றன, தெரியுமா?''

''எப்படி?'' என்று அவள் திருப்திக்காகக் கேட்டார் பத்மநாபன், ஆவலைக் குரலில் தேக்கி.

''வானவில் தரையைத் தொடுமோன்னோ; அந்த இடத்துக்கு வனதேவதைகள் போவா. அதிலேயிருந்து வழியும் நிறங்களை டப்பாக்களிலே அள்ளிண்டு வருவா. அப்புறம் இங்கேயும் அங்கேயுமா பறந்து போய் பிரஷ்ஷினாலே எல்லாப் பூக்களுக்கும் பெய்ண்ட் பண்ணிடுவா. ஆனா அவாளை நாம் பார்க்க முடியாது. ஏன்னா அவா ஃபேரீஸ்; கண்ணுக்குத் தெரிய மாட்டா!''

''நீ படிச்ச கதைப் புத்தகத்திலே இப்படி எழுதியிருக்கா அனு? அழகான கற்பனைதான்!'' என்றார் பத்மநாபன் மகளை முதுகில் தட்டிக் கொடுத்தபடியே.

நடராஜன் வினவினார்: ''ஏன் ஸார், இந்த ஆப்ஸர்வேட்டரியில் நடப்பதையெல்லாம் விவரமா எடுத்துச் சொல்லிக்கிட்டிருக்காரே அங்கே ஒருத்தர்; நீங்க கேட்க வேண்டாமா?''

''கொஞ்ச நேரம் நின்னு பார்த்தேன்'' என்றார் பத்மநாபன். ''ஒண்ணும் புரியலே!''

''இத்தனை பச்சையாக உண்மையைச் சொல்லக் கூடாது ஸார், நீங்க! புரிஞ்ச மாதிரி தலையாட்டிவிட்டாவது வரணும். உங்க ஃபிரெண்டு ஹிப்பி

ஜன். ''நேற்று ஸில்வர் காஸ்கேட் கிட்டே எல்லோ ரும்உட்கார்ந்திருந்தப்போ, நான் பரமசிவத்தைக் கொன்றது யாருன்னு விளக் கிக்கிட்டிருக்கேன்; நீங்க மெல்ல நழுவி விட்டீங் களே!''

''தற்பெருமைக்காரங் களை எனக்குக் கட்டோடு பிடிக்காது'' என்றான் அமிர்தலிங்கம்.

''அப்படி இல்லையே? நான் ரொம்ப அடக்கமா இருக் கிறதால்ல அம்புஜம் அம்மா கூட நினைக்கிறாங்க!''

''இப்படி நீங்க சொல் லிக்கிடறதே தற்பெருமை தான்!''

''இருக்கட்டும், ஸார்! தற்பெருமையாகவே இருக் கட்டும். இன்னைக்கு நீங்க

அமிர்தலிங்கம் கால் கடுக்க நின்னு கேட்கிறானே. தனக்கு என்ன புரியுதுன்னு நினைச்சுக்கிட்டிருக்கான் அவன்? நீங்களாவது சிரமத்தைப் பார்க்காமல் கொஞ்சம் சிரத்தை எடுத்துக்கிட்டீங்கன்னு விஷ யத்தைக் கிரகிச்சுப்பீங்க. அப்புறமா ஏதாவது இதைப் பற்றி எழுதலாம், பத்திரிகையிலே.''

''ஆமாம்!'' என்றாள் அம்புஜம் கிண்டலாக. ''தப்புந் தவறுமா ஏதாவது எழுதுவார்; அதைச் சுட்டிக்காட்டி நாலு கடிதாசுகள் வரும். அதையும் பிரசுரிப்பார்! பேசாமெ கதை எழுதறதோடே நிறுத்திக்கலாம்.''

''கதை எழுதறது மட்டும் அத்தனை சுலபமா என்ன?'' என்றான் ரங்கன்.

''நன்னா கேளு, ரங்கா! இவ என்னிக்கு 'வாயைத் திறந்து எதுவும் பேச மாட்டேன்; 'சாப்பிட வர லாம்'ன்னு சொல்றதோடே நிறுத்திக்கறேன்'னு சத்தியம் பண்ணறாளோ, அன்னைக்கே நானும் கதை எழுதறதோடே நிறுத்திக்கிறதா சபதம் பண்ண றேன்!'' என்றார் பத்மநாபன்.

''உங்க ஒய்ஃப் இப்படிச் சொல்லிட்டதுக்காக வாவது நீங்க ஒரு சவாலா ஏற்றுக்கிட்டுப் பிரமாதமா ஒரு கட்டுரை எழுதணும் இந்த ஆப்ஸர்வேட்டரி



யைப் பத்தி!'' என்றார் நடராஜன். ''போங்க, போய் அந்த உதவாக்கரை துப்பியை இந்தப் பக்கம் விரட்டி அடியுங்க. அவன்கிட்டே கொஞ்சம் பேசணும் எனக்கு.''

ஏதோ ஒரு முக்கியமான திட்டம் அல்லது கார ணம் இருக்கவேதான் நடராஜன் தம்மைக்கூட வேலை வாங்கத் துணிகிறார் என்று பத்மநாபன் முடிவுக்கு வந்தார். அவர் கருத்துப்படியே சென்று அமிர்த லிங்கத்திடம் ஏதோ சால்ஜாப்பு கூறித் தமது குடும் பத்தினர் இருந்த பக்கமாக அனுப்பி வைத்தார். ஆனால் சில நிமிஷங்களுக்கு மேல் அவரால் அங்கு விளக்க உரையைக் கவனமாகக் கேட்டுக் கொண்டி ருக்க முடியவில்லை. அமிர்தலிங்கத்திடம் நடராஜன் என்ன பேசுகிறார் என்று அறிந்துகொள்ளும் ஆவல் பீறிட்டது. ஆகவே அவர் சற்று நேரத்துக்கெல்லாம் மெல்ல நழுவிக் கட்டடத்தைவிட்டு வெளிப்பட்டுத் தோட்டத்துக்கே வந்துவிட்டார்.

* * *

''என்ன அமிர்தலிங்கம் ஸார்!'' என்று அவனை சகஜமாக அழைத்துப் பேசத் தொடங்கினார் நடரா

ளும் என் வீர தீரப் பிரதாபங்களைக் கொஞ்சம் கேளுங்க! நான் புதிரை விடுவிக்க முடியாமல் தவிக்கிறதா சொன்னப்போ எத்தனை தூரம் ரசிக்கக் கேட்டுக்கிட்டிருந்தீங்க; எப்படி அட்டகாசமா சிரிச்சுச் சந்தோஷப்பட்டீங்க? இப்போ என் வெற்றிகளையும்தான் கேளுங்களேன்!''

''கையிலே விலங்கு மாட்டி உட்கார வைச்சுப் பேசினுத்தான் அது நடக்கும்'' என்றான் அமிர்தலிங்கம், அலட்சியமும் கோபமும் கலந்த குரலில்.

'' அதற்கு அவசியமில்லை, ஸார்! நட்புரிமையோடே என் கையைக் கொக்கி போட்டாற்போல் உங்க கரத்தோடு பிணைச்சுக்கிட்டாலே போதும்'' என்றார் நடராஜன்.


கண்ணிமைக்கும் நேரத்தில் சொன்னதை அவர் செய்தும் காட்டினார். அவனால் ஓர் அங்குலம்கூட அசைய முடியாதபடி கண நேரத்தில் தம் பக்கத்தில் அவனைக் கட்டிப் பிடித்தாற்போல அமர்த்திக் கொண்டார்.

'' நேற்று பரமசிவத்தின் மரணத்துக்கு அந்த என்.ஸி.ஸி. பெண் சந்திராதான் காரணம் என்று விளக்கினேனா? இன்றைக்குப் பாக்கி இரண்டு கொலைகளைச் செய்தது யாருன்னும் கண்டு பிடிச்சுட்டேன்! சொல்றேன், கேட்டுக்குங்க '' என்று ஆரம்பித்தார்.

சொல்லி வைத்தாற்போல் கணக்காக இந்தத் தருணத்தில் பத்மநாபன் அவர்களுடன் வந்து சேர்ந்து கொண்டு விட்டார் கதை கேட்க.

ரங்கனும் மீனுவும் அடிக்கடி பிறர் அறியாதவாறு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். கண்கள் காதல் கதை பேசிக் கொண்டிருக்கையிலேயே அவர்கள் செவிகள் நடராஜன் விவரித்த மர்மக் கதையைக் கேட்டுக் கொண்டிருந்தன.





32. முடிச்சு அவிழ்ந்தது!

பிரமீளா தன் தாயாரின் உடலோடு சென்னைக்குச் செல்ல அனுமதித்தார் நடராஜன். ஈமக் கடன்களைச் சென்னையில் நடத்துவதுதான் உசிதம். அதற்குத் திரை உலகமே திரண்டு வரும். யாராவது வராது போனால் ஆபத்து! ஏனெனில் பிரமீளாவுக்கு ஆறுதல் கூற இன்னின்ன பிரபல நட்சத்திரங்கள் வரவில்லை என்று கண்டுபிடித்துக் கூறி, ஏன் வரவில்லை என்பதற்கான ரஹஸ்யங்களையும் பத்திரிகைகள் வெளியிடும். ஏதாவது விரும்பத் தகாத வதந்திகள் பரவிவிடப் போகின்றனவே என்று பயந்து கொண்டே அத்தனை நடிகர் நடிகையரும் வருவார்கள். அவர்களைப் பார்க்க ரசிகர்களின் பெருங்கூட்டம் மொய்க்கும். எமனுக்கே சற்று நடுக்கம் ஏற்படும் அளவுக்கு மயானம் திமிலோகப்படும்!

பிரமீளாவின் கவர்ச்சிப் படம் ஒன்றினை வெளியிட மற்றொரு சந்தர்ப்பம் கிடைத்ததில் பத்திரிகை உலகம் மகிழும். 'பிரபல நட்சத்திரம்—பிரமீளாவின் தாய் மரணம்' என்று கொட்டை எழுத்தில் தலைப்புப் போட்டு ஃபோட்டோவுக்குக் கீழ், 'மரணமடைந்தவரின் மகள் பிரமீளா' என்று விளக்கம் கொடுக்கும்!

இதையெல்லாம் உத்தேசித்துத்தான் பிரமீளாவைச் சென்னை செல்ல அனுமதித்தார் நடராஜன். அவள் டிரைவர், பெண்டாட்டிக்கு உடம்பு சரியில்லை என்று தந்தி வந்து போய்விட்டிருந்தானுதலால், சென்னை வரையில் அவள் காரை ஓட்டிச் செல்லப் போலீஸ் டிரைவர் ஒருவரையே ஏற்பாடு செய்து தந்தார். துணைக்கு இன்னொரு போலீஸ்காரரையும் ஏற்றி அனுப்பினார்.

ஆனால் இவ்வாறு போக அனுமதி அளிக்கு முன்னர் போலீஸ் சார்பில் ஒரு டாக்டர் கனகத்தின் உடலைப் பரிசோதிக்குமாறு ஏற்பாடு செய்தார். மண்டையில் இரண்டு இடங்களில் யாரோ பலமாக அடித்திருக்கிறார்கள்' என்று டாக்டர் தம் அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். படக்கூடாத இடத்தில் பட்டுவிடவே, அவள் உடனே மரணம் அடைந்திருக்கிறாள். கோக்கர்ஸ் வாக் சரிவில் விழுந்ததால்_ மரணம் நேர்ந்திருக்க முடியாது. ஏனெனில், சரிவில் துருத்திக் கொண்டிருந்த ஒரு பாறை காரணமாய் ரொம்ப ஆழத்துக்குப் போகுமுன்னரே அவள் உடல் தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டது. யாரோ அவளை அடித்துக் கொன்றபிறகு அங்கே சடலத்தைக் கொண்டுவந்து உருட்டிவிட்டிருக்கிறார்கள். அதள பாதாளத்துக்கு உடல் போய்விட்டால் யார் கண்ணிலும் தட்டுப்படாது; உடலே கண்டுபிடிக்கப்படாதபோது யார் மீதும் கொலைக் குற்றம் சுமத்த முடியாது - இந்த நோக்கத்தில் கொலை செய்தவன் செயல்பட்டிருக்கிறான். ஆயின் அவன் எண்ணம் ஈடேறவில்லை. ரங்கன் ஊகமாகத் தன் தந்தையிடம் கூறியதைத்தான் டாக்டரும் இப்போது உறுதிப்படுத்தினார்.

ஒரு மஞ்சள் பத்திரிகையில் பிரமீளாவுக்கும் பார்த்திபனுக்கும் இடையில் தொடர்பிருந்ததாகத் தாம் படித்திருந்ததை யொட்டி சென்னைக்கு, ஃபோன் போட்டு விசாரணைக்கு ஏற்பாடு செய்தார் நடராஜன். பெங்களூரிலிருந்து தான் வருவதாக ஸி. ஐ. டி. யிடம் சொன்ன பார்த்திபன், உண்மையில் எழும்பூரில் ரயிலைவிட்டு இறங்கியதாக டாக்ஸி டிரைவரின் வாக்குமூலம் உணர்த்தியது. இதைத் தொடர்ந்து பார்த்திபனின் போட்டோவைப் பெற்று அனுப்பும்படி நடராஜன் தமது இலாகாவினருக்கு டெலிபோனில் கட்டளையிட்டார். அந்தப் புகைப்படமும் கொடைக்கானலுக்கு வந்து சேர்ந்தது.

அதை எடுத்துக் கொண்டு போய்ச் சில ஹோட்டல்களில் விசாரித்தார் நடராஜன். ஹில்டனில் அவன் தங்கியிருந்ததாக உறுதிப்பட்டது. ஆனால் பெயர், விலாசம் எல்லாவற்றையும் மாற்றி ரிஜிஸ்தரில் எழுதியிருந்தான். பிரமீளாவும் அவள் தாயாரும் தங்கியிருந்த அதே ஹோட்டல்! அந்த ஆசாமி தன் அறையை விட்டு எங்கும் வெளியே போனது கிடையாது என்று கூட ரூம் பாய் ஒருவன் ஞாபகம் வைத்திருந்து கூறினான். பிரமீளா தன் தாயாரைக் காணோம் என்று அழுது கொண்டு நடராஜனிடம் வந்த அதே தினத்தில் தான் பார்த்திபனும் அறையைக் காலி பண்ணிக் கொண்டு போயிருக்கிறான்.

கனகம் அறியாதவாறு அவன் அங்கு தங்க வேண்டும் என்றும் அறை எண்ணை மட்டும் தனக்குத் தெரி


கண்கவர் வண்ணங்களில்,
எண்ணில் அடங்கா டிசைன்களில்,
சகாய விலையில், காஞ்சீபுரம்
பட்டுப்புடவைகளை தேர்ந்தெடுக்க
சிறந்த இடம்
கோ-ஆப்டெக்ஸ்
குறளகம், தி. நகர், லஸ்,
மற்றும் காமதேனு
கூட்டுறவு
சிறப்பங்காடி.

விக்க வேண்டும் என்றும் சொல்லியிருப்பாள் பிரமீளா. பின்னோடு இவளும் தன் தாயாருடன் வந்து சேர்ந்திருப்பாள். காதலர்கள் ரகசியமாய்ச் சந்தித்திருப்பார்கள். எதிர்பாராதவிதமாகக் கனகத்துக்கு உண்மை அம்பலமானபோது, அவள் ஆத்திரமடைந்து பார்த்திபன் அறைக்குப் போய் அவனைத் தாறுமாறாக ஏசியிருப்பாள். பார்த்திபன் கோபத்தில் இன்னது செய்கிறோம் என்று அறியாமல் அவளை அடித்துக் கொன்றிருப்பான். பிறகு அவள் கொலை செய்யப் பட்டாள் என்பதையே மறைத்துவிடக் கருதி, இரவு நேரத்தில் கோக்கர்ஸ் வாக்குக்கு உடலைப் பிரமீளாவின் காரில் ஏற்றி வந்து உருட்டித் தள்ளியிருப்பான். ஆனால் அந்தக் கிடுகிடு பள்ளத்தாக்கில் பக்கவாட்டில் நீட்டிக் கொண்டிருந்த ஒரு பாறை உடலைத் தடுத்துத் தாங்கி அவன் ஆசையில் மண்ணைப் போட்டு விட்டது.

இந்த விதமாக ஊகித்துப் பார்த்திபனைப் பிடித்து லாக்கப்பில் போடுமாறு உத்தரவிட்டார் டி. ஐ. ஜி. ஸி. ஐ. டி. நடராஜன்.


கட்டளையிட்டு விட்டாரே ஒழிய உள்ளூற உதறல்தான் அவருக்கு. ஏதோ ஊகத்தின்பேரில்தானே அவனைக் கைது செய்திருக்கிறோம்? இவன்தான் கனகாவைக் கொன்றான் என்பதற்கோ காரில் உடலை ஏற்றிச் சென்றான் என்பதற்கோ என்ன சாட்சியம் இருக்கிறது? தாயும் மகளும் தங்கியிருந்த ஹோட்டலிலேயே பார்த்திபனும் தங்கியிருந்தான் என்பதற்கு அதிகமாகத் தம்மால் என்னத்தை நிரூபிக்க முடியும்? இப்படியெல்லாம் எண்ணிக் கவலைப் பட்டுக் கொண்டிருந்தார். பெண்டாட்டிக்கு உடம்பு சரியில்லை என்று தந்தி வந்ததாகக் கூறிச் சென்ற பிரமீளாவின் டிரைவர் ஒருவேளை அப்படிப் பொய் சொல்லி விட்டுப் போயிருப்பானோ? அவனே திரும்பி வந்து இந்தக் காரியத்தைச் செய்திருப்பானோ என்றுகூட நினைத்து மனம் குழம்பினார்.

இந்தக் தருணத்தில்தான் எதிர்பாராதவிதமாக ஒரு திருப்பம் நிகழ்ந்தது. ஈமச் சடங்குகளெல்லாம் முடிந்து ஓரிரு நாட்கள் வரையில் பிரமீளா துயரில் ஆழ்ந்திருந்தாள். உள்ளம் தாயாரைச் சுற்றியே வட்டமிட்டது. அவள் தன்னை வளர்க்கப்பட்ட பாட்டையும் ஒரு நட்சத்திரமாகப் பிரகாசிக்கச் செய்ய எடுத்துக் கொண்ட பிரயாசைகளையும் நினைத்து நினைத்துக் கண்ணீர் உகுத்தாள். மூன்றும் நாள் அவளால் தனிமையைப் பொறுக்க முடியவில்லை. துயரைப் பகிர்ந்து கொள்ளவும் ஆறுதல் தரவும் அவள் பார்த்திபனின் துணைக்காக ஏங்கினாள். 'பார்த்திபன் ஏன் வரவில்லை? கரித்துக் கொட்ட அம்மாகூட இல்லாதபோது அவர் வர ஏன் தயங்க வேண்டும்? ஒருவேளை பயப்படுகிறாரா? கொடைக்கானலில் நடந்த நிகழ்ச்சிகளுக்காகச் சென்னையில் தன்னைச் சந்திக்க அவர் ஏன் அஞ்ச வேண்டும்? மாறாக நாங்கள் ஒருவரை ஒருவர் சந்திக்காமல் இருந்தால் அல்லவா சந்தேகம் எழும்?'

இவ்வாறு எண்ணி அவள் காமிராமேன் சேகருக்கு ஃபோன் செய்து அவர் நண்பரான பார்த்திபனைப் பற்றிக் கேட்டாள். சேகர் கூறிய பதில் அவளைப் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. கனகத்தைக்கொன்றதாகச் சந்தேகித்துப்பார்த்திபனை லாக்கப்பில் வைத்திருக்கிறார்கள்!

உடனே ஃபோனை வைத்துவிட்டுப் பிரமீளா புறப்பட்டுவிட்டாள், ஐ. ஜி. காரியாலயத்துக்கு. அவள் இன்னும் சற்றுத் தாமதித்துச் சேகருடன் பேசியிருந்தாளானால், போலீஸார் இன்னும் பார்த்திபன் மீது வழக்கு எதும் பதிவு செய்யவில்லை என்றும் விசாரணைக்குத்தான் லாக்கப்பில் வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள் என்றும் அவன் கூற அறிந்துகொண் டிருந்திருப்பாள். வழக்

புகைப்படத்தில் காந்தீயம்



காந்தீயத்தின் ஏதேனும் ஓர் அம்சத்தை விளக்குவது போல் புகைப் படம் எடுத்து அனுப்புங்கள். சிறந்த படத்துக்குப் பரிசு: ரூ. 50. பரிசு பெற்ற படம் அக்டோபர் 2ந் தேதி காந்தி ஜயந்தியை யொட்டி வெளியாகும் கல்கி இதழில் பிரசுரமாகும். முடிவு தேதி: செப்டம்பர் 11ந்தேதி.

புகைப்படக் கலை நுணுக்கங்களில் கருத்துச் செலுத்தப்படவேண்டும். படம் தபால் கார்டு அளவினதாக இருப்பது நலம். பரிசு பெறாவிடினும் பிரசுரமாகும் இதர படங்களுக்கு வழக்கமான சன்மானம் உண்டு. உறையின் மேல், 'புகைப்படப் போட்டி' என்று குறிப்பிடவும். பிரசுரமாகாத புகைப்படத்தைத் திரும்பப் பெற விரும்புவோர் போதிய தபால் தலைகளுடன் கூடிய விலாசமிட்ட உறையை உடன் அனுப்பவேண்டும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. கடிதப் போக்குவரத்து கிடையாது.

ருப் பதிவு செய்யாதபோது லாக்அப்பில் வைத்திருப்பது தவறு என்று வாதம் புரிந்து அவனை விடுவிக்க ஒரு வக்கீலின் துணையுடன் தான் முயன்று வருவதையும் சேகர் கூறியிருப்பான். ஆனால் பிரமீளா அவசரப்பட்டு விட்டாள். விநாடிப் போதும் தாமதியாமல் காரைக் கிளப்பிக் கொண்டு நேரே ஐ.ஜியிடம் போய்க் கண்ணீரும் கம்பலையுமாய் நின்று பார்த்திபனை விடுவிக்குமாறு மன்றாடினாள். நடந்ததையெல்லாம் சாங்கோபாங்கமாகத் தான் எடுத்துரைத்துவிடுவதாகச் சொன்னாள்.

ஐ. ஜி. சமிக்ஞை செய்ததின் பேரில் அக்காரியாலய ஸ்டெனோ ஒருவர் அடக்கமாய் வந்து சற்று ஒதுக்குப்புறமாய் அமர்ந்து கடமையே கண்ணாகச் செயலாற்றினார். பிரமீளா கூறிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் சுருக்கெழுத்தில் பதிவாயின. அவள் கூறியவை டி. ஐ. ஜி. நடராஜனின் ஊகத்துக்கு முற்றிலும் மாறுபட்டிருந்தன.

''ஆறு இரவுகளை நாங்கள் சொர்க்கலோகத்தில் இருப்பது போன்ற உணர்வுடன் ஆனந்தமாகக் கழித்தோம்'' என்று ஆரம்பித்தாள் பிரமீளா. ''இல்லை, அப்படிச் சொல்வதுகூடப் பொருந்தாது. ஏனென்றால், சொர்க்கம் என்பது இத்தனை இன்ப மயமாக இருக்குமா என்று நாங்கள் ஐயப்பட்டதுண்டு. ஆனால் ஏழாவது இரவு இதற்கு முடிவு ஏற்பட்டுவிட்டது. என் தாயார் நான் அறியாதவாறு என்னைப் பின் தொடர்ந்து பார்த்திபனின் அறைக்கு வந்து விட்டாள்......''

விம்மலும் விசும்பலும் அவள் பேச்சைத் தடைப்படுத்தவில்லை; தொடர்ந்தாள்: ''நான் கதவைத் திறந்ததும் இருளில் அவர் குரல் கட்டில் இருந்த திசையிலிருந்து கேட்டது. 'பிரேம்!' என்று அழைத்தார் அவர். எப்போதுமே 'பிரேம்' என்றுதான் கூப்பிடுவார். பெருமூச்சை வெளிப்படுத்துவது போல் நீட்டி உச்சரித்து, இலேசான நடுக்கத்துடன் கூடிய குரலில் அழைக்கும்போது வற்றாத காதலும் தீராத தாகமும் அதில் தொனிக்கும். மீண்டும் 'பிரேம்! பிரேம்!' என்று அவர் அவசரப்பட்டார். 'அடாடா! கொஞ்சம்கூடப் பொறுமையே கிடையாதா?' என்று நான் பொய்க் கோபத்தோடு கேட்டுக் கதவைச் சாத்தத் திரும்பினேன். ஆனால் வாசலில் ஒரு கரிய உருவம் நிற்பதை இருட்டில் உணர்ந்ததும் என் சப்தநாடிகளும் ஒடுங்கிவிட்டன. 'எத்தனை நாட்களாக இந்த நாடகம்?' என்று கேட்டுக் கொண்டே என் தாயார் உள்ளே வந்து விளக்கைப் போட்டாள். ரௌத்திராகாரமான அவள் தோற்றமும் அவள் கையில் பிடித்திருந்த துப்பாக்கியும் எனக்குக் குலை நடுக்கத்தை ஏற்படுத்தின. திருடனுக்குப் பயந்து அவள் வாங்கி வைத்திருந்த துப்பாக்கி இப்போது என் காதலனைக் குறி பார்த்துக் கொண்டிருந்தது. 'அயோக்கிய ராஸ்கல்! இன்றைக்கே நான் பிடிபட்டுத் தூக்குத் தண்டனை அடைந்தாலும் பரவாயில்லை; என் பெண்ணைக் கெடுத்த உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன்!' என்று சொல்லிக் கொண்டே அவரை நோக்கி இரண்டடி எடுத்து வைத்தாள். உண்மையில் தன் பெண் கெட்டுப் போய்விட்டாள் என்பதிலொன்றும் அவளுக்கு அக்கறை இல்லை. ஏனென்றால் பிரபல நட்சத்திரமாவதற்கு முன்பு நான் அவள் வற்புறுத்தலுக்கு இணங்கியே கெட்டுப் போனவள் தான். அப்போது ஆணையிட்டவள் இப்போது தடை விதிக்கக் காரணம், இது உடல் உறவோடு நிற்கிற விஷயமல்ல, உள்ளத்தாலும் நாங்கள் பிணைந்து விட்டோம் என்பதுதான். நான் அவளுடைய உடைமையாக இருக்கும் வரைதான் என் செல்வத்தின் மீது அவள் ஆதிக்கம் செலுத்த முடியும். இன்னொருவரின் உடைமையாகிவிட்டால் அப்புறம் அவர் சொற்படிதான் நான் கேட்பேன். இந்த எண்ணத்தில் தான் அவள் ஆத்திரம் கொண்டு பார்த்திபனைச் சுடப் போனாள். அப்புறமாகப் பிடிபட்டாலும் தான் இந்தக் கொலையைச் செய்யவே இல்லை என்று வக்கீல் வைத்து வாதாடி ஜெயிக்கலாம் என்ற எண்ணம்கூட அவளுக்கு இருந்திருக்கலாம். ரொம்ப நாட்களாகவே அவள் பார்த்திபனைத் திட்டுவதும் ஏசுவதுமாக இருந்தாள். இன்று துப்பாக்கியாலேயே குறி பார்த்தாள். அவள் இந்தக் காரியத்தை நிறைவேற்றி விடுவாள் என்றே எனக்குத் தோன்றியது. என்னைப் பயம் கவ்விக் கொண்டது. எப்படியாவது பார்த்திபனைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் அங்கே இருந்த ஒரு டேபிள் லாம்ப்பை எடுத்து அதன் அடிவாரத்தால் என் தாயாரின் தலையில் ஓங்கி அடித்து விட்டேன். அந்த விநாடியே அவள் தரையில் பேச்சு மூச்சின்றி விழுந்து விட்டாள். ஒரு முனகல்கூட எழவில்லை. இதுதான் நடந்தது....''

ஐ. ஜி.யிடம் இவ்வாறு விவரித்து விட்டு, பிரமீளா மேலே பேச முடியாமல் கரங்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டு புலம்பினாள், ''அம்மா, இந்தப் பாவியை மன்னிச்சுடு அம்மா!'' என்று.

(தொடரும்)

இத் தொடர் கதையில் இவ்வாரம் இடம் பெற்றுள்ள ஒரு முக்கியமான கட்டத்தை மேலட்டையில் வண்ணப்படமாக வழங்குகிறார் ஓவியர் கல்பனா.





FDSAS-1808 TM



படம்: செந்தமிழ் மன்ற அங்கத்தினர்களின் முயற்சியால் கட்டப்பட்ட பேருந்துப் பயணிகள் தங்கும் இடம். அங்கத்தினர்கள் நிற்கின்றனர்.

இளைஞர் சமுதாயம்

19. குன்றில் இட்ட தீபம்!

சுந்தரப் பெருமாள் கோவில் பெயருக்கு ஏற்ப மிகவும் அழகான கிராமம்; தஞ்சை மாவட்டத்துக்கே உரிய வளமும், செழிப்பும் கொண்ட கிராமம். காவேரி, அரசலாறு, திருமலைராஜன் ஆறு, குடமுருட்டி, 'முடி கொண்டான்' என்னும் ஐந்து நதிகளும் இவ்வூரில் பாய்ந்து செழிப்பூட்டும்போது வளத்துக்குக் கேட்பானேன்!

வளம் கொழிக்கும் இவ்வூரில், தமிழ் வளம் பெருக்கவும் செந்தமிழ் மன்றம் என்று ஓர் இளைஞர் சங்கம் மிகவும் நன்றாக நடந்து வருகிறது. 1963ம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழ் வளர்ச்சியையே முக்கிய நோக்கமாகக் கொண்டது.

செந்தமிழ் மன்ற அங்கத்தினர் இந்தக் கிராமத்தில் பஸ் நிற்கும் இடங்களிலெல்லாம் திருக்குறட் பாக்களையும் அவற்றின் பொருளையும் எழுதி வைத்திருக்கின்றனர்.

தமிழ் வளர்ச்சிக்கு அடுத்தபடியாக அவர்கள் அதிகமாக ஈடுபாடு காட்டுவது சாதி ஒழிப்பு. அதைப் பற்றி நான் தீவிரமாக விவாதித்தேன். சங்கத்தின் தலைவர் கி. ஆறுமுகம் உடனே பாரதி பாட்டு ஒன்றைப் பாடிக் காட்டினார்:

வெள்ளை நிறத்தொரு பூனை — எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்
பிள்ளைகள் பெற்றதப் பூனை — அவை
பேருக் கொருநிறம் ஆகும்.
சாம்பல் நிறமொரு குட்டி — கருஞ்
சாந்து நிறமொரு குட்டி...
எந்த நிறம் இருந்தாலும் — அவை
யாவும் ஒரே தரம் அன்றோ
....
வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்-அதில்
மானுடர் வேற்றுமை யில்லை''

''இந்தப் பாடலைக் கவனித்தால் மகாகவி பாரதியார் சாதி வெறிக்கு எத்தகைய சவுக்கடி கொடுத்திருக்கிறார் என்பது விளங்கும்'' என்று ஆவேசமாகப் பேசினார்.

''அந்த வேற்றுமை உணர்ச்சி மக்களைவிட்டு விலக நீங்கள் என்ன செய்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''நல்ல கருத்துள்ள நாடகங்கள் நடத்தி மக்களிடையே சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பி வருகிறோம்'' என்றார் தலைவர்.

''நாடகம் நடத்துவதென்றால் முதலில் ஒரு நல்ல நாடகம் வேண்டும். நடிகர்கள் வேண்டும். அவர்களுக்குப் பாடத் தெரிந்திருந்தால் நல்லது. இதெல்லாம் மிகவும் சிரமசாத்தியமான காரியமாயிற்றே!'' என்றேன்.

''நாடகம் எழுதுபவர் எங்களிடையே இருக்கிறார். அங்கத்தினர்களில் பலர் நல்ல நடிகர்கள்; நன்றாகப் பாடக் கூடியவர்களும் இருக்கிறார்கள். தனியே ஓர் இசைக் குழுவே வைத்திருக்கிறோம். அந்தக் குழுவின் மூலம் பல கலை நிகழ்ச்சிகளை நடத்த முடிகிறது. ஆண்டு தோறும் நாடகமும், இசை நிகழ்ச்சியும் நடத்தி வருகிறோம். கீற்றுக் கொட்டகை போட்டு நாடகம் நடத்தி வருகிறோம்.''

''இவற்றுக்கெல்லாம் மக்களின் ஒத்துழைப்பு இருக்கிறதா?''

''ஆகா! இருக்கிறது. மேலும் நாங்கள் மக்களின் மனத்தில் பதியும் வண்ணம் உருப்படியான சேவைகள் செய்து வருகிறோம்!'' (என் இளைஞர் சமுதாயச் சுற்றுப் பிரயாணத்தில் 'உருப்படியான சேவை' என்ற சொற்றொடரை இங்குதான் நான் முதன் முதலாகக் கேட்டேன்!)

''உருப்படியான சேவை என்றால் என்ன? எதைக் குறிப்பிடுகிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''அதாவது மக்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்தி, சமுதாயப் புரட்சியை உண்டுபண்ணக் கூடிய பல காரியங்களையும் செய்து வருவதோடு மக்கள் மனதில் படும்படி சில சேவைகளைச் செய்கிறோம். பள்ளிக்கூடங்களுக்குக் குடிநீர் நிரப்பி வைக்கப் பித்தளை ஜாடியும் டம்ளர்களும் வாங்கித் தருகிறோம். பஸ் நிற்கும் இடங்களில் மழை, வெய்யிலுக்கு ஒதுங்குமிடம் கட்டியிருக்கிறோம். ஏழைக்

குழந்தைகளுக்கு ஸ்லேட், பல்பம் வழங்கியிருக்கிறோம்.''

''இவை தவிர, இன்னும் ஏதாவது, மக்கள் மனதில் பதியக் கூடிய உருப்படியான சேவை செய்திருக்கிறீர்களா?''

''செய்திருக்கிறோம். இவ்வூர் பிரசவ ஆஸ்பத்திரிக்கு இரண்டு கட்டில்கள் வாங்கி வழங்கியிருக்கிறோம்.''

''இன்னும் ஏதாவது உங்கள் மன்றத்தின் சாதனை என்று சொல்லிக் கொள்ளும்படி செய்திருக்கிறீர்களா?''

''எங்கள் மன்ற அங்கத்தினரில் ஒருவர் ஊராட்சி ஒன்றியத்தின் தேர்தலில் நின்று வெற்றி பெற்றிருக்கிறார். அது ஒரு சாதனை தானே?

''இன்னும் ஏதாவது புதுமையான திட்டம் வைத்திருக்கிறீர்களா?''

''உண்மையிலேயே ஒரு புதுமையான திட்டம் வைத்திருக்கிறோம். கிராமங்களில் கோடை காலங்களில் தீ விபத்துக்கள் ஏற்படுவது சர்வ சாதாரணமான விஷயம். தீவிபத்தில் எரிந்து போன குடிசைகளைப் புதிதாகக் கட்டித் தருவதுடன், அந்தக் குடும்பத்தினருக்கு ஏதாவது நிதி உதவி செய்யவும் திட்டமிட்டிருக்கிறோம்.''

''இது புதுமையான திட்டம் மாத்திரம் அல்ல; மிகவும் சிறந்த திட்டமும்கூட!'' என்று கூறிய நான், ''இன்னும் ஏதாவது...?'' என்று இழுத்தேன்.

''....செய்திருக்கிறோம். இப்போ இங்கே டெலிகிராப் ஆபீஸ் இல்லை. அதைக் கொண்டு வர முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்.''

மேற்கொண்டு, ''இன்னும் ஏதாவது...?'' என்று நான் கேட்கவில்லை. எத்தனை தடவை அக்கேள்வியைப் போட்டாலும் பளிச்சென்று பதில் சொல்ல அவர்கள் நற்காரியங்களை ஏராளமாகச் செய்தும் செய்யத் திட்டங்கள் வகுத்தும் வைத்திருக்கிறார்கள் என்று தோன்றியதால் பேசாமல் இருந்தேன்.

மன்றத் தலைவர் தொடர்ந்தார்: ''எங்கள் சேவை இதுநாள்வரை குடத்தில் இட்ட விளக்காகவே இருந்து வந்திருக்கிறது. ''கல்கி''யில் செந்தமிழ் மன்றத்தைப் பற்றிய விவரங்கள் வெளிவந்தால் அது உடனே குன்றில் இட்ட விளக்காகி விடும்.'' அவர் உற்சாகம் கரை புரண்டது.

இதோ குடத்து விளக்கை எடுத்துக் குன்றில் வைத்து விட்டேன்! இனி, விளக்கின் பாடு, இளைஞர்களின் பாடு! —சோமாஸ்

ஸித்தி வல்லவர் ;
பக்தி வளர்ப்பவர்




மைசூரில் ஆசிரமம் அமைத்துக் கொண்டு அருள்நெறி பரப்பிவரும் ஸ்ரீ கணபதி சச்சிதானந்த சுவாமிகள் அற்புத ஸித்திகள் கூடியவர். நவராத்திரி, சிவராத்திரி விழாக்களின் போது பெரிய தீ வெள்ளத்தில் நீண்ட நாழி மூழ்கியிருக்கும் ஸ்வாமிகள் தமது ஸித்திகளால் பலரது பிணிகளைத் தீர்த்து வருகிறார். ஆயினும் அவர் இந்த ஸித்திகளையே இலட்சியமாகக் கருதிவிடக் கூடாது என்று அடிக்கடி வலியுறுத்தி வருவது குறிப்பிடத் தக்கது. பக்தியும் ஆன்ம ஞானமும் தரும் உபதேச மொழிகளை நல்கி வருகிறார். முப்பதே வயதினரான ஸ்ரீ கணபதி சச்சிதானந்த ஸ்வாமிகளின் அற்புதச் செயல்களாலேயே ஏராளமான மக்கள் அவரிடம் ஈர்க்கப்பட்டு வருகின்றனர். அவர்களுக்கு அணிமாதி ஸித்திகளைவிட ஒப்பற்றதான ஞானமும் பக்தியும் சித்திப்பதற்கு ஸ்ரீ ஸ்வாமிகள் வழிவகைகள் கூறுகிறார். ஸ்ரீ ஸ்வாமிகள் இம்மாதம் 31ந் தேதி சென்னைக்கு விஜயம் செய்கிறார்கள். செப்டம்பர் 7-ந் தேதிவரையில் மயிலை கச்சேரி சாலையில் தங்கியிருப்பார்கள். ஸ்ரீ கணபதி சச்சிதானந்த ஞானபோத சபையினர் இதையொட்டி பூஜை, பஜனை, உபந்நியாசம் முதலியன ஏற்பாடு செய்துள்ளனர். இவர்கள் சபைக்கு ஒரு லட்ச ரூபாய் செலவில் கட்டிடம் எழுப்பத் திட்டமிட்டிருக்கிறார்கள். ஸ்வாமிகளைத் தரிசிப்பதற்கு அழைப்பும், கட்டிடம் எழுப்ப நிதி உதவிக்கோரிக்கையும் விடுக்கப்பட்டிருக்கின்றன. பொருளாளர், ஸ்ரீ கணபதி சச்சிதானந்த ஞான போத சபா, 2/1, கச்சேரி சாலை, மயிலை, சென்னை—4 என்ற விலாசத்துக்குப் பொருள் அனுப்பி வைக்கலாம்.

இன்றைய முன்னணி பிரபல

பழனி டாக்டர் எஸ். காளிமுத்து

R. M. P. (Ind.) V. V. C., A. M. I. H.

அவர்களின் விஜயம்



சந்திக்கும் விலாசங்கள்

1-ந் தேதி திருநெல்வேலி: நெல்லை வாட்ஜ் காலை 8 மணி முதல் 12 மணி வரை.

1-ந் தேதி நாகர்கோவில்: உடுப்பி ஸ்ரீகிருஷ்ண பவன், மாலை 2 மணி முதல் 4 மணி வரை.

2-ந் தேதி மதுரை: மணீஸ் கபே, காலை 8 மணி முதல் மாலை 2 மணி வரை.

2-ந் தேதி புதுக்கோட்டை: வஸந்தா வாட்ஜ் மாலை 4 மணி முதல் 5-30 மணி வரை.

3-ந் தேதி காரைக்குடி: AVM. PL. ரெஸ்ட் ஹவுஸ், காலை 8 மணிமுதல் 11 மணிவரை.

3-ந் தேதி அறந்தாங்கி: கோகுலம் வாட்ஜ் பகல் 12 மணி முதல் 1 மணி வரை.

3-ந் தேதி பட்டுக்கோட்டை: அசோகாவாட்ஜ் பகல் 2 மணி முதல் 3-30 மணி வரை.

3-ந் தேதி மன்னார்குடி: மன்னை வாட்ஜ் மாலை 4-30 மணி முதல் 6 மணி வரை.

4-ந் தேதி திருச்சி: ஹோட்டல் அஜந்தா காலை 8 மணி முதல் 2 மணி வரை.

4-ந் தேதி கரூர்: பெரியார் உணவு விடுதி மாலை 3-30 முதல் மாலை 5 மணி வரை.

5-ந் தேதி தஞ்சை: ராஜா ரெஸ்ட் ஹவுஸ் காலை 8 மணி முதல் பகல் 12 மணி வரை.

5-ந் தேதி திருவாரூர்: அபூபக்கர் பில்டிங் மாலை 2 மணி முதல் 4 மணி வரை.

5-ந் தேதி நாகை: தினகர விலாஸ், மாலை 5 மணி முதல் 7 மணி வரை.

6-ந் தேதி காரைக்கால்: அசோக் வாட்ஜ் காலை 8 மணி முதல் 10 மணி வரை.

6-ந் தேதி கும்பகோணம்: தாஜ்மஹால் வாட்ஜ், காலை 11 முதல் 2 மணி வரை.

6-ந் தேதி மாயவரம்: காளியாகுடி வாட்ஜ் பகல் 3 மணி முதல் 4-30 மணி வரை.

6-ந் தேதி கடலூர் N. T.: ஹோட்டல் பிருந்தாவனம், இரவு 7 மணி முதல் 8-30 மணி வரை.

7-ந் தேதி பாண்டிச்சேரி: அருணா வாட்ஜ் காலை 8 மணி முதல் 10 மணி வரை.

பழனி சித்தர் வைத்தியசாலை

போன்: 316] பழனி [தந்தி: சித்தர்

நினைத்த உடன் தயார்

— இனி, மேலே வாசியுங்கள்!

ஸ்ரீ கணேஷ்ராம்ஸ்

'திடீரெக்ஸ்'

Dhideerex
(FOR INSTANT PREPARATION)

திடீர்

777

Registered)

திடீர் அரிசி இட்லி கேக்

—கொதிக்கும் தண்ணீரிலோ சாம்பாரிலோ ஒரு நிமிஷம் ஊற வைத்தால் இட்லி தயார்.

திடீர் சாதம்

(Instant Cooked Rice)

கொதிக்கும் தண்ணீரில் சில நிமிஷம் போட்டு வைத்தால் தயார்.

இந்த சாதத்தில் சிறிது புளியோதரை பவுடர், உப்பு, நல்லெண்ணையும் கலந்தால் புளியோதரை ரெடி.

மேற்படி சாதத்தில் பருப்பு பொடியும் நெய்யும் கலந்தால் பருப்பு சாதம் தயார்.

தயிர் சேர்த்தால் தயிர் சாதம்.

திடீர் வெஜிடபிள் பிரிஞ்சி

—கொதிக்கும் தண்ணீரில் சிறிது நேரம் வைத்திருந்து, அதற்கு அளவான உடனிருக்கும் பவுடரையும் சிறிது நெய்யும் கலந்தால் ரெடி.

திடீர் அரிசி சேவை (சேமியா) மிக்ஸ்

கொதிக்கும் தண்ணீரில் கலந்தால் ரெடி.

குறிப்பு: மேற்சொன்ன தயாரிப்புகளைத்தும் அசல் தயாரிப்புகளுக்கு சமமான ருசியுடன் இருப்பது நிச்சயம்.

எமது முக்கிய ஸ்பெஷல் தயாரிப்பு

வெஜிடபிள் பிரிஞ்சி

தயாரிப்பது வெகு சுலபம்!

— தயாரிப்பாளர்கள் —

M/s. R. S. N. அய்யர் & R. S. G. அய்யர்

— உரிமையாளர்கள் —

ஸ்ரீ கணேஷ்ராம் & கோ.

(போன்: 20401 — PBX. 3 லைன்கள்)

46, தம்பு செட்டித் தெரு, சென்னை-1

தயாரிப்பு முறைகளை உருவாக்ியவர்கள்:

ஸ்ரீ கணேஷ்ராம்ஸ்

அனலிட்டிக்கல் லேபரட்டரீஸ், சென்னை-1



குழந்தைகள் முதல் பெரியவர் வரை விரும்பும் போஷாக்கு பானம்!

விவா சுவை நிறைந்தது. விவா போஷாக்கு செறிந்தது. விவா நவீனமானது. பெரியவர்களுக்குப் பிடித்தமானது. குழந்தைகள் விரும்புவது — விவா.

ஏனெனில் விவா தூய பாலாடைக் கலவையோடு இன்னும் பல நல்ல பொருட்கள் அடங்கியது. விவாவில் உள்ள புரோட்டீன் உங்களுக்கு வலிமை அளிக்கிறது. விவாவில் அடங்கிய கார்போஹைட்ரேட் உங்களுக்குப் புத்துணர்ச்சியைத் தருகிறது. விவாவில் மால்ட் செய்யப்பட்ட பார்லியும், கோதுமையும் நிறைந்துள்ளது. எனவே விவா எல்லாவற்றையும் விட சுவைமிகுந்த போஷாக்கு பானமாகத் திகழ்கிறது.

விவா அதிநவீன தொழில்நுட்ப முறையில் உருவானது. எனவே அதன் பூரண போஷாக்கு தன்மை நீடித்து நிலைத்து நிற்கிறது மேலும் உடனடியாக கரைகிறது.

இன்றே உங்கள் குடும்பத்துக்கு ஒரு பாட்டில் விவா வாங்கிச் செல்வீர் — புதிய வலிமையும் புத்துணர்ச்சியும் பெறுவீர்!

சிறந்த சுவைக்கும், செறிந்த சக்திக்கும் நவீன **விவா**

ULKA-V7-TAM

யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தென்றல்

சமீபத்தில் சென்னையில் ஒரு புதிய தமிழ்த் தென்றல் வீசியது. அத்தென்றல் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு, மதுரை, கோவை, திருக்கழுக்குன்றம், சென்னை முதலிய பல இடங்களிலும் வீசி, ஆஸ்திகர் உள்ளங்களையெல்லாம் குளிர்வித்தது. ஆம், யாழ்ப்பாணம் சுவாமிநாதத் தம்பிரான் தமிழ் நாட்டுக்கு எழுந்தருளி மேற்கண்ட இடங்களில் எல்லாம் இசையோடு தமிழ்ப் பாடல்களைப் பாடிச் சிவனடியார் வரலாறுகளையும் சிவபிரான் திருவிளையாடல்களையும் எடுத்தியம்பிச் சிவநேசச் செல்வர்களின் நெஞ்சங்களையெல்லாம் பரவசப்படுத்தினார்.

திருப் பெருந்திரு சாமிநாதத் தம்பிரான் சுவாமிகள், மதுரை ஞானசம்பந்த மடத்தின் கிளை மடமாக யாழ்ப்பாணத்தில் நல்லூரில் விளங்கும் ஞானசம்பந்த மடத்தினை அலங்கரிக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் சாமிகள் மடத்தின் கண் சிவஞான சித்தியார், சிவஞானபோதம் வகுப்புக்கள் நடத்துகிறார்கள். சமய வகுப்புக்கள் வாரந்தோறும் நடத்துகிறார்கள். தேவாரம் முதலிய சமயப் பதிகங்களைப் பண்ணோடு பாடப் பயிற்றுவிக்கிறார்கள். வாரத்தில் இரண்டு நாட்கள் தேவாரம் பாடிக் கொண்டு வீதி உலா வருவதைக் கண்டிப்பான சம்பிரதாயமாகக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பல அரும் பணிகளைச்செய்துவருகிறார்கள்.

ஸ்ரீ சாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் 1961ம் ஆண்டு துறவறம் பூண்டு மடத்தில் சேர்ந்தார்கள். அப்போதிலிருந்து இத்தகைய அரும் பணிகள் நடத்தி வருகிறார்கள்.

ஸ்ரீ சுவாமிகளின் பாட்டனார் யாழ்ப்பாணத்தில் கணேசய்யர் என்ற புகழ் பெற்ற தமிழ்ப் புலவர் ஆவார். அதனால் அவர்களுக்குச் சிறு பிராயம் முதலே தமிழில் அளவுகடந்த ஆர்வமும் இசையில் ஒரு ருசியும் இருந்து வந்தது. அதிலும் அவர்களுக்கு ஞானசம்பந்தர் தேவாரம் என்றால் அளவுகடந்த பற்றுண்டாம். அதன் விளைவாகவே அவர்கள் ஞானசம்பந்த மடத்தைத் துறவுக் கோலம் பூண்டு சேர நேர்ந்தது.

சென்னையில் தர்மபுர ஆதீன பிரசார நிலையத்தில் நான்கு நாட்கள் திருவிளையாடற் புராணத்திலிருந்து சில கதைகள் நிகழ்த்தினார். உணர்ச்சியும், தெளிவும், இசையும் கலந்து தமிழ் நாயன்மார்களின் பாடல்களை வழங்கும் போது குழுமியிருந்த மெய்யன்பர்கள் உடல் எல்லாம் பூரித்துவிடுவதைக் காண முடிந்தது..

காலட்சேப முறையில் கதை நிகழ்த்தினாலும், காலட்சேப முறையில் நகைச்சுவை வெடிகளை நுழைப்பதில்லை. அவர்கள் பூண்டுள்ள உன்னத துறவுக் கோலத்துக்கு ஏற்ப அவர்கள் கதை நிகழ்த்திக் கொண்டு, சுவையைத் தளர விடாமல் செல்வது வியப்பாக இருந்தது.

அதைவிட மிகவும் வியப்பூட்டிய விஷயம் சைவ சமய மட்த்தைச் சேர்ந்த தம்பிரானாயிருந்தும் அவர்கள் ஏராளமான கம்பராமாயணப் பாடல்களையும் ஆழ்வார்களின் பாசுரங்களையும் மேற்கோள் காட்டி உரை நிகழ்த்துவது.

உண்மையில் சுவாமிகள் பல இடங்களில் இருபது நாட்கள், முப்பது நாட்கள் கம்பராமாயண விரிவுரையே ஆற்றியிருக்கிறார்கள். சுவாமிகளுக்குப் பாரதியாரிடமும் அதிக ஈடுபாடு உண்டு. பாரதியாரின் சக்திப் பாடல்கள், கண்ணன் பாடல்கள், பாஞ்சாலி சபதம் முதலியவற்றிலிருந்து மேற்கோள்கள் அவர்கள் உரைகளில் விரவி வருவதைக் காணலாம்.

சுவாமிகளின் அரும் பணியைக் கேள்விப்பட்ட காஞ்சி ஆசாரிய சுவாமிகள், திருவிளையாடற் புராண விரிவுரை முடியுநாளன்று தம்பிரான் சுவாமிகளுக்கு ஒரு சால்வையும் ஸ்படிக மணி மாலையும் அனுப்பி வைத்தார்கள். சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி கிருஷ்ணசுவாமி ரெட்டியார் அவர்கள் சுவாமிகளுக்கு அவற்றை அணிவித்துப் பாராட்டுரை வழங்கினார்கள். இந்த யாழ்ப்பாணத் தென்றல் மீண்டும் செப்டம்பர் மாதத்தில் சென்னையில் வீசப் போவதாக, ''இந்து தர்ம பிரசார மன்றத்தார்'' அறிவிக்கிறார்கள். இம்முறை கம்பராமாயண விரிவுரையே நடக்கும் என்று கூறுகிறார்கள். திருவருள் கூட்டி வைக்க வேண்டும்!

— எஸ். வி. எஸ்.



அவள் எழுதின அரைகுறைக் கதை—5

ஸ்ரீமதி விஜயாபாலகிருஷ்ணன் எழுதியது:

ராமையாவின் லீவு லெட்டரைப் பார்த்த மானேஜர் பார்த்தசாரதியின் கண்களில் தீப் பொறி பறந்தது. 'காலிங் பெல்'லை ஓங்கி அடித்தார் அவர். மணி ஓசையைக் கேட்டுப் பியூன் கேசவலு நடுங்கிவிட்டான்.

''கூப்பிடு மிஸ்டர் ராமையாவை'' என்று உரக்கச் சொன்ன பின், 'இடியட்', 'மடையன்' என்று மானேஜர் முணுமுணுத்தது கேசவலுவின் காதில் விழாமல் இல்லை.

'சோடா பாட்டில்' மூக்குக் கண்ணாடி வழியாக ஏதோ காகிதத்தை ஆராய்ந்து கொண்டிருந்த ராமையாவிடம், ''மானேஜர் கூப்பிடறார் ஸார்!'' என்று கேசவலு சொன்னவுடன், சுற்றிலும் வீற்றிருந்த இதர குமாஸ்தாக்கள் 'ஏதோ ஆபத்துதான்' என்ற ரீதியில் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பியூன் தலை மறைந்ததும் ''அழுப் ரொம்பக் கோபமாக இருக்கான் போலிருக்கே! மணியை என்னமா தட்டிறான்?'' என்றான் ரங்காச்சாரி.

''போயும் போயும் அப்பாவி ராமையாதானா அகப்பட்டார்? நல்லவர்களுக்கு இது காலமில்லை'' என்று அங்கலாய்த்தார் தாவூத்கான்.

''காலத்துக்கு ஏற்றாற்போல் நடந்துக்கல் லேன்னா கஷ்டம்தான். நம்ம ராமையா திரேதாயுகத்திலே இருக்கார். சத்திய மேவ ஜயதேன்னு சொல்லிண்டு இவர் காரியங்கள் செய்யப் போய்த்தான் வம்பில் மாட்டிக் கொள்கிறார். கலப்படமில்லாத உண்மை இந்த நாளில் எடுபடுமோ?'' என்று ஒரு குட்டிப் பிரசங்கமே செய்து விட்டாள் 'ஸ்டெனோ' குமாரி.

''சின்ன வயசிலே நானும் ராமையாவும் சேர்ந்து படித்தோம். ஆராவமுத அய்யங்கார்னு எங்களுக்கு ஒரு வாத்தியார் இருந்தார். நிறைய நீதிக் கதைகள் சொல்வார். ராமன் என்ற நல்ல பையனும் ஹரி என்ற கெட்ட பையனும்தான் அவர் கதைகளின் நாயகர்கள். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உண்மையே பேசின ராமன், ராஜதானிக் கல்லூரியிலேயே முதல் பையனாகத் தேறி அந்த ஜில்லாக் கலெக்டரானான்னு கதையை முடிப்பார். அவருக்குத் தெரிந்த உத்தியோகங்களில் கலெக்டர் உத்தியோகம்தான் மிகப் பெரியது. ராமையாவுக்கு அந்த ராமன்தான் இலட்சியபுருஷன்'' என்றார் கோவிந்தராஜன்.

மானேஜரைப் பார்க்கச் சென்ற ராமையா தம் இடத்துக்குத் திரும்பி வந்தார்.

''என்ன, அர்ச்சனை பலமோ?'' என்றார் சீதாராம ராவ். ஆபீஸில் யாருக்காவது வசவு கிடைத்தால் அவர் உள்ளூற மகிழ்வார்.

''அர்ச்சனையாவது கிர்ச்சனையாவது! ராமையாவின் நேர்மைக்காக ஏதாவது ஸ்பெஷல் இன்கிரிமெண்ட் சிபாரிசு செய்யப் போவதாகச் சொல்லியிருப்பார் மானேஜர். என்னங்காணும் ராமையா, அப்படித்தானே?''

''எதுக்காக ராமையாவின் வயிற்றெரிச்சலை இப்படிக் கொட்டிக்கிறீர்? பாவம், அவர் நிறைய 'டோஸ்' வாங்கிண்டு வந்திருக்கார். கொஞ்ச நேரம் மின்சார விசிறிக்குக் கீழ் அமர்ந்து சிரம பரிகாரம் செய்துகொள்ளட்டும்; வள வளவென்று பேசி உயிரை வாங்காதேயும்'' என்றார் மேனன்.

''ஏன் ஸார், என்ன நடந்தது? சொல்லுங்க ஸார். சொல்ல மாட்டீங்களா? எங்கிட்டே மட்டும்'' என்று கெஞ்சினாள் குமாரி.

ராமையா நாற்காலியைப் பின்னுக்கு இழுத்துக்கொண்டு, ''உனக்கு மட்டுமென்ன, எல்லோருக்குமே சொல்லி விடுகிறேன். இதில் இரகசியம் என்ன வேண்டிக் கிடக்கு?'' என்றார்.

''கமான், டேக் இட் இன் த ஸ்பிரிட்! பீ ஏ ஸ்போர்ட்'' என்றார் மேனன்.



விஷயம் வேறொன்றுமில்லை. ராமையா முதல் நாள் காரியாலயத்துக்கு லீவு போட்டிருந்தார். எல்லாரையும் போல் 'தலைவலி' 'ஜுரம்' என்று அவர் எழுதியிருக்கவில்லை. பொய்யான காரணத்தை ஜோடித்து எழுதுவாரா என்ன? 'வண்ணான் துணிமணிகளைக் கொண்டு வராததினால் இன்று காரியாலயத்துக்கு நான் வர இயலாது' என்ற நிஜமான காரணத்தை அப்படியே எழுதி யிருந்தார். அதற்குத்தான் மானேஜர் அப்படி விளாசினார்!

"ஏங்காணும், உமக்கு அறிவு கிறிவு இருக்கா? 'நாளைக்கு வீட்டில் சமையல் பண்ண வேண்டியிருக்கு, லீவு வேண்டும்' என்று எழுதுவீர் போலிருக்கே! அவசர ஜோலி என்று ஏதாவது எழுதித் தொலைக்கக் கூடாதா? இல்லே, தலைவலி, மண்ணாங்கட்டி என்று உளறி வைக்கிறதுதானே?"

"எனக்குப் பொய் சொல்லிப் பழக்கமில்லே, ஸார்!" என்றார் ஸ்ரீமான் ராமையா.

"அப்படி யென்றால் நீர் இளிச்சவாயனாகச் சாகவேண்டியதுதான். உம்ம மாதிரி நாலு பேரோட மாரடித்தால் எனக்குப் பைத்தியமே பிடித்து விடும்... ஒழிந்து போம்! நீரும் உம்ம சத்தியமும்!"

அன்று சாயங்காலம் ராமையா ஒரு முடிவுக்கு வந்து விட்டார். 'சத்திய மேவ ஜயதே' என்று நேற்றுவரை வாழ்ந்து வந்தவர் புனர் ஜன்மமெடுக்கத் தீர்மானித்து விட்டார். நேர்மையாக இருக்கப் போய்த் தமக்கு ஏற்பட்ட இடுக்கண்களை அவர் கணக்கெடுத்துப் பார்த்தார். வாங்கியிருந்த இளிச்சவாயன் பட்டங்களைப் பெருமையுடன் ஒவ்வொன்றாக எண்ணினார். இனிமேல் உண்மையே பேசுவதில்லை என்று தீர்மானித்தார்.

ராமையாவிடம் முதலில் மாட்டிக்கொண்டவர் நந்தகோபால் என்ற வியாபாரி. கப்பல் காரில் போய்க் கொண்டிருந்தவர் காரை நிறுத்தி ராமையாவிடம் 'ஏர் போர்ட்'டிற்கு வழி கேட்டார். தவறான பாதையைக் காட்டியதில் ராமையாவுக்குத் தனியான மகிழ்ச்சி, மற்றவர்களைப் போல் தாமும் பொய் சொல்லி விட்டோம் என்று ஒரே குதூகலம்!

ஆனால் மறுநாள் சற்றும் எதிர்பாராத வகையில் நந்தகோபால் ராமையாவைத் தேடி வந்ததும், அவருக்குச் சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. மீசைக்காரன் கழுத்தைத் திருகத்தான் வந்திருக்கிறான் என்று தீர்மானித்தார் ராமையா.

"ஸார், நீங்கள் மனிதனில்லை, தேவன்" என்று நந்தகோபால் திருவாய் மலர்ந்ததும் ராமையாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது.


"நான் இன்று உயிருடன் இருப்பதே உங்களால்தான்! நீங்கள் போட்ட பிச்சை இது. 'ஏர்போர்ட்'டுக்கு மட்டும் நீங்கள் சரியான பாதையைக் காட்டி யிருந்தால் நான் இந் நேரம் செத்துச் சுண்ணாம்பாகி யிருப்பேன். ஆம்! அந்த விமானம் நொறுங்கி விட்டது. நீங்கள் என்னை வேறு திசையில் திருப்பி அனுப்பப் போய் நான் உயிர் பிழைத்தேன்."

நந்தகோபால் அத்துடன் விடவில்லை. அவருக்குத் தம்மை அறியாமலே ராமையாவிடம் ஒரு பிடிப்பு ஏற்பட்டு விட்டதாம். பூர்வ ஜன்மத்தைப் பற்றி ஏதேதோ சொன்னார் அவர். விட்டுப்போன தொந்தமாம் அது. கடைசியில் "நான் உங்களை என் மாப்பிள்ளையாக்கிக் கொள்ள விரும்புகிறேன்" என்ற குண்டைத் தூக்கிப் போட்டார்.

இது முதற்கொண்டு ஸ்ரீமதி விஜயா பாலகிருஷ்ணனின் அரைகுறைக் கதையைப் பூர்த்திசெய்து ஸ்ரீ ஜி. எஸ். பாலகிருஷ்ணன் எழுதியது :

"முடியாது! அது ஒரு நாளும் முடியாது" என்று உணர்ச்சி வசப்பட்டு மறுத்தார் ராமையா.

"ஏன் முடியாது? என் பெண் நல்ல அழகி. பணம்



கொட்டிக் கிடக்கிறது. எம். ஏ. முதல் வகுப்பில் தேறி யிருக்கிறாள். இன்னும் என்ன ஐயா வேண்டும்?"

"உங்கள் பெண் பொய் சொல்வாளா? எனக்குப் பொய் சொல்லும் மனைவிதான் வேண்டும்! அப்பாவியான நான் அசட்டுத்தனமாக உண்மையைக் கட்டிக் கொண்டு மாரடிக்கப்போய் என் வாழ்க்கையே வீணாகிவிட்டது. இளிச்சவாயன் பட்டம் வேறு. மற்றவர்களைப்

போல் பொய் சொல்ல முயன்றால் மனச்சாட்சி மண்ணாங்கட்டி எல்லாம் உறுத்துகிறது. நேற்று நான் உங்களிடம் சொன்னது தான் என் முதல் பொய். அதுவே என்னை எவ்வளவு பாடுபடுத்திற்று தெரியுமா?.... இனிமேல் இந்த வயதுக்கு மேல் பொய் சொல்லும் கலையை என்னால் கற்றுக்கொள்ள முடியாது. அது நிச்சயம். என் மனைவியாவது பொய் சொல்கிறவளாக இருந்தால்தான், வாழ்க்கையில் நான் கடைத்தேற முடியும். இருவரும் சத்தியத்தைக் கட்டிக் கொண்டு மாரடித்தால் உருப்பட்டாற்பலேதான்!''

நந்தகோபால் தங்கப் பல் தெரியச் சிரித்தார். ''கவலைப்படாதேயும் மிஸ்டர் ராமையா! என் பெண் அநுராதா படிப்பிலே பூஜ்யம்! ஆனால் பிராகிரஸ் ரிப்போர்ட்டில் என் கையெழுத்தைப் போடும் அளவுக்குக் கைதேர்ந்தவள்! சினிமா பார்க்கப் போகையிலெல்லாம் ஸ்பெஷல் கிளாஸ் இருப்பதாகக் கூசாமல் புளுகுவாள். பொய் சொல்வது அவளுக்குத் தண்ணீர் பட்ட பாடு. வெற்றிகரமாக பிஸினஸ் செய்யும் நந்தகோபாலின் பெண்ணல்லவா அவள்? பாரம்பரியம் எங்கே போகும்? நான் நிமிடத்துக்கு நிமிடம் பொய் சொல்பவன். இல்லாவிட்டால் பிஸினஸ் படுத்துவிடாதா?''

''நிஜமாகவா?'' ராமையா துள்ளிக் குதித்தார்.

சினிமாத் தியேட்டரிலிருந்து வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள் ராமையாவும் அவர் மனைவி அநுவும்.

''ஐயையோ!'' என்றாள் அநு.

''என்ன?'' என்றார் ராமையா.

''இங்கே சாலையைக் கிராஸ் செய்யக் கூடாது. சட்ட விரோதம். பலகையில் கொட்டை எழுத்தில் எழுதியிருக்கிறதே!''

''நீ ஒரு பக்கம், விட்டுத் தள்ளு! நாலேக்குக் கோர்ட்டுக்கு இழுத்துச் செல்வார்களா? நாங்கள் ஊரிலேயே இருக்கவில்லை என்று சாதித்து விட்டால் போச்சு! இந்த நடுநிசியில் நாம் சாலையைக் கிராஸ் செய்ததற்குச் சாட்சிகளா இருக்கிறார்கள்?''

''நீங்கள் இப்படிப் பேசலாமா? ஒடுங்கள். அதோ ஒரு டிராபிக் கான்ஸ்டபிள் தூங்கி வழிந்து கொண்டு நிற்கிறார். அவரிடம் போய்ச் சட்டத்தை மீறின உண்மையை ஒப்புக்கொண்டு அதற்கான தண்டனையைக் கேளுங்கள். படித்தவர்களான நாம் நேர்மையுடன் நடந்து கொள்ள வேண்டாமா?''

ராமையாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஆனால் சமாளித்துக் கொண்டார்.

நந்தகோபால் ஆயிரம் பொய் சொல்லி முன்னுக்கு வந்த வியாபாரி என்பதை உணராதது ராமையாவின் குற்றம்தானே?

வட்டமேஜை

சுதந்திர தின வெள்ளி விழாவைச் சந்தித்த இரண்டு வாரங்களுக்குப் பின் நம் மாண்புமிகு முதல்வர் துவக்கிவைத்த கள்ளுக் கடைக்கு ஓர் ஆண்டு முடிகிறது. 'ஒரு கருநாகப் பாம்புக்கு ஒரு பல் முளைத்து விட்டது' என்ற உவமையை இதற்கு நாம் கூறலாம். இந்த ஓர் ஆண்டு ''நிறை''வுக்கு நம் ''மாண்புமிகு''க்கள் விழா எடுக்காமலிருந்தால் அதுவே நாம் மகிழ்ச்சி கொள்ளக் கூடிய விஷயம்!

அந்த ''நிறை''வை முன்னிட்டுக் கவிதை புனைந்து அனுப்புகிறேன்.

பாவி மவனெப் பத்திக் கேக்கப்
    பத்திகிட்டு வருகுது
சாவி போன கெடியாரம் போல
    சந்துக்குள்ளே கெடக்கிறான்
தாலி கட்டின நாளு முதலாத்
    தர்க்கம்பண்ணி யார்கது
கூலிக் காசெக் கொண்டா ராமெக்
    குடிச்சே தீர்க்கலாச்சது
கள்ளுக்கடெ வந்த நாளா
    கஞ்சுமிங்கே இருக்கல்லே
பள்ளுப் பாடின காலம் போச்சு
    பரதேசிக் கோலமாச்சு
எம்மா நாளேக் கிது மச்சான்?
    என்னு நானு கேக்கறப்ப,
கம்மா இரு. புள்ளேன்னு சொல்லி
    கலோகம் பாடுறான்
பூமி ஆள வந்த சாமானியரே
    வேலி பயிரே மேய்வதா?
சாமி தெரியுதான்னு பாரு —
    வவுநெரியச் சிரிக்கிறோம்.

காரமடை
7–8–72 ஆர். தீனதயாளன்

ஆர்வி எழுதிய 'மௌனப் புன்னகை' என்ற நாவல் வானதி பதிப்பகத்தின் வெளியீடு. உங்கள் சிறுகதை சிறப்பிதழில் ஆர்வி எழுதிய சிறப்புச் சிறுகதை (அட்டைப் படக் கதை) 'அப்பவே சொன்னான் நாயர்' என்ற கதை மேற்படி நாவலில் 30ம் பக்கத்திலிருந்து 48ம் பக்கத்துக்கிடையில் புதைந்திருக்கிறதே. இவ்வாறு செய்யலாமா ஆர்வி?

சென்னை-36
7–8–72 ஏ.பி. வீரராகவன்

★

நான் சென்ற மாதம் திருநெல்வேலியில் ஒரு விபரீதமான காட்சியைக் கண்ணுற்றேன்.

நடு ரோட்டில் ஒரு குடிகாரன் எக்கச்சக்கமாகக் குடித்துவிட்டு, சுயநினைவிழந்து, தன் கையில் இருந்த ரூபாய் நோட்டுக்கள் ஒவ்வொன்றையும் சுக்குநூறாகக் கிழித்துக் காற்றில் பறக்க விட்டுக் கொண்டிருந்தான். இது எவ்வளவு பெரிய துயரகரமான செயல்! சுயநினைவு திரும்பியபின் அவன் மனம் என்ன பாடு படும்? அவன் குடும்பம் எப்படித் தவிக்கிறதோ!

மதுக் கடைகளை மூடுவதுதான் உண்மையிலேயே மக்களுக்கு அரசாங்கம் செய்யும் நல்ல தொண்டு.

திருக்குறுங்குடி
12–8–72 குமரிமணாளன்

(கிழிந்த நோட்டுத் துண்டையும் தம் கடிதத்துடன் அனுப்பியிருக்கிறார். - ஆசிரியர்)

அதோ நிற்கிறாள் விமலா!

கோமகள்



விமலா உள்ளே வரும்போதே மிகுந்த கவலை தோய்ந்த முகத்துடன் அவளை எதிர் கொண்டான் நம்பி. அதைக் கவனித்துக் கேட்கும் ஆவலின்றி, ''உஸ்! அப்பாடா!'' என்று தன் அலுப்பையும் சலிப்பையும் உதற முயன்றவாறே கைப் பையைத் தூக்கி மேஜையின் மீது எறிந்தாள்.

தான் சொல்ல வந்ததை இப்போது வேண்டாம் என்று தள்ளிப் போட்டவனாக நாற்காலியில் சரிந்தான் நம்பி.

விமலா உடை மாற்றிக் கொண்டு உள்ளே போனாள். ஸ்டவ்வைப் பற்ற வைப்பதும், காப்பி பில்டர் ஓசைப்படுவதும் கேட்டது.

இரண்டு டம்ளர்களில் காப்பியும், ஒரு தட்டில் பிஸ்கட்டுமாக அவன் எதிரில் வந்து அமர்ந்தாள் அவள்.

''உங்கள் அப்பாவிடமிருந்து கடிதம் வந்திருக்கிறதோ?'' என்றாள் பிஸ்கட்டை வாயில் கடித்தவாறே.

''ஆமாம் விமலா!'' என்றான் பரிதாபமாக.

'என்ன விசேஷம்' என்று அவள் கேட்கப் போவதில்லை. அது அவனுக்குத் தெரியும். என்றாலும் பிரச்னையின் முக்கியத்துவத்தால் அவனே மேலும் பேசவேண்டி வந்தது.

''அப்பா ரொம்ப நாட்களாக ஆசைப்பட்ட ஒரு தோப்பு விலைக்கு வந்திருக்கிறதாம்.. கையிலே 'கேஷா'கத் தருவதானால் ஆயிரம் ரூபாய் குறைத்துத் தருவதாகக் கூறுகிறார்களாம். அப்பாவிடம் மூவாயிரம் இருக்கிறது. மேற்கொண்டு இரண்டாயிரம் அனுப்பி வைக்க முடிந்தால் அடுத்த கணமே தோப்பை என் பெயரில் வாங்கி விடுவதாக எழுதியிருக்கிறார்.''

''ஊரில் யார் எதை விற்றாலும் உங்கள் அப்பாவுக்கு அதை வாங்கியாக வேண்டும். போதுமே... நமக்கு மேலே மேலே கிராமத்தில் இனிமேல் சொத்து எதற்கு? நாம் இங்கே பழகிப் போய்விட்டோம். அதைப் போய்க் கட்டிக் காக்க வேண்டுமா?''

''அப்பாவோட ஆசைக்காவது அதை வாங்கித்தான் தீரணும் விமலா...''

''அப்படித் தீர்மானிச்சுட்டா என்கிட்டே கேட்பானேன்?''

''என் பெயரில் ஐந்நூறு ரூபாய்கூட இல்லையே? உன் அக்கௌண்டிலிருந்துதான் எடுக்க வேண்டும்!''

''என் பணத்தையா? அதில் ஒரு நாளும் கையை வைக்க மாட்டேன். அது அப்படியே இருக்க வேண்டியது.''

''நிலம் நமக்குத்தானே வாங்கறோம்? அப்புறம் உன் பணம், என் பணம்னு என்ன இருக்கு?''

''ஓகோ! அப்படியா?... நான் சம்பாதித்தது என் பணமில்லாமல் உங்கள் பணம் எப்படி ஆகும்?''

''நாம் இரண்டு பேரும்தான் சம்பாதிக்கிறோம். உனக்கும் சேர்த்து நான் செலவு பண்ணறேன். ஆக நீயும் குடும்பத்துக்கு உதவ வேண்டியதுதானே நியாயம்!''

''அது முடியாது! நான் அதைத் தருவதாக இல்லை'' என்று அழுத்தமாகக் கூறிவிட்டாள் விமலா.

''வாட் டு யூ மீன் பை தட்?''

அவன் குமுறினான்.

''ஸிம்பிள்! நீங்கள்தான் என்னைக் காப்பாற்றக் கடமைப்பட்டவர். நானும் அப்படி இருக்கணுங்கறது அவசியமில்லை.''

''உன் காலை ஊன்றி நிற்கும் தைரியத்தில் பேசுகிறாய்!''

''பின்னே பயப்பட அவசியம்?'' அவள் காப்பியை உறிஞ்ச ஆரம்பித்தாள்.

''இதுதான் உன் முடிவா?''

''ஆமாம்.''

''நான் இத்தனை கேட்டும் நீ மறுக்கிறாய்.''

''நீங்கள் 'இத்தனை' கேட்கக் கூடாது!''

நம்பி பீரோவைத் திறந்து அவள் சங்கிலியையும் வளையலையும் எடுத்தான். ''இது நான் செய்து போட்டது'' என்று பாக்கெட்டில் போட்டுக் கொண்டான்.

''அது என்னுடையது. எனக்குத் தந்ததை எப்படி எடுக்கலாம்?''

''கொடுத்தவன் எடுக்கிறேன். என் சம்பாத்தியம். என் அன்பளிப்பு. அன்புக்கு இடமில்லாதபோது அன்பளிப்புக்கு இடமேயில்லை.''

அவன் விருட்டென்று நடந்தான்.

இரவு அவன் திரும்பி வந்து பெட்டியோடு புறப்பட்டான். அவன் ஊருக்குப் போகிறான் என்பதில் அவளுக்கு ஐயமில்லை. அவளிடம் அவன் சொல்லிக்கொள்ள வில்லை.

அடுத்து விமலாவும் தன் பெட்டியைத் தூக்கிக்கொண்டு மயிலாப்பூர் புறப்பட்டாள், வீட்டுச் சாவியை மேல் போர்ஷன்காரரிடம் தந்துவிட்டு.

அவர்களுக்குள் பிரிவு இப்படித்தான் ஏற்பட்டது.

அன்பின் மென்மணமும், ஆசையின் பெருமிதமும், சமத்துவத்தின் சங்கமமும் ஒருங்கிணைந்த இல்லத்தில் கரிய நிழல் ஆக்கிரமித்தது. பிளவு... அதன் மூலம் பிரிவு... சமத்துவத்துக்குப் பிடிவாதம் என்று பொருளோ? வீம்பு.. அதனால் ஏற்பட்ட நிராகரிப்பு... தான் என்ற இறுமாப்பு... யாரும் யாரையும் சந்திக்க விழையவில்லை. விட்டுக் கொடுப்பது, ஒருவருக்கொருவர் விழைவது எல்லாம் அர்த்தமற்றுப் போய், நீண்ட இடைவெளி ஏற்பட்டு விட்டது.

அவன் மந்தைவெளியில் இருந்தவாறே அலுவலகம் சென்று வந்தான். அவள் மயிலாப்பூரில் இருந்தவாறே அலுவலகம் சென்று வந்தாள். நாளடைவில் வருந்தி மன்னிப்புக் கேட்க அவசர உலகின் அலுப்புத்தான் காரணமாகியதோ என்னவோ?

தாயின் அநுசரணை இடிப்பாக மாற ஆரம்பித்ததும் விமலா விழித்துக் கொண்டாள். உடன் பிறந்தவனின் அநுதாபமும் இப்படித்தான் ஒருநாள் தன்னைக் கைவிட்டு விடும் என்பதையும் திடுக்கிடலோடு உணர்ந்து கொள்ளலாரம்பித்தாள். எனவே யாரிடமும் சொல்லாமல் நம்பியைப் பார்க்க அவன் அலுவலகம் சென்றாள். அவனிடம் எப்படிப் பணிவாகப் பேச வேண்டும், அவன் கோபத்தை எப்படிச் சாமர்த்தியமாக மாற்ற வேண்டும் என்று திட்டமிட்டுக் கொண்டே சென்றவள் இடிந்துவிட்டாள். நம்பி மாற்றலாகிப் போய் விட்டானாம்! இப்போது சிதம்பரத்தில் இருக்கிறானாம்! அதாவது அப்பா, அம்மாவுக்கு அருகில்...அவளை விட்டுத் தொலை தூரத்தில்!

அவளுக்குப் பாங்கில் பணம் ஏறலாயிற்று. ஆனால் அதெல்லாம் யாருக்கு? அன்னை அவசரமாக வாங்கிக் கொள்ளும் அஞ்சும், பத்தும் அண்ணன் அடிக்கடி பறித்துக் கொள்ளும் ஐம்பதும் நூறும் திரும்பப் போகின்றனவா. என்ன? அம்மாகூட அல்லவா அவள் பணத்தைத் தரும சொத்தாக எண்ணிச் செலவழிக்கத் துணிந்து விட்டாள்? அன்று அவள் சற்று விட்டுக் கொடுத்திருந்தால்...?

தன் சம்பாத்தியம் என்று பிடிவாதமாகப் பணம் தர மறுத்ததன் மூலம், தன் சகல சம்பத்தான தாம்பத்தியத்தை உதறிவிட்டாளே? அவளது துராக்கிருத நிராகரிப்பால் அவளிடம் சொல்லிக் கொள்ளாமல் கூட வெளியூர் போய்விட்டானே அவன்? இணைந்திருக்க வேண்டியவர்கள் வாழ்க்கையின் இரு கோணங்களாகி விட்டனரே? இதற்கு யார் பொறுப்பாளியானாலும் இதன் முடிவு?

ஆனால் அவன் மட்டுமா காரணம்? வேண்டுமென்றே அவள் வாழ்வை வீணடிக்க அவன் வேறிடம் செல்லலாமா? தவறு செய்தாலும் அதற்கு இத்தனை பெரிய தண்டனையா? அதைப் பொறுத்து அவளை ஒரு முறை அழைக்கத் தவறிய அவனை மன்னிக்க முடியுமா அவளால்? ஒரு பெண்ணின் வாழ்வை இப்படியும் ஓர் ஆடவன் கெடுக்கத் திட்டமிட்டால், அவனை ஏற்றுக் தொழுது வாழ அவளால் மட்டும் எப்படி முடியும்?

அவளது விவேகம் குன்றியது. மேலும் வீம்பு வளர்ந்தது. இளமை ஆசைகள் அவமான எரிப்பில் வெந்து ஆவேசம் காட்டின. அவருக்கு நான் தேவை யில்லையானால் எனக்கு மட்டும் அவர் வேண்டுமா என்ன? நானும் அவர் இல்லாமல் வாழ்ந்து விடுவேன். வாழ முடியும் என்று உறுதி செய்து கொண்டாள் அவள்.

மகனின் போக்கு, மருமகளின் பிரிவு இவை பற்றிக் கலங்கிக் கொண்டிருந்த நம்பியின் தாய் இருவரையும் சேர்த்து வைக்க முயற்சி செய்தாள்.

ஒருநாள் மாலை விமலா வீடு திரும்பியபோது மாமியாரைக் கண்டு வெறுத்தாள். பெற்ற அன்னையிடமே மகனைப் பற்றிக் கூறித் தூஷித்தாள். தான் அவனுடன் வாழத் தயாரில்லை எனச் சூளுரைத்தாள். இப்படிப்பட்டவனை இணைசேர்த்தோமே என்ற வருத்தத்துடனேயே அவள் ஊர் போய்ச் சேர்ந்தாள். அவள் திரும்பிப் போனபின் விமலா ஏனோ அழுதாள்!

'இப்போதாவது அவர் வந்தாரா? அவருக்கு எத்தனை கொடூர மனம்? இப்படி வதைப்பவருடன் எனக்கு வாழ்வா?' இப்படி எண்ணித் தன் அழுகையை மாற்றிக் கொண்டாள் அவள்.

தாய் கூறிய மொழிகள் நம்பியை மேலும் சினம் கொள்ள வைத்தன.

''அப்படியா சொன்னான்? உன்னை அவமதித்த அவனுடன் எனக்கேதம்மா வாழ்வு? அவள் கிடக்கிறாள்!''

''நம் குலம்? நம் குலம் தழைக்க வேண்டாமா?'' தாய் உருகினாள். ''நீ ஒரு முறை போனால் அவன் மனசு மாறும்!''

அவன் அவளை வந்து பார்த்தபோதோ அவள் தலையில் பூவில்லை, நெற்றியில் பொட்டில்லை... கழுத்தில்? நெஞ்சில் அவன் இல்லை என்பதன் நிரூபணமோ? அவன் தன் ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்தான்.

''நீங்கள் அலட்சியப்படுத்தப் படுத்த உங்கள் காலில் விழும் அந்தக் காலப் பெண்ணல்ல நான். உங்களுடன் வாழவில்லை என்னும்போது நான் எந்தச் சின்னத்தையும் சுமக்க வேண்டாமே... எங்கோ நீங்கள் சுகமாக இருக்க நான் ஏன் காத்திருக்க வேண்டும்? இனி உங்களுடன் வாழ்வது என்பது கானல் நீரான விஷயம்...''

விமலாவின் தாய் குறுக்கிட்டாள்: ''ஏ. விமலா! ஆயிரம் காலத்துப் பயிரை அழிச்சுடாதேடி!''

''அதை எப்போதோ இவர் அழிச்சுட்டார் அம்மா! இப்போதான் உன் கண்ணுக்குத் தெரியறதா?''


அப்புறம் அவள் கேள்விப்பட்டாள் நம்பி மற்றொரு பெண்ணை மணந்ததை... இரு குழந்தைகளுக்குத் தகப்பன் ஆனதை.

விமலாவின் தலையில் நரை விழுந்தாயிற்று.

அவளுக்குப் பாங்கில் பணம் ஏறிக் கொண்டேயிருந்தது. எனவே அவள் அண்ணி எப்போதும் அவசரமாக வாங்கிக்கொள்ளும் அஞ்சு பத்துக்குப் பதில் இருபது முப்பதாக வாங்க ஆரம்பித்தாள். அவள் சகோதரன் அவளிடம் 'கடனாக'ப் பணம் வாங்கித் தன் பெயரில் ஒரு பிளாட்டும் வாங்கிப் போட்டு விட்டான். வீடு கட்டுவதற்குக் கூட அவளைத்தான் எதிர்பார்த்திருப்பதாக ஜாடை மாடையாக வேறு கூறிக் கொண்டிருந்தான். அம்மா ஏழு கஜம் புடவையில் மினுமினுத்தவாறே, கோயில் கும்பாபிஷேகம் என்று போய் வந்து கொண்டிருந்தாள். இத்தனை பேருடைய நன்றியில் சற்றும் நனையாமல், தன் தனித்துவம் இம்மியும் மாறாமல் கோணலாகிவிட்ட ஒற்றையடிப் பாதையில் நடந்து கொண்டிருந்தாள் அவள்.

அதோ பஸ் ஸ்டாண்டில் ஃபிளாஸ்டிக் கூடையும், டிஃபன் பாக்ஸும், ஃபெமினா பத்திரிகையுமாக நிற்கிறாள் விமலா. அவளோடு கூட நளினி நிற்கிறாள், பூமா நிற்கிறாள், ரங்கா நிற்கிறாள். அவர்கள் மனத்துள் ஓர் ஏக்கம் உண்டு. ஓர் ஆடவனின் வாழ்வில் பங்கேற்கும் பாக்கியத்துக்காக அல்லும் பகலும் கனவு கண்டு பிரார்த்திப்பவர்கள்!

விமலாவின் மனத்தில் அந்த எண்ண அலைகள் நரைத்து விட்டன.



☐ பம்பாயில் 57 ஆண்டுகளுக்குமுன் ஜான் வார்டோ மில்னே என்ற ஆங்கிலேயரும் ஸ்ரீ ஆர். பி. மஸானியும் சேர்ந்து அநாதைக் குழந்தைகளையும் அநாதரவாக விடப்பட்ட குழந்தைகளையும் பராமரிக்க ''பைராம்ஜி ஜீஜீபாய் இல்லம்'' என்பதாக ஒரு விடுதி நிறுவினார். ஸ்தாபகர்களில் ஒருவரான ஸர் ஜான் வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பின் இந்தியாவை விட்டு 1919ல் தமது தாய்நாடான இங்கிலாந்து திரும்பினார். இடையில் 1939ல் ஸர் ஜான் இந்தியாவுக்கு ஒரு தடவை வந்தார். அதற்குப் பின் அவருடன் தொடர்பே இருக்கவில்லை. அதனால் என்ன? ஸர் ஜான் தமது ஆயுள் முழுதும் நினைவு வைத்திருந்து தமது உயிலில் இந்த இல்லத்துக்கு 14,594 பவுண்டு அதாவது ரூ. ரூ. 2,62,463.26 எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறார் என்ற செய்தி விடுதி நிர்வாகிகளுக்குத் தெரிய வந்திருக்கிறது.

இதுவரை இந்த விடுதி 2839 சிறுவர்களையும் 779 பெண்களையும் பராமரித்து, கல்வி புகட்டி, வாழ்க்கையில் நிலைநிறுத்தி யிருக்கிறது. தற்சமயம் 64 சிறுவர்களையும் 66 பெண்களையும் இல்லம் பராமரித்து வருகிறது. ஆண்டுதோறும் 1.97 லட்ச ரூபாய் செலவாகிறது. மொத்த வருமானம் 1.70 லட்ச ரூபாய்.



இந்தச் சந்தர்ப்பத்தில் ஸர் ஜானின் உதவி எவ்வளவு வரவேற்கத் தக்கதாக இருந்திருக்கும் என்று சொல்லத் தேவையில்லை!

☐ பம்பாய்க்கு அண்மையில் உள்ள காட்கோபரில் ஒரு டாக்டர் தமது ஃபிளாட்டில் விடியற்காலை நேரம் கடகடவென்று ஏதோ சத்தம் கேட்கவே பயந்து போலீஸை வரவழைத்தார். பின்னர் தீயணைப்புப் படையினரையும் வரவழைத்தார். இவ்வளவுக்கும் காரணம் ஒரு பூனை தனது கழுத்தில் ஒரு பால் குவளையை மாட்டிக் கொண்டு விட்டதுதான். அதைக் கழற்ற அது எடுத்துக்கொண்ட பிரயாசைதான் இவ்வளவு பெரும் படையைத் திரட்டி விட்டது!

☐ டாக்கா நகரில் இரண்டு ரிக்ஷாக்காரர்கள் பின் வருமாறு பேசிக் கொண்டார்களாம்.



முதல் ரிக்ஷாக்காரன்: தம்பி! நம்ம தலைவர்கள் நாம் தினமும் உழைத்துப் பாடுபட்டால் தங்க வங்கத்தைக் காண முடியும் என்று சொல்கிறார்களே?

இரண்டாவது ரிக்ஷாக்காரன்: ஆமாம். உண்மையாகப் பாடுபட்டால்தான் தங்க வங்கம் ஏற்பட முடியும் என்பதால் அப்படிச் சொல்கிறார்கள்.

மு. ரிக்ஷா: எனக்கு என்னமோ தங்க வங்கம் இன்றே ஏற்பட்டுவிட்டாற்போல் தோன்றுகிறது!

இ. ரிக்ஷா: அது எப்படி?

மு. ரிக்ஷா: சாதாரணப் பொருள்களின் விலைவாசியைப் பார்த்தால் தங்கம் விற்கிற விலையாக அல்லவா இருக்கிறது?

தொகுப்பு: எஸ். வி. எஸ்.

அவள் அழுதாள்

ஶ்ரீவத்ஸன்

ஸ்டேட் பஸ் புறப்படப் போகிறது.

''நீங்கள் ஏறிங்கோ'' என்றேன்.

அவர் ஏறிக்கொண்டார்.

ஜன்னல் வழியாய்க் கையை நீட்டி என் கைகளைப் பிடித்தபடி சொன்னார்:

''ரொம்பச் சிரமம் கொடுத்து விட்டேன், இந்தப் பன்னிரண்டு நாட்களாய். என்னன்னே தெரியவில்லை. வார்த்தை வரமாட்டேங்கிறது. நான்கு மணி நேரம் ஒரு நிமிடம் கூட நிறுத்தாமப் பிரவசனம் செய்யும் எனக்கு இப்போ ஒரு வார்த்தை கூட எழும்பவில்லே.''

''பெரியவாள் இப்படி யெல்லாம் சொல்லக்கூடாது.''

அவர் கண்களில் நீர் துளித்தது. எனக்கும் அப்படியே.

வீடு திரும்பினேன். எதையோ இழந்தது போல் இருந்தது. வீட்டுக்குள் நுழைந்தேன். மனைவி கேட்டாள்:

''பாகவதர் போய்விட்டாரா?''

''இப்போதுதான் பஸ் போயிற்று. அவரைப் பிரிந்த இருக்கிறது, மனத்தை என்னவோ செய்கிறது.''

''ஏன், நீங்களும் கூடப் போவதுதானே?''

''அதெப்படி, ஆபீஸ் இல்லையா தா?''

''ஓகோ! அதுகூட நினைவிருக்கா? பாகவதர் கிட்டே பெட்டி பத்திரம்னு சொன்னேளா?''

''சொன்னேன். கண்டக்டரிடமும் சொன்னேன்.''

''சுத்த அல்பம்.''

''என்ன காயத்ரீ! பெரியவாளை இப்படிச் சொல்லலாமா?''

''பெரியவா அப்படி இருக்கலாமா?''

''என்ன செய்தார் அவர்?''

''நேத்து ராத்திரி ருக்மிணி கல்யாணம் நடந்ததே. பிரவசனம் கேட்க வந்தவர்கள் எல்லாம் ஓதிவிட்டாளே புடவை, வேஷ்டி, ரவிக்கை எல்லாம்...''

''ஆமாம். அவர் எதையும் கொடு என்று கேட்கவில்லே. அவருடைய வித்வத்துக்கு இஷ்டப்பட்டுச் செய்தார்கள்.''

''எல்லாவற்றையும் நீங்கள் பேப்பரில் குறிச்சேள். மொத்தம் எவ்வளவு இருந்தது?''

''மூன்று ஜோடி வேஷ்டி, நான்கு அங்கவஸ்திரம், இரண்டு ஒன்பது கஜ புடவை, இருபத்தி எட்டு ரவிக்கைத் துண்டு...''

''இன்னிக்குக் காலையிலே கணக்குப்படி எல்லாவற்றையும் அவரிடம் ஒப்படைச்சேளா?''

''ஆமாம்.''

''இல்லே, நானும்தான் கேட்கிறேன். இந்தப் பன்னிரண்டு நாட்களாய் நான் அவருக்கு எல்லாவித சௌகரியங்களையும் செய்யவில்லையா ?''

''செய்தாய்.''

''எனக்கு ஒரு மாதமாய் உடம்பு சரியில்லே. ஆனாலும் இந்தப் பன்னிரண்டு நாட்களும் விடியற்காலம் எழுந்து ஸ்நானம் செய்து, அவருக்குக் கணபதி ஹோமம், மத்த பூஜைகளுக்கு வேண்டியவைகளைத் தயார் செய்து கொடுத்துப் பன்னிரண்டு மணிக்கு கறிகுழியாய் வடை பாயசத்துடன் சமைத்துப் போட்டேன். ராத்திரி பத்து மணிக்கு வரும் போது சூடா பலகாரம் செய்து போட்டேன். பால் காய்ச்சிக் கொடுத்து அதன்பின் உள் அலம்பி, படுக்கும்போது பன்னிரண்டு ஆச்சு. மறுபடியும் விடியற்காலம் நாலு மணிக்கு எழுந்து செய்தேன்.''

''எனக்குத் தெரியாதா காயத்ரீ. உடம்பு சரியில்லாதபோதும் வெகு நன்றாய், ஆசாரமாய் எல்லாம் செய்தாய்.''

''தினமும் வக்கணையாய் 'தான தருமம்; நமக்கு என்று எதையும் வச்சுக்கக் கூடாது; எல்லாவற்றையும் 'கிருஷ்ணார்ப்பணம்' என்று சொல்லி மத்தவாளுக்குக் கொடுக்கணும்'னு சொன்னாரில்லையா?''

''ஆமாம். அதற்காக இந்தப் பிரவசன ஸீரியலுக்கு ரூபாய் ஐந்நூறு வந்ததே, அதிலே பங்கு கேட்கிறாயா? அப்படீன்னா நீ செய்த வேலைகளுக்குக் கூலி கேட்கிறாய். அவ்வளவுதானே ?''

''புரியாமல் பேசாதீர்கள். எனக்கு ஒன்றும் அப்படிக் கேட்க மூளை இன்னும் கெடவில்லே.''

''பின்னே என்ன?''

''இருபத்தெட்டு ரவிக்கைத் துண்டுகளையும் மடிச்சு மடிச்சுப் பெட்டி கொள்ளாமல் வைத்துக்கொண்டு பெட்டி மூட முடியாமல், அதன் பேரில் அவர் உட்கார்ந்து பூட்டினாரில்லையா?''

''ஆமாம்.''

''அவர் மனைவியா இவ்வளவு ரவிக்கைகளையும் போட்டுக் கொள்ளப் போகிறாள்? ஒரே ஒரு ரவிக்கைத் துண்டை எடுத்து 'இந்தா, காயத்ரீ' என்று கொடுக்க மனம் வரவில்லே. இதுக்குப் பேருதான் 'அல்பம்'. புரிஞ்சுதா?''

என் தலையைச் சுற்றியது.

''ஏன் பதில் காணோம்? இப்படி அவருக்கு இந்தப் பன்னிரண்டு நாட்களும் செய்த சுச்ருஷைக்கு அவர் ஒரு நன்றி விசுவாசம் காட்டக் கூடாதா?''

அவள் கேட்டதில் தவறு இல்லேதான்.

''ஏன் காயத்ரீ! 'கர்மாவைச் செய். பலனை எதிர்பாராதே' என்று கீதையைப் பற்றிச் சொன்னாரே, மறந்து விட்டாயா?''

''கிருஷ்ண பரமாத்மாவுக்கு என்ன? நம்ம மாதிரி நடுத்தரக் குடும்பக்காராளுக்குன்னு தெரியும் பலனுக்காகவே கர்மாவைச் செய்கிறோம் என்பது.''

நான் மொட்டை மாடிக்குப் போய்விட்டேன். மாடியில் ஈஸிச்சேரில் படுத்தபடி இருந்தேன். நல்ல நிலா. சுகமான காற்று.

யோசிக்கலானேன். காயத்ரி சொன்னதில் என்ன தவறு?

ஒரு மாதம் முன்பு, பாண்டிச்சேரிக்கு ஒரு வேலையாகப் போனேன். அங்கு ஒரு கோவி லில் ஒருவர் பிரவசனம் செய்து கொண்டிருந் தார். நல்ல சக்திவாய்ந்த மைக் வழியாய்க் கேட்டது: '' 'ஆதிமூலமேன்னு கூப்பிட்டதும், ஓடிவந்தாயாமே. நிஜமா'ன்னு கேட்டாராம், பட்டத்ரி, குருவாயூரப்பனைப் பார்த்து. ஸ்வாமி 'ஆமா'ன்னு . தலையை ஆட்டினு ராம். குருவாயூரப்பன் இந்தக் கலியிலே' பிரத்தியட்ச தெய்வம்.''

மெய் சிலிர்த்தேன்.

அவ்வளவுதான். உடனே ஓடினேன், பிர வசனம் செய்யும் இடத்துக்கு. அறிமுகம் ஏற்பட்டது. அதன் பின் நடந்த ஒரு வார பிரவசனத்துக்கும் தினம் இரவு ஏழு மணிக்குக் கடலூரில் புறப்பட்டுப் பிரவசனம் கேட்டு விட்டு விடியற்காலை திரும்புவேன். தினமும் அரை மணி அவரிடம் பேசிவிட்டு வருவேன்.


என்னையும் அறியாமல் அந்தப் பிரவசன பௌராணிகரிடம் ஒருவித ஈடுபாடு உண்டா யிற்று.

அவரைக் கடலூரில் பாகவதம் – நாராய ணீயம் ஒரு நவாகம் செய்ய ஏற்பாடு செய் தேன். நண்பர்கள் உதவியுடன் செய்யலா னேன். அவர் என் வீட்டிலேயே தங்க ஏற் பாடு செய்தேன்.

முதல் நாள் அவ்வளவு கூட்டமில்லை. இரண்டாம் நாள் மைக்கில் குருவாயூரப் பன் ஸ்தோத்திரத்தைக் கணீரென்று சொல்லி ''நாராயண'', ''நாராயண'' என மோகன ராக சாயலில் பதினறு தடவை சொன்ன போது ஆயர்பாடியில் கண்ணனின் குழல் ஓசை கேட்டுக் கோபிகள் ஓடி வந்ததுபோல் வந்து குவிந்தார்கள்.

கடைசி நாள் ருக்மிணி கல்யாணம்.

எல்லோரும் சக்திக்கு மீறிச் செய்தார்கள்.



என் மனைவி இந்தப் பன்னிரண்டு நாளும் ஓடி ஆடி ஆசாரமாய் எல்லாம் செய்தாள். அவரும் மிகவும் சந்தோஷப்பட்டார். —

அப்படிப்பட்டவரிடம் என் மனைவி காசு பணத்தை எதிர்பார்க்கவில்லை. இருபத்து எட்டு ரவிக்கைத் துண்டுகளைப் பெட்டியில் அடுக்கி வைத்துக்கொண்டவர், ஒரே ஒரு ரவிக்கைத் துண்டைக் கொடுக்கவில்லையே ஏன்?

மனைவி சொல்லியது சரியெனப் பட்டது. ஒருவேளை அவர் கஞ்சப் பிரபுவோ?

ஒரு மாத காலம் ஓடியது. அன்று லீவுநாள்.

''ஸார், தபால்!'' என்று தபால்காரர் கொடுத்துப் போனார். என் மனைவி, ''யார் எழுதியிருக்கான்?'' என்று கேட்டு வந்தாள்.

''நம் பௌராணிகர். படிக்கிறேன், கேள்.

குருவாயூர்,
16-4-72

அன்புள்ள ஸ்ரீமான்... அவர்களுக்கு,

ஸ்ரீ குருவாயூரப்பன் சகல நன்மையையும் அளிப்பாராக. இங்கு ஒரு வாரமாய் என் பிரவசனம் முடிந்து ஊர் திரும்புகிறேன்.

நான் அங்கு வந்து தங்கியிருந்தபோது தாங்களும், தங்கள் மனைவியும் காட்டிய அன்பு என்னை நெகிழச் செய்தது. இன்று நான் தங்கியிருந்த ஜாகையில், உங்கள் குடும்ப க்ஷேமத்துக்கும் வம்ச விருத்திக்கும் விசேஷஹோமம், சாந்தி செய்தேன்.

கலியுக தெய்வம் ஸ்ரீ குருவாயூரப்பன் சன்னதியில் பிரார்த்தித்துக் கொண்டேன்:

''குருவாயூரப்பா, கடலூரில் என் ஆப்தான் ஒருவர், அவர் மனைவி இருவரும் இருக்கிறார்கள். அவாளுக்குத் திருமணம் ஆகிப் பத்தாண்டு ஆகியும் குழந்தைப் பேறு இல்லை. நீதான் கருணை செய்ய வேண்டும். தங்கத் தொட்டில் நான் செய்து போடுகிறேன். அவா க்ஷேமமாய் இருக்கணும். கணவனும் மனைவியுமாய்க் குழந்தையுடன் உன் சன்னதிக்கு வரணும். குஞ்சுக் கைகள் உன் உண்டியலுக்குக் காணிக்கை செலுத்தணும்.''

கூடிய விரைவில் என் கோபாலன் கருணை காட்டுவான்.

ஒரே ஒரு தவறு செய்ய இருந்தேன்.

நல்ல வேளை பிழைத்தேன்.

முன்பு அங்கு பிரவசனம் செய்துவிட்டுப் புறப்படும்போது தங்கள் மனைவிக்கு எனக்கு ஓதியிட்டதில் கிடைத்த பட்டுப் புடவை, ரவிக்கையைக் கொடுக்க எண்ணினேன்.

கீதையின் வாக்கு ''கர்மாவைச் செய்; பலனைக் கருதாதே'' என்பதை அப்படியே கடைப்பிடித்து வரும் தங்கள் இருவரையும் என் செய்கையால் புண்படுத்தி விடக்கூடாதே என்று இருந்து விட்டேன். குருவாயூரப்பன் சன்னதியில் உங்கள் குலம் தழைக்க ஒரு புத்திர ஸந்தானம் கொடுக்கும்படி பிரார்த்திப்பதே சரி என்று முடிவு செய்தேன். அவர் நிச்சயம் அருள் செய்வார். ....''

என் மனைவி அழுதே விட்டாள்.

''என் சொந்த அப்பா கூட இப்படி மனம் உருக வேண்டியிருப்பாரா என்பது சந்தேகம். அவர் திருவடிக்கு நான் செய்த சேவை வீண் போகவில்லை. எனக்குக் குழந்தை பிறக்க அவர் தங்கத் தொட்டில் செய்து போடப் போவதைக் கேட்டுச் சிலிர்க்கிறேன்.''

நானும் அழுதுவிட்டேன்.

அவர் பௌராணிகர்தானா? இல்லை, குருவாயூரப்பனே மனித உருவில் வந்தாரா?

படித்துப்பாருங்கள்

சர்தார் படேல் - கடிதப் போக்குவரத்து

காலஞ்சென்ற சர்தார் வல்லபபாய் படேலுடன் நடந்த கடிதப் போக்குவரத்தைத் தொகுத்துப் பத்து புத்தகங்களாக வெளியிட நவஜீவன் அச்சகம் முன்வந்துள்ளது. ஸ்ரீ துர்க்காதாஸ் ஆசிரியர் பொறுப்பேற்றுக் கடிதங்களைத் திறம்படத் தொகுத்துத் தந்திருக்கிறார். முன்னால் ஆசிரியரின் குறிப்புகளும், பின்னால் அநுபந்தங்களும் உள்ளன. இதனால் கடிதங்கள் எழுதப்பட்ட சூழ்நிலைகளை உணர்ந்து தெளிந்து படிக்க முடிகிறது. ஸர்தாரின் வாழ்க்கைக் குறிப்புக்களுடன் சிறப்பான முறையில் இதுவரை இரு பாகங்கள் அச்சாகி வெளிவந்துள்ளன.


முதல் பாகத்தில் 1946 முதல் 1950வரை உள்ள காலகட்டத்தில் எழுதப்பட்ட கடிதங்கள் இடம் பெற்றுள்ளன. காஷ்மீர் விவகாரம், அதன் நீண்ட கால பின் விளைவுகள், அதனால் நாட்டுக்கு ஏற்பட்டு வரும் கஷ்ட நஷ்டங்கள் இவற்றை ஆராய முற்படுவோருக்கு இந்த நூல் மிகவும் பயன்படும். பல உண்மைகளை வெட்ட வெளிச்சமாக்கித் தவிர்த்திருக்கக்கூடிய தவறுகளை உணர்த்தும். படேல், நேரு. என். கோபாலசாமி அய்யங்கார், காஷ்மீர் மகாராஜா, மகாராணி, யுவராஜா ஆகியோருக்கிடையே நடந்த கடிதப் போக்குவரத்துக்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இரண்டாம் பாகம் சமீப காலத்திய தமிழகச் சரித்திரத்தை ஆராய்வோருக்குப் பயனும் ரசனையும் தரும் நூலாகும். 1945, 46ஆம் ஆண்டுகளில் இந்திய சட்ட மன்றத்துக்கும் ராஜ்ய சட்டசபைகளுக்கும் தேர்தல்கள் நடந்ததை யொட்டி ஏற்பட்ட கடிதப் போக்குவரத்துக்கள் இதில் அடங்கியுள்ளன. ராஜாஜி வேண்டும், ராஜாஜி வேண்டாம் பிரிவுகளாகத் தமிழ் நாடு காங்கிரஸ் பிளவு பட்ட சமயம் எழுதப்பட்ட கடிதங்கள் அச்சமயம் எத்தகைய ஒரு கொடிய நோய் இங்கு பரவியிருந்தது என்பதை எடுத்துக் காட்டுவனவாய் உள்ளன.

முக்கிய சரித்திர நிகழ்ச்சிகளின் பின்னணிகள், தலைவர்களின் மனப் போக்குகள் ஆகியவற்றை அறிய முடிவதுடன் சர்தார் படேலின் குண விசேஷங்களைச் சிறப்பாக உணர முடிகிறது இந்தக் கடிதங்களைப் படிக்கும்போது.

Sardar Patel's Correspondence Vol. I & II
கிடைக்குமிடம்: நவஜீவன் பப்ளிஷிங் ஹவுஸ், அகமதாபாத். விலை ஒவ்வொன்றும் ரூ. 25.

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31.
Managing Editor: T. Sadasivam


ANNOUNCING!
The sale of
BLENDED AND FANCY FABRICS
made by mixing cotton and
GRASIM STAPLE FIBRE
from to-day at
AKASH-DEEP, SANDHURST BRIDGE, CHOWPATTY
• Attractive Fancy Dress material for ladies
• Immaculate Bush Shirtings for gents
• Decorative Tapestry and Curtain materials
• Priced cheaper than cotton fabrics
GWALIOR RAYON SILK MFG. (WVG.) CO. LTD., BIRLAGRAM, NAGDA (M.P.)

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)